தொழில் அரங்கு

ஆசிரியர்: வித்துவான் க. பெரியசாமி.

மலர் - 1 | அக்டோபர்-66 | இதழ்-2

தொழில் பெரியார்:

தொழில் மேதை G.D. நாயுடு



விலை [illegible]5 காசு

Industrial Magazine Monthly

தொழில் அரங்கு

தொழிலியல் மாத இதழ்

இவ்விதழின் வளர்ச்சிக்காகவும், திறம்பட செயல்படுவதற்காகவும், அனைவருக்கும் பயன் விளைவிக்கவும் கீழ்க்கண்ட பெருமக்கள் ஆலோசனையும் தொடர்ந்து எழுதவும் இசைந்துள்ளார்கள்:—

உயர்திருவாளர்கள்:

G. R. தாமோதரனர், B. Sc. (Elec), B. Sc. (Mech) (Durham)
MIEE (Lond), MINE (Lond) MIE (India)
Principal, P. S. G. பொறியியல் கல்லூரி, கோவை

A. பெசண்ட் கிரிப்பர்ராஜ், M. A (தத்துவம்)
M. A. (உளவியல்) M. B. A.
தொழில் நிர்வாக இயல் பேராசிரியர், P. S. G. பொறியியல் கல்லூரி, கோவை

டாக்டர் **K. மீனட்சிசுந்தரம்,** M. A., M. Litt., Ph. D.,
தலைமைப் பேராசிரியர், அரசினர் கலைக் கல்லூரி, கோவை

ஜெயா மீனட்சிசுந்தரம், ஞானமணி பண்ணை, கோவை

Prof. **P. R. M. பிள்ளை,** M. A.,
Formerly Attached to Ministry of Culture,
U. S. S. R. Moscow

புலவர் ப. உருத்திரமணி, M. A.,
துணைப் பேராசிரியர், அரசினர் கலைக் கல்லூரி, கோவை

B. முருகன், M. A., Principal, புஷ்பம் கல்லூரி, பூண்டி (தஞ்சாவூர்)

மற்றும் பல தொழில் அறிஞர்கள், தொழிலியல் பேராசிரியர்கள், தொழில் அதிபர்கள், அரசாங்கப் பணியிலுள்ள அதிகாரிகள் முதலிய பெருமக்கள் இசைவு தந்தமைக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

வித்வான் க. பெரியசாமி,
ஆசிரியர்.

தொழில் அரங்கு

தொழிலியல் மாத இதழ்

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனே செய்வோம்"

THOZHIL ARANGU
Industrial Magazine
Monthly

EDITOR & PUBLISHER
Vidwan K. PERIASAMI

மலர் 1 இதழ் 2

October 1966
பராபவ ஸு புரட்டாசி மீ

✣

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
வித்துவான் க. பெரியசாமி

✣

ஆசிரியர் அலுவலகம்:
322, ராச வீதி, கோயமுத்தூர்-1
போன் செய்ய: 4286

தனி இதழ் 0-75 காசு
ஆண்டு சந்தா ரூ. 9-00

பொருளடக்கம்

மாணவர்களின் வாழ்வும், வளமும்

ஆசிரியர் பகுதி

தொழில் மேதை திரு. ஜி. டி. நாயுடு

தொழில் நுட்பக் கல்வியில் தமிழக சாதனே

பங்கு மாற்றகம்

டச்சுவில் { பாரதச் சிலேகள் / சதுரங்க விளேயாட்டு

அச்சு எழுத்தாளர் மாநாட்டின் செய்திகள்

லேசென்ஸ் இல்லா தொழில்கள்

தொழில் புரட்சியும், இயந்திர மூளேகளும்

மற்றும் பல அறிவூட்டும் செய்திகள்

கட்டுரையாளர்களின் கருத்துக்கள் எல்லாம் ஆசிரியரின் கருத்தாகா.

தொழில் மேதை

G. D. நாயுடு

வையகம் வியக்கும் விந்தை மனிதர்

ஆம்! முரண்பாடுகள் பலவற்றின் கூட்டுத் தொகையாகவும், புதுமைகள் பலவற்றின் பெருக்குத் தொகையாகவும் விளங்குபவர், விந்தை மனிதர்களே! தொடக்கப் பள்ளியில் மூன்றுண்டுகள் மட்டுமே பயின்றவர்; இன்றோ பெரும் பெரும் விஞ்ஞானிகள் போற்றும் அறிவியல் மேதையாகத் திகழ்பவர்! தமிழ் இலக்கியங்கள் பலவும் தாமே கற்றவர்; தமிழ் நூல்கள் பலவும் இன்றைத் தமிழர்க்கு உதவாதவை என்று வெறுப்பவர்!

ஆனல் பாரதிக்குச் சிறப்பான முறையில் விழாவினைக் கண்டவர்! தமிழகப் புலவர் குழுவுக்குப் பெருமையுடன் பாராட்டைச் செய்தவர்! செல்வச் செழிப்புடையவர்; எனினும் எளிய வாழ்வும் கோலமும் உடையவர்! கடமையில் கெடுபிடி செலுத்துபவர்; ஆனல் தொழிலாளர்க்கு வேண்டுவன வேண்டுங்காலத்து உதவும் வள்ளல்! பணி செய்யும் வாய்ப்புக்களை இவருக்கு வழங்க மேலை நாட்டுத் தொழில் நிறுவனங்கள் பல முன்வந்தாலும், தமிழகத்தில் வாழ்ந்து தமிழ்நாட்டை உயர்த்துவதற்காகவே தம் வாழ்வையும், உழைப்பையும் வழங்கிக் கொண்டிருக்கும் பெருந்தகையாளர்! நுட்பங்கள் பலவும் கற்றுணர்ந்த வித்தகர்; ஆனலும் இன்னும் கற்கின்ற ஆர்வமுள்ள மாணவர்!

இவர் கண்ட புதுமைகளில் எவற்றைச் சொல்வது? எவற்றை விடுப்பது? புதியன படைக்கும் ஆற்றலின் களஞ்சியமாக இவர் விளங்குகின்றார். மின்சாரச் சவரக் கத்தி விரைவாகவும், தூய்மையாகவும் முகத்தைத் திருத்திக் கொள்ள உதவும் வகையில் இவர் படைத்தமைகண்டு அறிவியலுக்கே தொட்டிலாக விளங்கிய ஜெர்மனி பரிசுகள் வழங்கிப் போற்றியது. பஸ்களின் அதிர்வை ஆராயும் இயந்திரம், பிளேடுகளை உற்பத்தி செய்யும் இயந்திரம், வாக்குகளைப் பதிவு செய்யும் இயந்திரம் முதலியன இவருடைய திறம் வாய்ந்த படைப்புகள். இயந்திரங்களைப் பழுதுபார்த்துச் செப்பம் செய்வதிலும் புதிய நுணுக்கம் அறியும் தேர்ச்சியுள்ளவர். "ஓர் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாற்றை எப்படிச் செம்மைப் படுத்துவது என்று சில சொற்களால் தெளிவு செய்தார் நாயுடு. அவருடைய பொன்னுன அறிவுரையால் 2000 டாலர்கள் காப்பாற்றப் பட்டன" என்று அமெரிக்கர் வியந்து புகழ்ந்தமைக்கு இத்தமிழர் காரணமெனின் இவருடைய அறிவுத் திறனை என்னென்றுரைப்பது!

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தாம் கூறும் திட்டங்களைச் செயற்படுத்தியும் காட்டியுள்ளார். தம்முடைய சொந்த தோட்டத்தில் பருத்திச் செடிகளும், சோளப் பயிர்களும் வேகமாக வளர்ந்து, நிறைந்த விளைச்சலைத் தருவதைப் பலருக்கும் காட்டிவிளக்கியுள்ளார். பலவகைகளிலும் பல புதுமைகளைச் செய்துள்ளார். ஆரஞ்சுப்பழத்தை இனிப்பிலிருந்து கசப்பிற்கும், புளிப்பிலிருந்து இனிப்பிற்கும் மாற்றியுள்ளார். சில ரசாயன திரவங்களை செடியின் தண்டிலும், பழத்திலும் ஊசியின் மூலம் செலுத்துகிறுர். இதுபோல வாழைப் பழங்களை நல்ல இனிப்புள்ளனவாக மாற்றுகிறுர். எத்துறையில் முயற்சி எடுத்துக் கொண்டாலும் அனைவரும் வியக்கத் தக்க வகையில் இவர் அரிய சாதனைகளை ஏற்படுத்துகின்றுர்.

அறிவியல் துறைகளில் மேனுடுகளை நாம் விரைவில் எட்டிப் பிடிக்க முடியும் என்று செயலில் காட்டி வருகின்றுர். பொறியியல் கல்வி நான்காண்டுகள், ஐந்தாண்டுகள் படிக்க வேண்டியதில்லை என்றும், ஓராண்டிலேயே

திறம் வாய்ந்த வல்லுநராகப் பயிற்சி பெற முடியும் என்றும், கூறுகிறார். அதேபோல மாணவர்களைப் பயிற்றுவித்தும் வருகிறார்.

கோடை விடுமுறை நாட்களில் இவர் தரும் குறுகியகாலப் பயிற்சி மிகவும் பயன் நிறைந்ததாகும். வெளி மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து பயில்கிறார்கள். இவருடைய புதிய திட்டங்களையும், அறிவியல் நுட்பங்களையும் போற்றியுள்ளவர்களில் சர். சி. வி. இராமன், சர். எம். விஸ்வேஸ்வரையா, கேரளாவின் முன்னாள் கவர்னர் வி. வி. கிரி முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

நகரங்கள் பலவற்றிலும் பொருட்காட்சிகள் ஏராளமான செலவில் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஓரிரு திங்கள் கழிந்தபின் கலைக்கப்படுகின்றன. அவை கலைக்கப்படாமல் என்றென்றும் இடம் பெற்றால் பொதுமக்கள் அனைவரும் எளிதில் பல செய்திகளை அறியவும், கற்கவும் வாய்ப்பு ஏற்படும் என்பது இவருடைய அரிய அறிவுரை.

பலமுறை மேநாடுகளைச் சுற்றியுள்ள தாம் பலவும் கற்றுக்கொள்ள முடிந்ததே இத்தகைய பொருட்காட்சிகளால் தான் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தமிழகமெங்கும் நடைபெறும் பொருட்காட்சிகளில் இவருடைய தொழில்நுட்பக் கண்காட்சி இடம் பெருவதை அனைவரும் அறிவர். எந்த நாளிலும் யாரும் வந்து கண்டு மகிழும் முறையில் கோவையில் அக் காட்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளார். பல ஆண்டுகளாக இக்கண்காட்சியினைக் கண்டு பலரும் பயன்பெற்று வருகின்றனர்.

இவருடைய வாழ்க்கை முறையை அறியுங்கால் காந்தியடிகளின் நினைவுதான் வருகின்றது. 'மது, மாமிசம், மங்கை' ஆகிய ஆசைகளில் மனம் செல்லாத உறுதியான வரையறை வாழ்வை உடையவர். எளிய உடை உடுத்துபவர். எளிய உணவை உண்பவர். நம் நாடு உயர வேண்டும் என்ற தளராதபற்றுடையவர். துன்புறுவோரைக் கண்டு இரங்கும் உள்ளம் படைத்தவர். மக்களின் இன்னல்கள் நீங்கி இன்பம் நிலவத் தம் அறிவியல் உழைப்பு பயன்பட வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்.

பாம்பைக் கொல்லக் கூடாதென்று காந்தியடிகள் தம் ஆசிரமத்தில் இருந்தவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார் என்பதை நாம் அறிவோம். அதுபோலவே நாயுடு அவர்களும் தம்முடைய வேலையாட்கள் எங்கேனும் பாம்பைக் கண்டால் கொல்லக்கூடாதென்று கட்டளையிட்டுள்ளார். ஒருநாள் பாம்பொன்று நாயுடுவின் அலுவலகக் கட்டிடத்தில் புகுந்துவிட்டது. எப்பொழுதும் போலத் தொழிலாளிகள் மண் பானையைக் கொண்டுவந்து அதன் முன் வைத்தும் அதனுள் பாம்பு செல்லவில்லை. செய்தியை அறிந்த நாயுடு தாம் வரும் வரைக்கும் பாம்பை ஒன்றும் செய்யவேண்டாம் என்று அறிவித்தபின் அங்கு சென்றார். பிடிவாதம் பிடித்த பாம்பின் முன் பானையை வைக்கச் செய்தார். பாம்பும் பயத்தோடு பானைக்குள் புகுந்து கொண்டது.

சிறு வயதிலிருந்தே சுறுசுறுப்பும் பரபரப்பும் உடையவர். மேலும் மேலும் கற்கும் ஆர்வர் கொண்டவர். புதியன படைக்கும் ஆற்றலை வளர்ப்பவர். துன்புறும் வாழ்வு மறைந்து இன்புறும் வாழ்வு மலரும் வழி காணத் துடிப்பவர். இயந்திரங்களோடு ஒரு இயந்திரமாகத் தாமும் மாறிவிடாத இரக்கமுள்ள நெஞ்சினர்.

அக மகிழ்ந்து, முகமலர்ந்து விருந்தோம்பும் பண்பினர். கடமையில் கண்டிப்பானவர். வாழ்வில் வரையறை பேணுபவர் தளராத உறுதியும் கலங்காத மனமும் வாய்ந்தவர். கற்றவரும், கல்லாதவரும் போற்றிப் புகழுமாறு உழைப்பால் உயர்ந்த உத்தமர் இந்த விந்தை மனிதர்! என்று சிந்தை மகிழ்ந்து "வாழ்க வாழ்க நெடிதே! வாழ்க வாழ்க இனிதே! வாழ்க வாழ்க பெரிதே!" என்று வாயார வாழ்த்தி மனமாரப் போற்றுகின்றது 'தொழில் அரங்கு'

ஊக்கமும், உழைப்பும் உள்ள ஒருவர். எதிர் காலத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

உங்கள் கவனத்திற்கு.....

தொழில் நுட்ப கல்வியில் தமிழக சாதனை

"தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அவனுக்கொரு குணமுண்டு'' என்பர் தமிழ்க் கவிஞர். தமிழன் கூற்றுப் பொய்யாகாதென்பதை தமிழக அரசாங்கம் மெய்ப்பித்து வருகிறது. தொழில் நுட்பக் கல்வியில் தமிழகம் ஆற்றிய சாதனையை நம் தொழிலமைச்சர் புள்ளிவிவரத்தோடு பல சான்றுகளுடன் விளக்கி உள்ளனர்.

பங்கு மாற்றகம்
Stock Exchange

பேராசிரியர் திரு. அ. பெசன்ட் கிரிப்பர்ராஜ் அவர்கள் தத்துவம், உளவியலோடு, வாணிகத்திலும் பெரும்புலமை பெற்று இன்று P. S. G. பொறியியல் கல்லூரியில் தொழில் நிர்வாக இயல் பேராசிரியராக பணி ஆற்றி வருகிறார். அவர் பங்கு மாற்றகத்தைப் பற்றி தொடர்ந்து எழுத இசைந்துள்ளார். இவ்விதழில் பங்கு மாற்றகத்தின் அடிப்படை உண்மை என்ன என்பதைஎடுத்துக்கூறுகிறார்.

இயந்திர மூளைகள்

திரு. ப. குணசேகர் லைப் இன்ஸ்யூரன்ஸ் அலுவலகத்தில் பணி ஆற்றுபவர். அவர் விஞ்ஞானத்தைப் பற்றி எழுதிய புத்தகங்கள் அரசாங்க பரிசு பெற்றுள்ளன. அவர் மனிதன் மூளையினும் மகாசக்தி வாய்ந்த இயந்திர மூளையின் இயக்கம் பற்றியும், அதன் ஆற்றல்பற்றியும் விளக்குகிறார்.

திருவாளர்கள் :

G. R. தாமோதரனார் — தமிழ்ப் பணி

K. மீனாட்சிசுந்தரம் — டாக்டர் பட்டம் பெற்றமை

M. K. சாமி — மதிப்புரை

N. மகாலிங்கம் — பாலிடெக்னிக்கில் படத்திறப்பு.

தொழில் பெரியார்

திருவாளர் ஜி. டி. நாயுடு அவர்கள் தொழில் செய்தி புரட்சியினையும், சேவையினையும் பாராட்டும் வகையில், அன்னார் புகைப்படத்தோடு, வாழ்க்கைக் குறிப்பையும் கொடுத்துள்ளோம். அன்னாரது முயற்சியும், உழைப்பும்

அறிவும் மற்றவர் நல்வாழ்வுக்குத் தூண்டுகோலாக அமையும்.

பல்சுவைப் பகுதிகள்

அச்சு எழுத்துத் தயாரிப்பாளரின் மாநாட்டுச் செய்திகள், டச்சு மக்களின் தணியாத ஆர்வம், டச்சுவில் பாரதச் சிலைகள், கல்வி இயக்குநரின் கருத்துரைகள், சென்னையில் சர்வதேச வர்த்தகச் சந்தை, லைசன்சு கண்ட்ரோல் இல்லா தொழில்கள், நீதி மன்றம்.

நாட்டுக்குச் செய்யும் நற்பணிகள்

நாடு வளமும், நலமும் பெற இரண்டு பெரிய உண்மைகளை காலம்சென்ற சாஸ்திரியார் அவர்கள் நமக்குக் காட்டிச் சென்றார். அவர் காட்டிய உண்மை விளக்கமாக மறவர், உழவர் பற்றிய செய்திகள், நாட்டின் வளத்திற்கு உயிராக உள்ளது மழை. மழைக்குக் கருவாக உள்ளது காடு. அந்த காட்டின் இன்றியமையாத தன்மை பற்றிய செய்திகள்.

தொழிலாளர் நலன்

தொழிலாளர்கள், தொழில் அதிபரின் இரு கண்கள். கண் ஒளி கொடுப்பதுபோல் தொழில் ஒளி பெற தொழிலாளர்களின் உழைப்புதான் இன்றியமையாதது. தொழிலாளர்களின் உழைப்பும், ஒத்துழைப்பும் தொழிலதிபரின் கைகளை ஓங்கச் செய்கின்றன. இவர்கள் கை ஓங்குவதனுல் தொழிலாளர்களின் வாழ்வும் வளம் பெருகுகிறது. ஒத்துழைப்பினுல் உயர்வு, உயர்விஞல் வாழ்வு இவ்விரண்டு தத்துவங்கள் அடங்கிய அறிவுரைகளை டி. வி. எஸ். அதிபர் திரு. டி. எஸ். ராஜம் அவர்கள் தம் ஊழியர்களுக்கு ஆற்றிய அறிவுரைகளில் அடங்கி உள்ளன.

செய்வன

செய்வன திருந்தச்செய் என்பது நமது மூதுரை. அது போன்று தொழில் அரங்கும் மக்களுக்குப் பயன் தரும் வகையில் செய்திகளை, வாசகர்களுக்குத் தொடர்ந்துதரும். நீதிமன்றங்களில் தொழில் சம்பந்தமாக செய்யும் வழக்கின் முடிவுகளை வெளியிடவும், தொழில் பற்றிய சட்டங்களை வெளியிடவும் எண்ணியுள்ளோம். அன்றியும் தொழில் செய்வோர், தொழில் நிறுவனத்தார் ஆகியோரின் ஆலோசனையும் வெளியிடுகிறேம். இன்னும் புதுமையும் பயனுமுள்ள செய்திகளை இதழுக்கு இதழ் இனிது தர வல்லது தொழில் அரங்கு.

Statement about ownership and other particulars about Newspaper

THOZHIL ARANGU

(As required under Rule 8 of the Registration of Newspaper (Central) Rule, 1958)

FORM VI

(See Rule 8)

1. Place of publication	...	322, Raja Street, Coimbatore-1.
2. Perodicity of its publication	...	Monthly
3. Printer's Name	...	Thiruvenkatam Printer's
Address	–	322, Raja Strect, Coimbatore-1.
Nationality	...	Indian
4. Publisher's Name	...	Vidwan K. Periasami
Nationality	...	Indian
Address	–	322, Raja Street, Coimbatore-1
5. Editor's Name	...	Vidwan K. Periasami
Nationality	–	Indian
Address	...	322, Raja Street, Coimbatore
6. Name and address of individuals who own the news paper and partners or share holders holding more than one percent of the total capital.	}	Vidwan K. Periasami 322, Raja Street Coimbatore-1

I, VIDWAN K. PERIASAMI, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) VIDWAN K. PERIASAMI
Signature of Publisher.

7–10–1966.

மாணவர்களின் வாழ்வும், வளமும்

வட இந்தியாவிலும், ஆந்திராவிலும் மாணவர்களது வெறிச் செயல்களைப் பார்த்தோம். வெறிச் செயல்களால் விளைந்த விளைவுகளை அரசாங்கம் ரூபாய் கணக்கில் மதிப்பிட்டன. ஆனால் பிற்காலத்தில் விளையும் விளைவுகளை அதைப்போன்று மதிப்பிடவில்லையென்று எண்ணவேண்டிருக்கிறது. பழையன கழிதலும், புதியன புகுதலும் குற்றமல்ல, காலப்போக்கில் நல்லது விளைவிக்குமாயின். புதுமை தீயது விளைவிக்க முற்படின், பழமையைப் பொன்னே போல் நாம் போற்ற வேண்டியதுதான்.

பழைய முறை

இந்தியாவிலுள்ள அறிஞர் பெருமக்களின் ஆரம்பக் கல்வி இன்றைய நிலையில் அமையவில்லையென்பது அனைவரும் அறிவர். அடக்குமுறை, அடி, ஆடம்பரமற்ற இடம், இன்றைய வசதி அற்ற நிலை. இன்றைய நிலையை ஒப்பிடின், எத்துணையோ குறைபாடுகள். இந்நிலையில், பழங்கால கல்விமுறையில் படித்துப்பட்டம் பெற்று பாராளும் தலைவராக உள்ளார்கள். பெரும் நிலையிலிருந்து, பெரும் செயல்களைச் செய்துள்ளார்கள். அவர்கள் அயராது ஆற்றிய பணியால் எத்தனையோ ஆண்டுகள் மக்கள் நலம்பெற்று உய்யும் வகையினைக் காணலாம். மேற்கூறிய இலக்கணத்திற்கு இலக்கியமாக உள்ளவர்கள் இன்றும் உள்ளார்கள். என்றும் தம் பெயர் நிலைத்து நிற்கும்படி செய்துவிட்டு மறைந்தவர்களும் பலர். நான் யாரையும் தனித்துச் சுட்டிக் கூற விரும்பவில்லை. காரணம் கற்பிக்க முற்படுவார்கள். சுயநலத்திற்காகவும் என்றும் சிலர் நினைக்கக் கூடும்.

பதினைந்து ஆண்டுகாலம் ஆசிரியப்பணியிலிருந்தவன். ஆரம்ப நிலையிலிருந்து கல்லூரிப் படிப்புவரையிலுள்ள மாணாக்கர்களோடு பழகியவன். ''நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்'' என்று பாரதியார் பழங்கால மக்களின் கோழைத் தன்மையைக் கண்டு நெஞ்சம் கொதித்தார். இன்று அவர் உயிரோடிருப்பின் எதிர்கால சிற்பிகள் என்று போற்றப்படும், நம் மாணவப் பெருமக்களின் நிலையைக் காணின் இரத்தக் கண்ணீர் வடிப்பார். நெஞ்சம் வெடிக்க உயிர்துறப்பார்.

அந்நியர் ஆண்ட போதும்கூட மாணவர்களது பணி ஆக்கப் பணியாக இருந்தது. இன்று உரிமையோடு தலை நிமிர்ந்து நடக்கும்படி நமது பெருமக்கள் செய்தனர். நல்லது செய்ய இந்நாட்டு குடிமகன் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இந்த உரிமைபெற்ற இந்தியாவில் மாணவர்களது பணி, முன்னினும் கடுமையானது. அரசாங்கத்தின் ஒவ்வொரு அணுவின் அழிவுக்கும், ஆக்கத்திற்கும் உரிமையுடையவர்கள். இந்த உரிமை மாணவர்கள் உள்ளத்தில் இடம்பெற வில்லை. நமது வீட்டைக்கட்ட அரும்பாடு பட்டோம். கட்டி முடித்து அதில் வாழ்வைத் துவங்க முற்படும்போது, கட்டடத்தை இடித்துத் தள்ளினோமானால், அந்த அழிவுக்கு யார் பொறுப்புடையவர்கள். நாம் தானென்ற உணர்வு நமது எதிர் கால தலைமுறையினர்க்கு வரவில்லையென்றால், உப்பில்லாத பண்டம் போன்றதாகும்.

பல துணைவேந்தர்கள் ஒன்று கூடினர், பாராளும் அமைச்சர்கள் அவர்களது அறிவுரைகளை நாடினர். பல்கலைக் கழக குழுக்களில் மாணவர்கள் இடம்பெறச் செய்ய வேண்டுமென்றனர் சிலர், சிலர் தனிக்குழு அமைத்து மாணவர் நலனைக் கண்காணிக்க வேண்டுமென்

றனர். இவ்வாறு மாணவர்களுக்கு கல்வி நிலையங்களில் முக்கிய இடம்பெற வாய்ப்புக் கொடுக்க வழிவகுத்த முறையினை குறைகூற விரும்பவில்லை. ஏற்புடைத்து, அல்லது என்பது பற்றியும் நான் ஆராய விரும்பவில்லை.

திருவள்ளுவர் நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி, வாய்ப்பச் செயல்'' என்று சொன்ன கருத்து, உடலைப் பற்றிய நோய்க்கு மட்டுமல்ல, உள்ளத்தைப் பற்றிய நோய்க்கும் ஆகும்.

மருத்துவர் ஒருவருடைய நோயை அறிய நோயாளியைக் கண்டவுடன் மருந்து எழுதிக் கொடுப்பது அல்ல. அப்படி எழுதிக்கொடுப்பாராயின் அவர் மருத்துவருமல்ல. நோயாளிக்கு அந்த நோய்வர முதற்காரணமென்ன? அந்த காரணத்திற்கு மூலம் என்ன? பிறகு அதனைப் போக்க வழி முறையினை அறிவதுதான் மருத்துவரின் இலக்கணம். இதுபோன்றுதான் நம் நாட்டில் எழுந்துள்ள மாணவர்களது கொடிய போக்குக்கு வழிகாண வேண்டும். முதலில் பழமைக்கும், புதுமைக்கும் உள்ள வேறுபாடு என்ன,

1. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கக் கட்டணம் உண்டு.

2. படித்த பெற்றோர்கள் தம் பையனை படிக்கவைத்து தம்மைப் போல ஆக்க வேண்டுமென்று எண்ணினர்.

3. தம் பையன் எதில் ஆர்வமும், திறமையும் உடையவனென்பதை அறிந்து அவ்வழியில் அவனை செலுத்தினர்.

4. பெற்றோர்கள் வீட்டில் அவனது படிப்பில் கவனம் செலுத்தினர்.

5. ஆசிரியர்கள் மாணவர்களை அடிக்கவோ, அச்சுறுத்தவோ, அவனது ஒழுக்கத்தைப் பற்றிக் கண்காணிப்பாக இருப்பதற்கோ உரிமை இருந்தது. பெற்றோர்கள் ஆசிரியர்களது வாக்கினை வேதவாக்காகக் கருதினார்கள்.

6. மாணவர்களது கவனத்தைத் திருப்ப இப்பொழுதிருக்கும் நவீன வாய்ப்பு முறை அப்பொழுது அவ்வளவாக இல்லை. மற்றும் பல இயற்கை நெறிகள் மாணவர்களது உயர்வுக்கு உதவியாக இருந்தன.

இன்றுள்ள வாய்ப்பு

1. மாணவர்களில் இன்று வசதி உடையவர்கள், வசதி அற்றவர்கள் என்ற வேறுபாடில்லாமல் அனைவரும் தாம் விரும்பிய அளவு கல்வி கற்கலாம். திறமையுடையவர்களுக்கு அரசாங்க ஆதரவு முழுமையும் உண்டு. அயல் நாடு சென்று படித்துப் பட்டம் பெறுவதற்கும் அரசாங்கம் துணைபுரிகிறது.

2. பழமை நிலையிலும் இன்றுள்ள நிலையில் மாணவர்கள் படிப்பதற்குத் துணையாக உள்ள கருவிகள் வளர்ந்து, அவர்களது உழைப்பினை போதிய அளவு குறைப்பதற்குப் பயனுள்ளதாக உள்ளன.

3. ஆசிரியர்கள் துணை இல்லாமல், படித்துப் பட்டம் பெற்றுவிடலாமென்ற துணிவு கொள்ளும் வகையில், பல குறிப்பேடுகள் (Notes) வெளிவந்துள்ளன.

4. ஆசிரியர்களோடு நெருங்கிய உறவு மாணவர்களிடத்தில் இல்லை. ஆசிரியர்களும் தமக்கு அந்த தகுதியினை மிகுதிப்படுத்திக் கொள்ளவும் இல்லை.

5. கடிகாரத்தின் முள்ளில் ஆசிரியர், மாணவர் உறவு உள்ளது.

6. மாணவர்கள் தமக்கு தகுதி இருக்கிறதா இல்லையா என்று ஆராயாமல், பிறர் பெருநிலைகண்டு, தம்மால் இயலாத ஒன்றினைக் கைக்கொள்ள வேண்டுமென்ற பேராசையால், தாங்க முடியாத சுமையை சுமக்க விரும்புகின்றனர்.

7. கல்வி முறையில் அடிக்கடி ஏற்படும் மாறுதல்கள், கட்சி மனப்போக்கு மாணவர்கள் உள்ளத்தில் ஆழமாக வளர்ந்து வருதல்.

இன்னும் வெளியிட முடியாத எத்தனையோ இடர்கள் நிறைந்த முறைகள்.

செய்யவேண்டுவன

கற்றறிந்த அறிஞர் பெருமக்கள் சிறிது தனித்து இன்றைய மாணவர்களது போக்கும் அவர்களது பிற்கால வாழ்வையும் எண்ணிப் பார்க்கும்போது, பெற்றமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்ற உணர்வுதான் அவர்களுக்குத்தோன்ற முடியும். என்னுடைய ஆசிரியரின் அனுபவத்தைக் கொண்டு நானறிந்ததை வெளியிட விரும்புகிறேன். பெருமக்கள் குறையாக இருப்பின், இதனையும் ஒரு பொருட்டாக எண்ணாமல், நிறைவாக இருப்பின் செயல்படுத்த வேண்டுகிறேன்.

1. அரசாங்கம் தகுதியுடைய ஆசிரியப் பெருமக்களைத் தோற்றுவிக்க வேண்டும். அவர்கள் அறிவு, ஒழுக்கம், அமைதி, கடவுள் நம்பிக்கை, அனுபவம் இவைகளெல்லாம் அவர்களிடத்தில் இயல்பாக உள்ளதா என்பதை ஆராய்ந்து அலுவலில் ஈடுபடுத்தவேண்டும்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் வருவாய்க்குப் பிற வழிநோக்காமல், போதிய நிலையில் குடும்பநிலைக்கேற்ப அவர்கள் ஊதியம் அமைதல் வேண்டும். பொதுவாகக் கூறின் ஆசிரியர்கள் நல்வாழ்வுக்காக அரசாங்கம் ஆவனசெய்து நல்லாசிரியராக தோற்றுவிக்க வேண்டும். இவ்வாறெல்லாம் செய்து, ஆசிரியர் தமது தகுதிக்கேற்ப, மாணவர்களது நல்வாழ்வுக்குத் துணையாக இல்லாமல் இருப்பாராயின் கருணை இல்லாமல் தண்டிக்கவும் லேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அவரை ஆசிரியராக நீடிக்கவும் விடக்கூடாது.

3. வகுப்பில் மாணவர்களது எண்ணிக்கையைக் கூடியவகையில் குறைக்க வேண்டும். மாணவன் ஒவ்வொருவனிடத்திலும் ஆசிரியர் கவனம் செல்லுமளவு மாணவர்களின் எண்ணிக்கை இருத்தல் வேண்டும்.

4. டுட்டோரியல் முறை இன்றும் கல்வி நிலையங்களில் நடைமுறையில் உள்ளது. ஏட்டுச்சுரைக்காயாக உள்ளது. இந்த முறையை பல கல்வி நிலையங்களில் உண்மையாக செயல் படுத்துவதில்லை. செய்ய வேண்டுமென்பதற்காக தலைவர்களால் குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட மாணவர்கள் ஒதுக்கப்படுவார்கள். அவ்வாறு ஒதுக்கப்பட்ட மாணவர்களின் ஊர், பெயர், தொழில், இவற்றினைக் குறித்து வைத்துக்கொண்டு மாணவர்களை ஆசிரியர்கள் அனுப்பிவிடுவார்கள். ஆண்டு முடிவில் அறிக்கையைத் தலைவரிடம் கொடுத்துவிடுவார்கள். அறிக்கையில் புள்ளிவிபரங்கள் குறிப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும். கற்பனை கலந்த குறிப்பென்று சொல்லுவது தப்பொன்றுமில்லை.

இந்நிலையில் இருப்பின் எவ்வாறு ஆசிரியருக்கும், மாணவருக்கும் நெருங்கிய உறவு இருக்கும், மாணவர்களின் தனிப்பட்ட கண்காணிப்புக்காக, ஆசிரியர்கள், மாணவர்களின் இல்லங்களுக்குச் சென்று வரவும், இன்றியமையாத தேவையினைப் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கம் சில லட்சக்கணக்கான ரூபாய்களை செலவழிப்பின் அது மிகுதியான பயனை விளைவிக்கும்.

ஒரு ஆசிரியர் தனக்காக ஒதுக்கப்பட்ட மாணவர் இல்லங்களுக்கு வாரம் இருமுறை சென்று வருவாராயின், பெற்றோர்கள் அவன் வீட்டில் நடந்துகொள்ளும் முறையும், இரவிலும், மற்ற ஓய்வு நேரங்களிலும் மாணவன் எவ்வாறு அப்பொழுதினைக் கழித்து வருகிறானென்பதையும் பெற்றோர்கள் வாயிலாக ஆசிரியர் அறியக்கூடும். தகுதியற்ற நிலையில் அவனது பொழுதுபோக்கு இருக்குமாயின், அந்நிலையில் கண்டித்து அவனைத் திருத்தலாம். அவனும் ஆசிரியர், பெற்றோர் சொல்லுக்குப் பணிந்து நடக்க வேண்டுமென்ற அச்சம் அவன் உள்ளத்தில் குடிகொள்ளும். தீய காட்சிகள், தீய தொடர்புகள், தீய எண்ணங்கள், வீண்பொழுது போக்கு, கடமையில் நாட்டமற்ற தன்மை, கல்வியில் உள்ள ஆர்வம் குறைவு இத்தனை குறைபாட்டையும் சிறுவயதிலிருந்தே நீக்குவோமாயின், நல்ல மாணுக்கனுக வளர்ச்சியடைவானென்பதில் எத்தகைய ஐயமுமில்லை.

நம் நாட்டில் நூற்றுக்குத்தொண்ணூறு மடங்கு படிக்காத பெற்றோர்கள்தான் அதிகம்.

அவன் என்ன படிக்கிறுனென்பதே அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. எந்தப் படிப்பில் தன் மனேச் செலுத்தலாம், எதில் அவனுக்கு ஆர்வம் என தன் மகன் போக்கை அறியாத பெற்ருேர்களே மிகுதி. மாணவனும் தன் பெற்ருேர் பாமரர் என்பதனை அறிந்து ஏமாற்ற முற்படுகிருன். வாழ்வில் நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்கிருேமே என்ற எண்ணம் துள்ளித் திரியும் பருவத்தில் அவனுக்குத் தோன்றுவதில்லே. இதனுல் மாணவன் கெடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த வாய்ப்பினை அவனுக்கு எள்ளளவும் தோற்றுவிக்காமல் இருக்க வேண்டுமாயின், ஆசிரியர் தான் அவனுக்கும் என்றும் தோன்ருத் துணையாக இருக்க வேண்டும். இந்த நன்மைகளை எல்லாம் அளிக்க வேண்டு மென்பதற்குத்தான் டுட்டோரியல் முறை வந்தது, இன்று பயனற்ற முறையில் ஏட்டளவோடு நின்றுவிடுகிறது.

கல்வி நிலையங்களில் இதைக் கட்டாயமாக நடைமுறையில் கொண்டுவர வேண்டும். நடைமுறையில் ஏற்படும் சிக்கல்களைப் போக்க நிர்வாகத்தினர் கூறும் முறையினை அரசாங்கம் உடனே கைப்பற்ற வேண்டும். இவ்வாறு ஒரு ஆண்டு கல்லூரியிலும், பள்ளியிலும் கொண்டு வந்தால் அந்த ஆண்டே அதன் பயனை கண் முன்னுல் கண்டு தெளியலாம். அரசாங்கம் இதனை இன்றைய சூழ்நிலையில் நாளை என ஒத்திப்போடாமல் உடனடியாக செயல்படுத்த முற்பட வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கொள்கிறேன்.

வளர்ந்தால்தான் வாழ்வு

கட்சி எதுவாக இருப்பினும், கட்சியின் நன்மைக்கோ, வளர்ச்சிக்கோ மாணவர்களைப் பயன் படுத்திக்கொள்ளக் கூடாது. மாணவர்கள் உணர்ச்சி மேலிட்டு, ஆர்வம்பொங்க கட்சியில் தமது பங்கைச் செலுத்தி வருவாராயின், அப்பொழுது கட்சித் தலைவர்கள் அவர்களைத் தடுத்து அறிவு பெறும் வழியினையும், அதில் ஆர்வத்தினைச் செலுத்தித்தன் கடமையை ஒழுங்காக நிறைவேற்றிய பிறகு கட்சியில் கால்வைக்கலாமென்ற கட்டுப்பாட்டினையும் மாணவர்களுக்கு உணர்த்த வேண்டும். கோஷம்போட கூட்டம் வேண்டு மென்பதற்காக; குழப்பத்தை விளைவித்து, மக்கள் கவனத்தைத் தன் கட்சியின் பக்கம் திருப்ப வேண்டு மென்பதற்காக; ஆட்சி பீடத்தில் அமரும் பேராவலுக்காக மாணவர்கள் சமூகத்தை நாம் அழித்துவிடக்கூடாது. அவர்கள் நல்லறிவு பெறும் வாய்ப்பினைப் போக்கிக்கொள்ளும்படி செய்துவிடக் கூடாது.

நல்லறிவு பெற்றவர்கள் எங்கு நன்மை இருக்கிறதோ, அங்கு அவர்கள் ஆதரவு இருக்கு மென்று எந்தக் கட்சியினரும் எண்ணி, வளருகின்ற சமுதாயத்தை வளரும்படிச் செய்ய வேண்டும். நாம் மாணவர்களது போக்கினைப் பற்றி சிறுபயல் செயலென்று எண்ணி வாளாவிருப்போமாயின், என்ருே ஒருநாள் செடியை நகத்தினுல் கிள்ளுவது போய், மரத்தினைக் கோடறி கொண்டு பிளப்பதற்கு ஒப்பாக ஆகி விடும். மாணவர்கள் நல்லறிபெற்று, நல்ல குடி மக்களாக நாட்டில் வளரவும், வாழவும் அரசாங்கம் உடனடியாக ஆவன செய்யவேண்டும்.

மாணவர் சமூகத்தின் அமைப்பும், வளர்ச்சியும் பொறுத்தே நம் நாட்டின் எதிர்காலம் அமையும். அமரர் நேரு நம் நாட்டின் மாணவர்களை எதிர்கால சிற்பிகள் என்று பல கல்விநிலையங்களில் கூறியதை நாம் என்றும் மறக்க இயலாது. சிற்பிகளின் திறமையைப் போன்று சிற்பம் அமைவதுபோல், மாணவர்களின் திறமைகளைப் பொருத்தே நம் நாட்டின் எதிர்காலம் அமையும். இதனை மாணவ சமுதாயம் நன்கு உணரவேண்டும்.

அரசாங்கம் மாணவ சமுதாய வளர்ச்சிக்குத் தடையாக இருக்குமென மாணவர்கள் உணர்ந்தால் அதற்காக தேசிய உடைமைகளையும் மக்களது நலனையும் அழிக்க முற்படக்கூடாது. மாணவர்கள் கற்றறிந்த அறிஞர் பெருமக்களைக் கூட்டி, தங்களது குறையை அவர்களிடம் தெரிவித்து, அவர்கள் வாயிலாக அரசாங்கத்துக்கு உணர்த்தி, அரசாங்கத்தை நல்லது செய்ய தூண்ட வேண்டும். இதுதான் படிக்கும் மாணவர்களது பண்புடைய செயலாம்.

- ஆசிரியர்.

தொழில் நுட்பக் கல்வியில் தமிழக சாதனை

தொழிலமைச்சர்
ஸ்ரீ. ஆர். வேங்கடராமன்

தொழில் நுட்பக் கல்வித்துறையில் பாரத நாடு முழுவதற்குமே சென்னை மாநிலம் வழி காண்பித்து வந்திருக்கிறது. நம் நாட்டின் முதலாவது பொறியியல் பயிற்சிப் பள்ளி 1794 ம் ஆண்டில் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. அது ஒரு சர்வே பள்ளி ஆகும். இந்தியாவின் இரண்டாவது பொறியியல் பள்ளி 1847-ல் அமைக்கப்பட்டது. அது தாம்சன் சிவில் பொறி இயல் பள்ளி என்று வழங்கலாயிற்று.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் பெரும்பாலும் அதன் மக்களுடைய பொதுவான கல்வித் தரத்தைப் பொறுத்தது. அத்துடன் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதன் மனித சக்தியை உயர்கட்டத்துக்கு வளர்ச்சியடையச் செய்வதையும் பொறுத்தது. அந்த மனித சக்தியில் தொழில் நுட்ப நிபுணர்களும், விஞ்ஞானிகளும் அடங்கியுள்ளனர். சென்ற மூன்று திட்ட காலங்களில், அதாவது 1951 முதல் 1966 வரை சென்னை மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வி எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது என்பதை இந்தக் கட்டுரையில் கூற விரும்புகிறேன்.

பொறி இயல் தொழிலுக்கு தகுதியுள்ளவர்களாக்குவதற்கு இளைஞர்களுக்குத் தகுந்த கல்வியையும், பயிற்சியையும் நாம் அளிக்க வேண்டும். அப்போது நாம் பல விஷயங்களை கவனிக்க வேண்டியது அவசியம். கைவினைத் தொழிலாளி முதல் பொறி இயல் தலைவர்கள் ஈறாக நமக்கு நிபுணர்கள் தேவை. பொறியியல் தொழிலை வளம்பெறச் செய்ய வேண்டும். வாழ்க்கையில் அந்தத் தொழிலுக்குள்ள வாய்ப்புக்களையும் வழி துறைகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் செய்யக் கூடிய திறன் வாய்ந்த பொறி இயல் தலைவர்கள் நமக்கு வேண்டும்.

கைவினைத் தொழிலாளி என்பது ஆரம்ப நிலை. பொறி இயல் நிபுணராகுதல் அதன் மற்றோர் முனை. இந்த இரண்டுக்கும் உள்ள இடைவெளி பெரிது. அந்த இடைவெளியை நிரப்பி, இரு முனைகளையும் இணைப்பதற்கு நமது நாட்டில் திட்ட மிடப்பட்டுள்ளது. அதற்கான அமைப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அவை நாலு கட்டங்களாக அமைந்துள்ளன. கீழ்க்கண்ட ஸ்தாபனங்களில் அளிக்கப்படும் கல்வியும், பயிற்சியும் அந்தக் கட்டங்களில் அடங்கியுள்ளன:

1) தொழில் கல்வியும், தொழிலியல் பயிற்சியும் அளிக்கும் தொழிலியல் பயிற்சிக் கழகங்கள்.

2) செகண்டரி படிப்புக் கட்டத்தில் அமைந்துள்ள ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகள்.

3) செகண்டரி படிப்பு முடிந்த பிறகு டிப்ளமா வகுப்புகள் நடத்தும் பாலிடெக்னிக் பள்ளிகளைப் போன்ற ஸ்தாபனங்கள்.

4) கல்லூரிப் படிப்பின் ஆரம்பக் கட்டத்திற்குப் பிறகும், பட்ட பிற்கால ஆராய்ச்சிப் படிப்பிற்குப் பிறகும், வகுப்புகள் நடத்தும் பொறி இயல் கல்லூரிகள், பிராந்திய உயர் தர பொறி இயல் கழகங்கள் ஆகியவற்றைப் போன்ற ஸ்தாபனங்கள்.

ஆரம்ப முயற்சி

சென்னை மாநிலத்தில் தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்காக முதன் முதலாக 1957-ல் முக்கியமான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதாவது ராஜ்ய தொழில் நுட்பக் கல்வி குழுவும், தொழில் நுட்பக் கல்வி டைரக்டர் அலுவலகமும் அமைக்கப்பட்டன. அவை முறையே பொறி இயல் கல்லூரிகளை கல்வி டைரக்டரிடமிருந்தும், பாலிடெக்னிக் பள்ளிகளைக் கைத்தொழில் டைரக்டரிடமிருந்தும் எடுத்துக் கொண்டன.

நாம் அமல் நடத்தியுள்ள மூன்று திட்டங்களின் காலங்களிலும் பொறி இயல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள், ஜூனியர் டெக்னிக்கல் பள்ளிகள் ஆகியவையும் அவற்றில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையும் எவ்வாறு பெருகி வந்திருக்கின்றன என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:-

தொழிலியல் பயிற்சி

தற்போது சென்னை மாநிலத்தில் 30 தொழிலியல் பயிற்சி ஸ்தாபனங்கள் உள்ளன. அவற்றில் 10,000 பேர் பயிற்சி பெறுவதற்கு வசதி உள்ளது. அங்கு 23 தொழில்கள் போதிக்கப்படுகின்றன. அந்த ஸ்தாபனங்களில் பயிற்சி அளிக்கும் கால வரம்பு 18 மாதங்கள், அதற்கு பின்னர் 6 மாதங்கள் தொழிற்சாலையில் பயிற்சி பெற வேண்டும் இந்த ஸ்தாபனங்கள் வேலை வசதி, பயிற்சி டைரக்டரின் அதிகாரத்திலுள்

	முதல் திட்ட கால இறுதி 1956		2வது திட்ட கால இறுதி 1961		3வது திட்ட கால இறுதி 1966	
ஸ்தாபனங்களின் விவரம்	ஸ்தாபனங்களின் எண்ணிகதை	அனுமதிக்கப்பட்டவர்கள்	ஸ்தாபனங்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்டவர்கள்	ஸ்தாபனங்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்டவர்கள்
பொறி இயல் கல்லூரிகளும் சென்னையில் உள்ள ஐ.ஐ.டி. போன்ற உயர்தர தொழில் நுட்பக் கல்வி ஸ்தாபனங்களும்.	7	662	10	1,277	12	2,392
பாலி டெக்னிக்குகளும் விசேஷ ஸ்தாபனங்களும் (டிப்ளமா)	9	822	24	2,910	36	4,797
ஜூனியர் டெக்னிக்கல் பள்ளிகள்	—	—	—	—	14	840

ளது. பிட்டர்கள், வெல்டர்கள், இயந்திரங்களை இயக்குகின்றவர்கள், மோல்டர்கள் போன்ற கைவினைத்தொழிலாளர்களை தொழிலியல் பயிற்சி ஸ்தாபனங்கள் தயாரிக்கின்றன.

ஜூனியர் தொழில் நுட்பப் பயிற்சிப்பள்ளி ஒரு புதியவிதமான ஸ்தாபனமாகும். அதில் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கான தீவிரப் பயிற்சியும், இணைப்பாக அளிக்கப்படுகின்றன. தொழில் நுட்பம் சம்பந்தமான பல லாபகரமான வேலைகளைச் செய்வதற்கு இளைஞர்களைத் தயாரிப்பதுதான் இந்த ஸ்தாபனங்களின் முக்கிய நோக்கம். அங்கு பயிற்சி பெறுகிறவர்கள் சார்ஜ்மேன், போர்மேன் முதலிய மேற்பார்வை பொறுப்புள்ள பதவிகளில் தொழிற்சாலைகளிலே அமரலாம். சென்னை மாநிலத்தில் 11 வருட படிப்புள்ள அங்கீகாரம் பெற்ற பள்ளிகளிலே 9-வது வகுப்பில் சேருவதற்குத் தகுதிவாய்ந்த 13 வயது மாணவர்கள் ஜூனியர் தொழிற் கல்வி பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப் படுகிறார்கள். பயிற்சி முடிந்து தேர்வுபெற்ற மாணவர் விருப்பப்பட்டால், பாலிடெக்னிக் பள்ளிகளிலோ அல்லது கல்லூரிகளில் பி. யூ. சி. வகுப்புகளிலோ சேரலாம்.

ஆர்வமும் உடலில் தெம்பும் உள்ளவர்களுக்குக் கல்வி வசதிகள் கிடைக்க வேண்டும், இல்லையேல் அத்தகைய கல்வி முறையால் பயன் இல்லை. மாணவர்களுக்குப் பல்வேறு வழிகளில் நிதி வசதி அளிக்கப்படுகிறது பட்டப் படிப்பு, டிப்ளமா பயிற்சி ஸ்தாபனங்களில் மாணவர்களில் 60 சதம் பேருக்கு அதிகமான ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் நிதி வசதி பெறுகின்றனர்.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து சென்ற 15 ஆண்டுகளில் சென்னை மாநிலத்தில் பொறி இயல் கல்வியின் எல்லாப்பிரிவுகளிலும், கணிசமான முன்னேற்றத்தை யடைந்துள்ளோம் என்பது விளங்குகிறது. இந்தியா முழுவதையும் எடுத்துக்கொண்டால் ஜனத் தொகையில் லட்சம்பேருக்கு 1.6 சதவிகிதம் விதாசாரத்தில் பொறி இயல் நிபுணர்களைப் பெற்றுள்ளோம் சென்னை மாநிலத்தில் 3.7 விதாசாரத்தில் அமைந்துள்ளது. அதாவது, இது அகில இந்திய விதாசாரத்தைவிட இரண்டு மடங்கு அதிகம். இது நல்ல சாதனைதான். நாம் பெருமிதமடைய வேண்டிய சாதனைதான். ஆனால் முற்போக்குள்ள சில மேலை நாடுகளைக் கவனிக்கையில், நாம் எவ்வளவோ முன்னேற வேண்டும்.

அமெரிக்காவில் லட்சம் மக்களுக்கு 21 பேர் வீதம் பொறி இயல் நிபுணர்கள் உள்ளனர். கனடாவில், இந்த விகிதாசாரம் 12 ஆகவும், பிரான்சிலும் அதே வீதமாகவும் அமைந்துள்ளன இந்த விகிதாசாரத்திலிருந்து ஒரு நாட்டின் பொருளாதாரமும், சமுதாயமும் எந்த அளவுக்கு முன்னேற்ற மடைந்துள்ளன என்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆகவே முற்போக்கு நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் நாம் இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டும். ஆகவே அவசியமான சிற்சில மாறுதல்களைச் செய்துகொண்டு தொழில் நுட்பக் கல்வியைத் தரத்திலும் பரிமாணத்திலும் அபிவிருத்தி செய்வதில் தீவிரமாக ஊக்கம் காட்ட வேண்டும். அப்படிச் செய்தால்தான் பொறி இயல் நிபுணர்கள் - கைவினைத் தொழிலாளர்கள் ஆகியோரிடையே முறையான விகிதாசாரம் ஏற்பட முடியும். நாம் அடைந்துள்ள நற்பலன்களை உறுதி செய்யவும், கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் சென்ற திட்ட காலத்தில் விரிவடைய முடியாமல் பின்தங்கிவிட்ட கல்வி பயிற்சி பிரிவுகளை விரிவுபடுத்தவும், 4-வது திட்டக் காலத்தில் முயற்சி மேற்கொள்ளப்படும்.

கல்வியின் தரம் பெரும்பாலும் அதைப் போதிப்பவர்களின் தரத்தைப் பொறுத்தது. தொழில் நுட்பக் கல்வித்துறை இதுவரை கண்டிராதபடி விரிவடைந்துள்ளதால் தகுந்த யோக்கியதாம்சமும் முதிர்ந்த அனுபவமும் உள்ள ஆசிரியர்கள் கிடைப்பது கடினமாகிவிட்டது. இந்தக் குறையை எவ்வாறு அகற்றுவது, தொழில் நுட்பக் கல்வி போதிக்கும் ஆசிரியர்களின் வேலை வசதிகள் அபிவிருத்தி செய்ய வேண்டும். அவர்களுக்கு அதிகப்படியான ஊதியம் தருதல் வேண்டும். அத்தகைய ஆசிரியர்களைத் தயாரிப்பதற்குப் போதுமான பயிற்சி

வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இந்த முயற்சிகளை சென்னை அரசாங்கம் எடுத்து வருகிறது.

பயிற்சி வசதி

பொறி இயல் பட்டப் படிப்புக் கல்லூரிகளுக்கு தேவைப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சி சென்னையில் கிண்டியிலுள்ள பொறி இயல் கல்லூரியிலும், ஐ. ஐ. டி. ஸ்தாபனத்திலும் அளிக்கப்படுகிறது. அவை அகில இந்திய அடிப்படையில் அங்கீகாரம் பெற்றவை. பாலிடெக்னிக் ஆசிரியர்களைத் தயாரிப்பதற்கு ஒரு தனி ஸ்தாபனம் அடையாறுக்கு அருகிலுள்ள தொழில் நுட்ப மத்திய ஸ்தாபனங்களின் பகுதியிலேயே அமைக்கப்பட்டுள்ளது. தென் பிராந்தியம் முழுவதற்கும் இந்த மூன்று ஸ்தாபனங்களிலும், தொழில் நுட்ப ஆசிரியர்களைத் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது

பட்டப் பிற்கால பயிற்சி

இரண்டாவது திட்ட ஆரம்பகாலம் வரை பொறி இயல் துறையில் பட்டப் பிற்காலப் பயிற்சிக்கு அநேகமாக வசதிகளே கிடையாது. இந்தியாவில் சில குறிப்பிட்ட பொறி இயல் கல்லூரிகளில் பட்ட பிற்கால பயிற்சி வகுப்புக்களை, நடத்துவதற்குத் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. சென்னையில் கிண்டியில் உள்ள பொறி இயல் கல்லூரியில் 1955-ம் ஆண்டில் முதன் முதலாக பட்ட பிற்காலப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நமது மாநிலத்தில் 6 பொறி இயல் ஸ்தாபனங்களில் பட்ட பிற்கால அல்லது டிப்ளமாவுக்குப்பிறகு உள்ள ஆராய்ச்சிப் படிப்புக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. அவற்றில் பொறி இயல் செயல் முறை விஞ்ஞானம் ஆகியவை சம்பந்தப்பட்ட சுமார் 20 பாடங்கள் போதிக்கப்படுகின்றன.

அடிப்படை ஆராய்ச்சி

பொறி இயல் துறையில் பட்ட பிற்கால ஆராய்ச்சிப் படிப்பு சென்ற 10 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்த அனுபவத்திலிருந்து, முக்கியமான விஷயங்களை நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். படிப்பின் திறமைக்கும் தகுதி உள்ள மாணவர்களைப்பெறவும், உயர்ந்த தரத்தைப்பாதுகாக்கவும், அடிப்படை ஆராய்ச்சிக்குத் தனி முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் புதிய விஷயங்களைக் கண்டு பிடிப்பதற்குத் தீவிர முயற்சியைத் தூண்டும், சூழ்நிலைகளை ஏற்படுத்துதல் வேண்டும். அறிவியல் விஷயங்களை எல்லோரும் அறியச் செய்வது, புதிய அறிவு நுட்பங்களைக் கண்டு பிடிப்பது இவை இரண்டும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு உள்ளவை. அவை ஒரே நாணயத்தின் இரு பாகங்களாகும். இந்தக் கடமைகளில் குறைபாடு காணப்படும் உயர்தர தொழில் நுட்பப் பயிற்சி ஸ்தாபனங்கள் முழு வளர்ச்சி யடைந்துள்ளவையாகக் கருத இயலாது.

சென்ற காலத்தில் நமது கல்லூரிகள் முக்கியமாக போதனைக் கூடங்களாகவே அமைந்து வந்திருக்கின்றன. இதிலே சீர்திருத்தம் செய்வதற்கு முறையான முயற்சிகள் தேவை.

பொறி இயல் துறையில் அடிப்படை ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்யவும், அதை

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் கல்லூரிகளாகும்

4-வது திட்டம் பற்றி ஸ்ரீ பால்

ஆசிரியர்களை நன்கு பயிற்றுவிக்க விசேஷ பயிற்சியளிப்பதற்கான திட்டத்துக்கு 4-வது திட்டத்தில் ரூ. 90 கோடி ஒதுக்கப்பட்டு இருப்பதாக த. நா. செகண்டரி கல்வி டைரக்டர் ஸ்ரீ பால் தெரிவித்தார்.

ஆசிரியர் பயிற்சி பள்ளிகளை கல்லூரி அந்தஸ்துக்கு உயர்த்தி சர்வ கலாசாலைகளுடன் நேரடியாக இணைப்பதற்காகவும் திட்டத்தில் வழி வகை செய்யப்பட்டிருப்பதாக அவர் சொன்னார்.

வளர்க்கவும் கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியில் அடிப்படை ஆராய்ச்சிக்காக ஒரு தனி ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டது. அது முழு வளர்ச்சியடைந்ததும், அதில் 10 ஆராய்ச்சிப் பிரிவுகள் இருக்கும். அவற்றில் ஒன்று ''தத்துவ சமஸ்கிருத படிப்பு'' இலாகா என்பது. நமது மூதாதையரின் அறிவுக் களஞ்சியங்கள் நமது உப கண்டத்தின் முது பெரும் மொழியான சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்ட நூல்களில் பொதிந்து கிடக்கின்றன.

அந்த நூல்களைப் பயில்வதற்கு, உதவிபுரிவது நமது தொழில் நுட்பக் கல்வி ஸ்தாபனங்களின் கடமையாகும். விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவை சம்பந்தப்பட்ட பல விஷயங்கள் அந்த நூல்களில் அடங்கியுள்ளன. பொறியியல் அடிப்படை ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், நியாய சாஸ்திரம், சாங்கியம் போன்ற சமஸ்கிருத நூல்களைத் துருவிப் படித்து அவற்றிலே அடங்கியுள்ள விஞ்ஞானம் பற்றிய தகவல்கள் சேகரிக்க வேண்டும். அதற்கு முதற்படியாக, கல்லூரிகளில் தர்க்க சாஸ்திரத்தில் உரைகள் நிகழ்த்தப் படுகின்றன. அந்த உரைகளைக் கேட்பதற்கு எல்லோரும் ஆர்வமாக வருகின்றனர்.

மின்விசைக் கணக்கன்

பொறியியல் அடிப்படை ஆராய்ச்சிப் பிரிவில் ரூ. 20 லட்சம் மதிப்புள்ள கணக்குப் போடும் ''மின்விசை கணக்கன்'' இயந்திரம் ஒன்று உள்ளது. அது சர்வ தேச அபிவிருத்திக்கான யு. எஸ். ஸ்தாபனத்தின் மூலம் தரப்பட்டது. நமது நாட்டில் கல்வி ஸ்தாபனத்தில் இத்தகைய மின்விசைக் கணக்கன் இயந்திரம் ஒன்றே ஒன்றுதான் உள்ளது. இதை சென்னை மாநிலத்திலும், வெளியிலுமுள்ள ஆராய்ச்சியாளர்கள் பயன்படுத்துகிறார்கள்.

இதுவரை நாம் புரிந்துள்ள சாதனைகளைப் பற்றி நாம் மகிழ்ச்சியடைய வேண்டியது நியாயமே. 4-வது திட்ட காலத்தில் நமது லட்சிய அளவுகள் பூர்த்தியாகும் என்று நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். 4-வது திட்ட காலத்தில் நாம் ஏற்கனவே ஆரம்பித்து நடத்தும் ஸ்தாபனங்களைப் பலப்படுத்தப் போகிறோம். மகளிருக்காக 7 புதிய பாலிடெக்னிக் பள்ளிகளையும், 3 ஜூனியர் தொழில் நுட்பப் பள்ளிகளையும் ஆரம்பிக்கப்போகிறோம்.

தொழிற்சாலைகளின் தேவைகளுக்கேற்ப பாலிடெக்னிக் பள்ளிகளில் பலதரப்பட்ட பயிற்சிகளை அளிக்க உத்தேசித்துள்ளோம்.

4-வது, 5-வது திட்டங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சாத்தியமான இடங்களில் இப்போதுள்ள கல்லூரிகளையும், பாலிடெக்னிக்குகளையும் விரிவடையச் செய்யப் போகிறோம். 4-வது திட்ட காலத்தின் இறுதியிலோ அல்லது 5-வது திட்ட காலத்தின் ஆரம்பத்திலோ மேலும் 3 பொறியியல் கல்லூரிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தொழில் நுட்பக் கல்விப் பயிற்சி ஆகியவற்றிற்கான வசதிகளை சீராக அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடுதல் வேண்டும். அப்போது எஞ்சினீயர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள், கைவினைத் தொழிலாளர்கள் ஆகியோர் ஒருவருக்கொருவர் எந்த விகிதாசாரத்தில் இருக்க வேண்டும் என்பதைச் சுமாராக வேணும் நிர்ணயிக்க வேண்டும். முற்போக்குள்ள நாடுகளில் உள்ள வசதிகளை மனதில் கொண்டு நமது தேவைகளை நாம் தீர்மானிக்கக்கூடாது.

தற்போது இந்தியா முழுவதிலும் பட்டம் பெற்றவர்களையும், டிப்ளமா பெற்றவர்களையும் 1-க்கு 1.5 விகிதாசாரத்தில் உபயோகப் படுத்துகிறோம். நமது நாட்டில் பட்டம் பெற்றவர்கள், டிப்ளமா பெற்றவர், ஆகியோரின் திறமையையும் இப்போதுள்ள நிலையில் ஒவ்வொரு கட்டத்திலும் தேவைப்படும் மேற்பார்வை, தணிக்கை முதலியவற்றையும் கவனிக்கையில் இஞ்சினியர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள், கைவினைத் தொழிலாளர்கள் முதலியவர்கள் 1.3:21 விகிதாசாரத்தில் இருப்பது விரும்பத்தக்கது. அதாவது ஒரு யூனிட் அல்லது பிரிவு என்பதில், விகிதாசாரங்களில் 25 பேர் இருக்க வேண்டும்.

ஆனல் இப்போது நமது நாட்டில் டிப்ளமா பெற்றவர்களும், கை வினைத் தொழிலாளர்களும் இந்த விகிதாசாரத்திற்குக் குறைவாகவே உள்ளனர். 4-வது திட்ட காலத்தில் இந்த குறையை நாம் நீக்கவேண்டும்.

வேலைக்கு ஏற்ற பயிற்சி

தொழில் நுட்ப கல்வித் துறையில் சர்ச்சையைக் கிளப்பியுள்ள சில பிரச்னைகள் காணப்படுகின்றன. அவற்றுள் தொழில் நுட்பக் கல்வி ஸ்தாபனங்களில் வேலைக்கு ஏற்ற பயிற்சி யளிப்பது ஒன்ருகும். பல தொழில் ஸ்தாபனங்கள், தொழில் நுட்பக் கல்வி ஸ்தாபனங்களிலிருந்து பட்டமும் டிப்ளமாவும் பெற்றுவரும் இளைஞர்கள் உடனடியாக லாபகரமான பணிகளில் ஈடுபடுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிருர்கள்.

அத்தகைய குறுகிய வரம்புக்குட்பட்ட சிற்சில தொழில்களில் மாத்திரம் பயிற்சி அளிப்பது விரும்பத்தக்கது அல்ல; சாத்தியமுமல்ல; படிப்பு முடிந்ததும், முடியாததும் இளைஞர்களிடம் வேலைக்குத் தகுதியை எதிர்பார்க்க முடியாது. நாட்டில் எத்தனையோ தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றின் தேவைகள் பலவிதப்பட்டவை.

அந்தந்த இடங்களுக்குத் தகுந்தவாறும் தேவைகள் அமைந்திருக்கும். சில குறிப்பிட்ட பணிகளை ஏற்பதற்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவை. அந்தப் பொறுப்பை ஏற்பதற்கு அவை தனித்தனியாகவோ கூட்டாகவோ முன் வர வேண்டும். சில தொழிற்சாலைகள் சிறியவையாக இருக்கலாம். ஒன்று, இரண்டு வருடங்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையில் அவை இருக்கமாட்டா. நமது தொழில் வளர்ச்சியின் இப்போதுள்ள நிலையைக் கருதுகையில் சிறு தொழில் நிறுவனங்கள் தமது இஷ்டம்போல் பொறுக்கி யெடுத்து வேலைக்கு அமர்த்திக் கொள்ள பயிற்சி பெற்றவர்கள் கிடைப்பதற்கு நாம் வசதி செய்ய வேண்டும்.

இதை எப்படிச் செய்வது. பலர் ஒன்றிரண்டு கூட்டு முயற்சியில் பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

(தொடர்ச்சி 34ம் பக்கம்)

பணவசதி பெருகிய பிறகே பெரும் உருக்காலை சாத்தியம்

சிறு ஆலைகளைப் பற்றியே இப்போது சிந்திக்கலாம் என்கிருர் பிரதமர்

பொகாரோ ஆலையைத் தவிர ஐந்தாவதாக ஒரு பெரிய உருக்காலையை ஒரு இடத்தில் நிறுவுவதற்குப் பதிலாக இரண்டு மூன்று இடங்களில் சிறிய ஆலைகளை நிறுவலாம் என்ற யோசனை தமது சொந்த யோசனையல்ல என்றும் மக்களில் ஒரு சாராருடைய அபிப்பிராயத்தையே தாம் கூறியதாகவும் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி நிருபர்களிடம் கூறினுர்.

எர்ணுகுளத்திலிருந்து விமானத்தில் டில்லிக்குச் செல்லும் வழியில் ஹைதராபாத் பீகம்பேட்டை விமான நிலையத்தில் நிருபர்களிடம் பேசினுர்.

அடுத்த பெரிய உருக்காலை நிறுவுவதில் முதன் முதலில் தீர்க்க வேண்டியிருக்கிற பிரச்னை பண வசதிப் பிரச்னைதான். தாராளமாக செலவு செய்யும் நிலைமையில் அரசாங்கம் இப்போது இல்லை. நிதி நிலைமை இறுக்கமாக இருக்சிறது. இப்போது எதுவும் செய்வதற்கில்லையென்று திட்டக் கமிஷன் கூறிவிட்டது பண வசதி தாராளமான பிறகு இதையெல்லாம்பற்றி நினைக்கலாம் என்று பிரதமர் கூறினுர்.

பங்கு மாற்றகம்!

(Stock Exchange)

பேராசிரியர்
அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்
M. A. (Phil,) M. A. (Psy), M. B. A.

பங்கு மாற்றகம் என்றதுமே பலர் சூதாடிகளின் கூட்டத்தையே நினைவு கூறுகின்றனர். பணம் படைத்த சீமான்கள் குறுக்குவழியில் இன்னும் அதிகமாக பணம்திரட்ட உதவும் மன்றமே, பங்கு மாற்றகம் எனக் கருதுபவரும் உளர். இது மிகவும் தவறான எண்ணமாகும். பொதுமக்கள் பங்குகொள்ளும் பொதுநிறுவனங்களின் பங்குகளையும், அரசினரதும் பிற பொது நிலையங்களின் கடன் பத்திரங்களையும் வாங்கவும், விற்கவும், மாற்றவும் உதவும் நிலையமே (Institution) பங்கு மாற்றகமாகும். பங்கு மாற்றகங்களின் அவசியம் பற்றியும், அவை இயங்கும் முறை பற்றியும், அவற்றில் சிறந்த முறையில் முதலீடு செய்து நம் முதலை வளர்ப்பதுடன் நாட்டுக்குச் செவ்வையான முறையில் நாம் எவ்வாறு உதவ முடியும் என்பதுபற்றியும் இக் கட்டுரையும், இதனைத் தொடர்ந்து வெளிவர இருக்கும் கட்டுரைகளும் விளக்கும்.

ஒரு நாடு வளமடைய வேண்டுமாயின் அதன் வளங்கள் (Resources) சிறந்த முறையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும். ஒரு நாட்டின் வளங்களை பல செயல்களுக்குப் பயன்படுத்த முடியும். இத்தகைய வாய்ப்புகளில் சிறந்த வாய்ப்புகளை மட்டுமே தேர்ந்தெடுத்து அவற்றில் வளங்களை பயன்படுத்துவதன் மூலமே செல்வச் செழிப்புடைய நாட்டை உருவாக்க முடியும். இன்று பொருளாதார முறையில் மிகச் சிறந்து விளங்கும் அமெரிக்கா போன்ற நாடுகள், இம் முறையிலேயே பொருளாதாரத் துறையில் வெற்றி கண்டுள்ளன.

இவ்வளங்களுள் முதல் (Capital) என்பது மிக முக்கியமானதாகும். முதல் பற்றுக்குறையுடையது குறிப்பாக, பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள நாடுகளில் இப் பற்றுக்குறை மிகத் தீவிரமாகக் காணப்படுகிறது. முதலின் துணைகொண்டே பிற வளங்களையும் செவ்வையான முறையில் நாம் பயன்படுத்துதல் முடியும்.

நாம் ஒவ்வொருவரும் பெறும் வருவாயில் ஒரு பகுதி அரசினருக்கு வரியாகத் தந்துவிடுகிறோம். எஞ்சியுள்ளதில் பெரும் பகுதி நமது அன்றாடத் தேவைகளுக்காகச் செலவிடப்படுகிறது. இதுபோக மிஞ்சும் பணத்தை அவசியத் தேவையில்லாத பண்டங்களில் நாம் செலவிடக் கூடும். இல்லையேல் அதனைச் சேமிக்கக் கூடும். இவ்வாறு நாம் சேகரிக்கும் பணமே நமது முதலாகும்.

இவ்வாறு நாம் வலிந்து நமது ஆசைகளை அடக்கி ஈட்டும் முதலை நாம் முதலீடு (Invest) செய்யமுற்படுவோம். இந்தமுதலீடு நமக்கும், நாம் வாழும் சமூகத்திற்கும் பயன் உடையதாகவோ அன்றி பயனற்றதாவோ இருத்தல் கூடும். நமது முதல் நமக்கும், நமது சமூகத்திற்கும் பொருளாதார முன்னேற்றம் தருவதாக

முதலீடு செய்யப்படும்போது அதனைப் பயன் தரு முதலீடு (Productive investment) என்பர். முதலீடு, பொருளாதார வளர்ச்சிக்குப் பயனற்றதாக அமையும் நிலையில் அதனை பயனிலா முதலீடு (Un productive investment) எனலாம். உதாரணமாக, நமது சேமிப்பை அரசினர் கடன் பத்திரங்கள், பாங்குகள் என்பனவற்றில் நாம் முதலீடு செய்வதில் பயன்தரு முதலீடாகும். ஏனெனில் இவ்வாறு முதலீடு செய்யப்படும் சேமிப்பு, நமக்கு ஆண்டுதோறும் ஒழுங்காக வருவாய் (Income) கொணர்ந்து நமது பொருளாதார நிலையை முன்னேற்றுவதுடன், நாட்டின் ஆக்கவேலைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

நீர்ப்பாசன வசதியைப் பெருக்கி உணவு உற்பத்தியைப் பெருக்க உதவும். அணைகள் கட்டவும், மக்களின் தேவைகளைத் தணித்து நாட்டை வளமடையச் செய்யும் தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும், மக்களது வாழ்க்கைத் தரத்தையும், சமூக கல்வி நிலைகளையும் உயர்த்தும் பிற சமூக ஆக்கப் பணிகளுக்காகவும் இத்தகைய முதலீடுகள் உதவுகின்றன. மாருக, விலை உயர்வதை எதிர்பார்த்து காலிமனைகளில் முதலீடு செய்யப்படும் சேமிப்பு, பயனிலா சேமிப்பாகும். ஏனெனில், இத்தகைய முதலீடு ஒழுங்கான வருவாய் தராததுடன் நாட்டிற்கும் பயனுள்ளதாக அமைவதில்லை. மாருக இத்தகைய முதலீடு காலி மனைகளின் விலையை உயரச் செய்வதன் மூலம் ஆலைகள் கட்டவும், குடியிருக்க வீடுகள் கட்டவும் தேவைப்படும் நிலங்களின் விலையை அதிகரிக்கச் செய்து, பொருளாதார வளர்ச்சியைக் குன்றச் செய்கிறது.

பயன்தரு வகையில் முதலீடு செய்ய மிகச் சிறந்த வகை செய்து தருவனவாக பங்கு மாற்றகங்கள் அமைகின்றன. ஒரு நாட்டின் வளர்ச்சியை அந்நாட்டின் தொழில் சிறப்பைக் கொண்டு கண்டு கொள்ளலாம். தொழில்கள் ஒரு நாட்டின் வளங்களை நன்கு பயன்படுத்துவதுடன் அவற்றின் மூலம் நாட்டின் செல்வத்தைப் பெருக்கவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உதவுகின்றன. இத்தகைய தொழில்கள் தோன்றவும், வளரவும், மக்களது சேமிப்பு இதற்கென முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

இவ்வாறு மக்களது சேமிப்பைக் கவர்ந்து அவர்கள் அதனை பயன்தரு வகையில் தொழில்களில் முதலீடு செய்து, தாமும் தமது நாடும் வாழ உதவும் இடமே பங்கு மாற்றகமாகும்.

(தொடரும்)

ஜெர்மன் விஞ்ஞானிகளுக்கு அமெரிக்கப் பரிசு!

விஞ்ஞானத் துறையில் அரிய சாதனைகள் புரிந்ததற்காக ''1966-ம் ஆண்டுக்கான என்ரிகோ பெர்மி பரிசை'' ஆட்டோஹான், பிரிட்ஜ் ஸ்டிராஸ்மான் என்ற இரு ஜெர்மன் விஞ்ஞானிகளுக்கும், வியன்னுவில் பிறந்து ஜெர்மனியில் பணியாற்றியவரான லிஸ்மெய்ட்னர் என்ற பெண் விஞ்ஞானிக்கும் கூட்டாக அமெரிக்க அணுசக்தி கமிஷன் வழங்கியுள்ளது. தங்கப் பதக்கங்களுடன் மூன்றரை லட்சம் ரூபாய் ரொக்கமும் இவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 1938 டிசம்பரில் யுரேனியம் அழிவு குறித்து ஆட்டோ ஹான், பிரிட்ஜ் ஸ்டிராஸ்மான் ஆகிய இருவரும் நடத்திய ஆராய்ச்சிகளின் பலனுக, அணுசக்தி துறை அபிவிருத்தி அடைந்தது எனலாம். 1944-ல் இதற்காக இவர்களுக்கு ''நோபிள் பரிசு' வழங்கப்பட்டது.

'போ' என்ருல் போகும் நாற்காலி!

சமீபத்தில் மேற்கு ஜெர்மனியில் முன்ஸ்டர் நகரில் நடைபெற்ற சர்வதேச மருத்துவக் கருத்தரங்கில் இடம் பெற்றிருந்த ஒரு புதுமையான நாற்காலி, 27 நாடுகளைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களை வியப்பில் ஆழ்த்தி விட்டது. ஏனெனில் இந்த நாற்காலி, 'போ' என்ருல் போகும் 'நில்' என்ருல் நிற்கும். குரலினுல் இயங்கும் நாற்காலி இது. பாரிசவாயு அல்லது காயங்களின் காரணமாக நடக்க முடியாதவர்கள் இந்த உருளை நாற்காலியில் அமர்ந்து உத்திர விட்டால் அவரது குரலுக்கு ஏற்ப நாற்காலி இயங்கும்.

டச்சு பழம் பொருள் கண்காட்சியில் பாரதச் சிலைகள்

பழங்குடி மக்களிடம் பொருள்கள் சேகரித்தவர் பட்டபாடு!

உலகம் மாறிவருகிறது; நவீன உலகில் அவ்வப்போது விந்தைகள் பல நிகழ்ந்து வருகின்றன. ''பழைய உலகத்தை'' இப்போது பார்க்க முடிந்தால், அது புதுமையான அனுபவம் என்பதில் சந்தேகமில்லை. பழைய உலகின் 'குறுகிய பிரதிபலிப்பை'' ராட்டர் டாம் நகரில் அமைந்துள்ள அரும் பொருள் கண்காட்சி (மியூசியம்) யில் காணலாம். கிழக்கு ஆசிய நாடுகளில் திரட்டப்பட்ட பல அரிய பொருள்கள் இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இவற்றைப் பார்ப்போருக்கு, அன்றைய நிலைக்கும், இன்றைய நிலைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை உணரலாம்.

ஆப்பிரிக்க நாடுகளிலும், தூரக் கிழக்கு நாடுகளிலும் அடர்ந்த காடுகளுக்கிடையே வாழ்ந்துவந்த புராதன மக்களிடம் மதப் பிரச்சாரம் செய்து, அவர்களைச் சீர்திருத்தும் பணியில் ஈடுபட்ட கிருஸ்தவ பாதிரியார்கள் தாடி வளர்த்திருந்த மர்மம் என்ன?

''பழங்கால குடிமக்கள் ஒருவரை ஒருவர் வரவேற்கும்போது, கன்னத்தோடு கன்னம் உரசுவார்கள். இதற்காகவே பாதிரியார்கள் தாடி வளர்த்தார்கள் போலும். ''இவ்வாறு கூறியவர், குரோன் வெல்ட் என்பவர். இவர் ராட்டர்டாம் நகரில் அமைந்துள்ள அரும்பொருள் கண்காட்சிக்கு இந்தோனேசியா, நிலுகினி, ஜாவா, சுமத்ரா போன்ற இடங்களிலிருந்து பல அரிய பொருள்களை வாங்கித் திரட்டி அனுப்பியவர்.

தொன்மையான பழம்பொருள் கண்காட்சி சாலைகளில், ராட்டர்டாம் கண்காட்சி சாலையும் ஒன்றாகும். 1883-ம் ஆண்டில் சில தனிப்பட்ட பழம் பொருள் சேகரிப்பவர்கள் ஒன்று சேர்ந்து, நகரசபையை வற்புறுத்தி இக்கண்காட்சி சாலையை நிறுவச் செய்தனர். இக் கண்காட்சி அமைந்திருந்த கட்டிடத்தில் ஆரம்ப காலத்தில் ஒரு தொழிற்கூடமும், ஏன் போலீஸ் நிலையமும் அமைந்திருந்தன. ராட்டர்டாம் துறைமுகமாதலால், ஏராளமான வெளிநாடுகளிலிருந்து பலவித பண்டங்கள் வர ஏதுவாக இருந்தது. அந்தக் காலத்தில் பழம் பொருள் கண் காட்சியைக் காண ஏராளமான மக்கள் திரளுவதில்லை.

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஏராளமான சிலைகளும், இங்கு வைக்கப்பட்டுள்ளன. அந்தக் காலத்தில் இந்தியாவுக்கு வந்த ''டச்சு கிழக்கு இந்தியக் கம்பெனி'' உயர் அதிகாரிகள் திரும்பி வரும் போது, சிலைகளைக் கொண்டு வரும்படியாக உத்திரவிட்டிருந்தார்கள். இவ்வாறு கொஞ்சம் கொஞ்சமாக பல்வேறு பகுதிகளிலிருந்து திரட்டப்பட்ட பொருள்கள், ஏராளமாகக் குவிந்தன. 1900 க்குப் பின்னர்தான் ராட்டர்டாம் நகரசபை இக் கண்காட்சி குறித்து அக்கறை செலுத்த ஆரம்பித்த போதிலும், 1950-ல் இதற்கென அரிய பழம் பொருள்களை திரட்டுவதற்காக தனியாக தொகை ஒதுக்கப்பட்டது.

இக் கண்காட்சியின் சிறப்புக்கு 'குரோன் வெல்ட்' என்ற தனிப்பட்ட கலைவணிகரின் ஆர்வம் முக்கிய காரணமாகும். இவரது அயராத முயற்சி காரணமாக, தூரக்கிழக்கு நாடுகளில்

அடர்ந்த காடுகளில் மறைந்துகிடந்த பல அரிய பழம் பொருள்கள் கொண்டுவரப்பட்டன. இந்தோனேசியா அரசினரிடம் நியூகினி ஒப்படைக்கப்படுவதற்கு முன்னர், அங்கு சென்று அவர் பல அரிய பொருள்களை வாங்கிக் கொண்டு வந்தார். இதே போல இந்தோனேசியா கலைப் பொக்கிஷங்கள் பலவற்றையும் அள்ளிக் கொண்டு வந்தார்.

தூரக்கிழக்கில் ஆங்காங்கு சிதறிக்கிடக்கிற ஏராளமான தீவுகளுக்கு குரோன்வெல்ட் சென்றார். நியூகினியில் சில கூலியாட்களை மட்டும் அமர்த்திக் கொண்டு, ஆயுதம் எதுவும் இன்றி சென்றார். அவ்வளவுக்கும் அங்கு வழங்கப்படும் ''பாபுவான் மொழி'' கொஞ்சம்கூட தெரியாது. எனினும் டச்சு மொழியிலேயே பேசி, ஏதேதோ சயிகைகள் காட்டி, காரியத்தைச் சாதித்துக் கொண்டுவந்தார்.

''கன்னத்துடன் கன்னம் வைத்து உரசிதான் அங்குள்ள மக்கள் வரவேற்பு அளித்தார்கள். இதனால்தான் என்னமோ, கிருஸ்தவ பாதிரியார்கள் தாடி வளர்த்திருந்தார்கள்'' என்று இவர் வேடிக்கையாகக் கூறினர். கேடயங்கள், மத்தளங்கள் போன்றவற்றை இவர் வாங்கி அனுப்பினர். சில அரிய பொருள்களின் பயன் என்ன என்பது, அப்பழங்குடி மக்களுக்கே தெரியாது. பரம்பரையாக இருந்துவந்தது என்பதைத் தவிர, அவர்களுக்கு எதுவும் தெரியாது.

இவ்விதத் தீவுகளில் ''தலையைக் கொய்து'' கொண்டு செல்லும் பயங்கர குடிமக்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் அவர்களைப் பற்றி இவருக்குக் கவலையில்லை. முதலைகளைக் கண்டால் இவருக்கு ஒரே பயம். நியூகினியில் நீர்த்துறைகளில் ஆயிரக்கணக்கான முதலைகள் பதுங்கிக் கிடக்கும். தவறிப்போய் தண்ணீரில் விழுந்தால் அவ்வளவுதான் மனிதன் மாயமாய் மறைந்து விடுவான்.

1883-ம் ஆண்டிலிருந்து 1949-ம் ஆண்டு வரை ராட்டர்டாம் பழம் பொருள் கண்காட்சி படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறது. பிலிப்பைன்ஸ் முதல், மத்திய அமெரிக்கா வரை பல நாடுகளிலிருந்து திரட்டப்பட்ட 55,000 அரிய பழம் பொருள் - சாதாரண மரச்சிலை உள்பட, திபெத்திய வெங்கலச் சிலைகள் வரை இடம் பெற்றுள்ளன. ராட்டர்டாம் கண்காட்சிக்கு சென்றால், 'பழைய உலகின்' குறுகிய பதப்பைக் காணலாம். ○

செங்குத்தாகக் கிளம்பும் விமானம்.

கனவு நனவாகிறது.

பொதுவாக விமானங்கள் சிறிது தூரம் காங்கிரீட் பாதையில் ஓடிய பின்னரே மேலே கிளம்புகின்றன. ஜெட் விமானங்களுக்கு இன்னும் அதிக நீளமும் அகலமும் கொண்ட பாதைகள் தேவையாக இருக்கின்றன. எல்லா விமானங்களும் நிற்கும் இடத்திலிருந்து செங்குத்தாக கிளம்பினால் எவ்வளவு வசதியாக இருக்கும்? இந்த எண்ணத் துடிப்பை, செயலில் நிறைவேற்ற ஜெர்மன் இஞ்ஜினியர்கள் முனைந்துள்ளனர்.

ஒரு காலத்தில் விமானம் கட்டும் தொழிலில் ஜெர்மன் முன்னணியில் இருந்தது. ஆனால் உலகப் போரில் ஜெர்மன் விமானத் தொழில் உருக்குலைந்தது. இப்போது மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது நவீன விமானங்கள் தயாரிப்பில் மீண்டும் ஜெர்மன் பெயர் எடுக்க ஆரம்பித்துள்ளது. குறிப்பாக செங்குத்தாகவும் குறுகிய பாதையிலும் கிளம்பக் கூடிய விமானங்கள் தயாரிப்பதில் ஜெர்மன் இஞ்ஜினியர்கள் தீவிர கவனம் செலுத்துகிறார்கள்.

1964 ஏப்ரலில் பவேரியாவில் 40 சதுர கஜ பரப்பளவு இடத்திலிருந்து ஒரு விமானம், செங்குத்தாகக் கிளம்பியது. முற்றிலும் பாதுகாப்பான செங்குத்தாகக் கிளம்பும் விமானத்தை உருவாக்கும் ஆராய்ச்சி வெற்றியடைய இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கலாம்; ஏராளமான செலவும் ஆகும். எனினும் இவ்வித விமானங்கள் உருவானால், நீண்ட விமானப் பாதைகளை அமைக்க வேண்டிய அவசியமில்லை. ஒன்று மட்டும் நிச்சயம். அடுத்த தலைமுறையினர் செங்குத்தாகக் கிளம்பும் விமானங்களில் பயணம் செய்யப் போவது நிச்சயம். (யூ.பி.எஸ்)

வெல்க மறவர்! வெல்க உழவர்!

மறைந்த நம் முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவர்கள், வழங்கிய இம் முழக்கம் சொல்லளவில் நில்லாது, செயலால் போற்றப்பட வேண்டிய நல்லதோர் திட்டமாகும். போர் முனை வெற்றிக்கு, ஏர்முனை வெற்றியே அடிப்படை என்பதை இது மிகவும் நன்ருக வலியுறுத்துகிறது. பழந்தமிழ் இலக்கியங்கள் இதனை வற்புறுத்தியுள்ள அழகினை இந்நேரத்தில் நினைந்து பெருமிதம் கொள்ளுகின்ருேம்.

''பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்'' (குறள்: 1034)

என உழவர் தம் பெருமையினை எடுத்தோதுகின்ருர் வள்ளுவப் பெருந்தகை.

தம்நாட்டு மன்னனுக்கு வெற்றிகளைப் பெருக்கி அவனி முழுதும் அவனதாகக் காண்பர் நல்லேருழவர் என்று நவின்றுள்ளார்

''இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப் போர்'

(சிலப்பதிகாரம்: 10:149-150)

என்று இளங்கோவடிகள் இயம்பியுள்ளார். புரவலராகிய பெருநிலம் ஆளும் முடிமன்னர் பெறும் பெருமைகளை எல்லாம் உழவுதான் விளைவு செய்கின்றது என்று செப்பியுள்ளார் அவர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைப் பாடி நிலவரியிலிருந்து விடுதலை பெற்ருர் வெள்ளைக் குடி நாகனுர். அவர் பாடிய பாட்டு புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

போர்க்களத்தில் மறவர் படை ஆற்றிய வீரச்செயல்களைக் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகின்ருர். எதிர்த்து வரும் பகைவர் படையோடு மோதிப் பனைமரத் துண்டங்கள் போல் சிதறி வீழுமாறு யானைகளைக் கொன்றழித்தனர்; முன்னேறும் மாற்ருரின் மனச் செருக்கை ஒழித்தனர்; எதிரிகள் புறமுதுகிட்டோடவே ஆரவார நகை முழக்கினர்; மாறுபடுசூரரை வதம் செய்த பெருமிதத்தோடு ஏறுநடை நடந்தனர் படை வீரர்! இத்தகைய வெற்றி எதன் பயன்? வயலில் விளைந்த நெல்லின் பயனன்ருே!

''வெளிற்றுப் பனந்துணியின்
வீற்று வீற்றுக் கிடப்பக்
களிற்றுக் கணம் பொருத கண்ணகன் பறந்தலை
வருபடை தாங்கிப் பெயர் புறத் தார்த்துப்
பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே!''
(புறநானூறு : 35)

என்று புலவர் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இவற்றையெல்லாம் எண்ணிப் புதிய வலிமை பெறுகின்ருேம்! வீறு சிறந்த உறுதியை அடைகின்ருேம்! நம்மால் நாடு அடையும் பேறு வேறில்லை என அறிகின்ருேம். செய்வோம் என்று நிச்சயம் கொள்ளுகின்ருேம். சிந்தை துள்ளுகின்ருேம்.

''வெற்றிடந் தோறும் விதைத்திடுவோம்!
வீணர் கொட்டம் சிதைத்திடுவோம்!''
என்று புதிய பண் பாடுகின்ருேம்.

சிற்றூர் தோறும் வெற்றிடங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அங்கெல்லாம் பயிர்செய்ய வகை காணலாம். விதைகள், நாற்றுகள், பதியங்கள், எருவகைகள் முதலியவற்றை நன்கொடையாக வழங்க ஏற்பாடு செய்தல் நல்ல பயன் தரும்.

நகரங்களில் உள்ளது சிற்றிடமாயினும் ஊக்கமாக உழைப்போர் முன்வருதல் அரிது. மண்தொட்டிகளில் வைக்கக் கூடிய செடிவகைகளையும் கீரைவகைகளையும் வளர்க்குமாறு

ஊக்குவிக்க வேண்டும். பெரும் கட்டிடங்களிலும் பங்களாக்களிலும் அலங்காரச் செடிகள் இடத்தை அடைத்துக்கொண்டிருக்கின்றன. அவற்றை யெல்லாம் அப்புறப்படுத்திவிட்டுப் பயன் மிக்க காய்கறிச் செடிகளை வளர்க்க. மேட்டுக் குடியினர் முன்வர வேண்டும். தானிய வகைகளைப் பயிர் செய்யப் போதிய இடமிருந்தால் தவருமல் ஆர்வத்துடன் செய்ய வேண்டும். இன்று இதைவிடச் சிறந்த அறம் வேறில்லை.

உணவாலானது உடம்பு, உடம்பினை வளர்க்க மேலும் உணவு வேண்டும். உணவு எனப்படுவது நீரும், நிலத்தில் விளைவதும் ஆகும். இவை 'இருமருந்து' எனப்படுகின்றன. 'மருந்து' என்பது அமிழ்தம் ஆகும். உடம்பில் உயிரை அழியாமல் நிலைபெறச் செய்வன இவை ஆதலின் 'மருந்து' எனப்பட்டன. ''இரு மருந்து விளைக்கும் நன்னுட்டுப் பொருநன்'' என்பது புறநானூறு (70). எனவே அவ்வவர் முடிந்த அளவில் தானியமோ, காய்கறியோ, கீரையோ விளைவித்து இப்பெரும் அறத்தினை வளர்க்க அனைவரும் முன்வரவேண்டும். ''தானிய மணி ஒன்று விளைந்த இடத்தில் இரண்டினை விளைவிப்போம்!'' என்று நம் பிரதமர் சாஸ்திரி அவர்கள் பெரும் வேட்கையுடன் குன்ரு ஆர்வத்துடன் வேண்டுகோள் விடுத்தார். இதன் பயனுக இப்போது விளைவதுபோல் உற்பத்தி இரட்டிப்பாக விளையும், ஒவ்வொருவரும் கைகொடுத்து உதவினுல் நிச்சயம் ஏர்முனையில் பெரும் பெரும் வெற்றிகளை அறுவடை செய்ய முடியும்.

இதிலே அனுபவ அறிவு மிகவும் முக்கியம். அனுபவம் உள்ளவர்கள் தங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், தெரிந்தவர்களுக்கும் உளங்கொள்ளுமாறு எடுத்துச் சொல்ல வேண்டும். இல்லை யென்ருல் பட்டபாடெல்லாம் வீணுகிவிடவும் ஏதுவாகலாம். விதைத்து நீர்ஊற்றி வளர்ப்பது கூடப் பெரிதன்று; தக்க முறையில் வேலியிடப்பட்டுப் பாதுகாத்து உருவாக்குவதே பெரிது. ஆடு, மாடு, கோழிகளிடமிருந்தும், குறும்புக் குழந்தைகளிடமிருந்தும் கண்டிப்பாகப் பாதுகாக்க வேண்டும்.

ஆக்கப் பணிகளைச் செய்வதே குறிக்கோளாகக் கொண்டு அரசாங்கத்தின் கரங்களுக்கு வலிமையையும், உறுதியையும் ஊட்டும் வகையில் இத்திட்டத்தில் அனைவரும் பங்கு கொள்வோமாக!

எல்லைகாக்கும் வீரர்களைக் கணமும் மறவாமல் நினைவோமாக!

கையிழந்தும், காலிழந்தும், உயிரிழந்தும் நாடுகாக்கும் நல்லோர் பொருட்டு நம்மால் முடிந்த அனைத்தும் செய்வோமாக

வெல்க உழவர்! அதனுல் வெல்க மறவர்! என்று முழங்குவோமாக!

*

பளுதூக்கி வாகனங்களுக்கு விசேஷ அதிர்ச்சி தாங்கி கருவிகள்

வாகனத்தின் பின்புறம் மட்டும் அதிகமான பாரத்தை ஏற்றி செல்ல வேண்டிய அவசியமுள்ள தனிப்பட்ட மோட்டார் வண்டிகள், ஸ்டேஷன் வாகன்கள், வான்கள் ஆகியவற்றிற்காக, புதுவித அதிர்ச்சி தாங்கிக் கருவி ஒன்றை டச்சு கம்பெனியான 'கோனி' உருவாக்கியுள்ளது.

வழக்கமான ''இரட்டைச் செயல்முறை காற்றமுத்த அதிர்ச்சி தாங்கி கருவியுடன் கூடுதலான 'ஸ்பிரிங்' ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கின்றது. அதிர்ச்சி தாங்கிக் கருவிக்கும், 'பிஸ்டன்' கம்பிக்கும் இணையாக, இந்த 'ஸ்பிரிங்' அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புதிய அதிர்ச்சி தாங்கி-ஸ்பிரிங் இணைப்புச் சாதனம், பின்புற அதிர்ச்சி தாங்கிக் கருவிக்குப் பதிலாக வாகனத்தில் பொருத்தப்படுகிறது. இதனுல் வாகனத்தின் பின்புறத்தில் எவ்வளவு தான் பாரமேற்றினுலும், வாகனம் வழக்கமான 'நிலையில்' தான் இருக்கும். வளைவான சாலைகளில் செல்லும் போதும் வாகனம் சிறிதும் அதிர்ச்சிக்கு ஆளாவதில்லை. இப்புதிய கருவியினுல் காரின் டயர்களும் தேய்வதில்லை.

சதுரங்க விளையாட்டு CHESS பிறந்ததும் பாரதத்திலே

டச்சு மக்களின் தணியாத ஆர்வம்

பிறரது சொல்படியே தலையை ஆட்டிக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து, ''சதுரங்க காய்கள் போல ஆட்டிவைக்கப்படுகிறார்கள்'' என்று குறிப்பிடுவதுண்டு. சதுரங்க விளையாட்டு விளையாடுகிறவர்களுக்கு கூர்த்த மதி நுட்பம் இருக்க வேண்டும். ஒவ்வொரு சதுரங்க காயையும் மிருந்த யோசனையுடன் நகர்த்திவைப்பார்கள். சதுரங்க விளையாட்டு, எங்கு பிறந்தது என்கிறீர்கள்? பாரதத்தில் தான்!

டச்சு நாட்டில் 'செஸ்' (chess) சதுரங்க விளையாட்டு தற்போது பிரபலமாக இருக்கிறது. 1800 ஆம் ஆண்டு வரை, சதுரங்க விளையாட்டு அந்நாட்டில் காலூன்றவில்லை. அதற்கு முன்னால், சதுரங்க விளையாட்டில் குறிப்பிடத்தக்க வகையில் டச்சுக்காரர் பெரும் புகழ்பெறவில்லை.

1200 ஆம் ஆண்டில் டச்சுக்காரர் சிலர் சதுரங்கம் விளையாடியிருக்க வேண்டும் என்பதற்கு சில தடையங்கள் கிடைத்துள்ளன. 1343 இல் வாழ்ந்த ஹாலந்து பிரபு நாலாவது வில்லியம் வெனிஸ் நகருக்குச் சென்றிருந்த போது, அங்கு அங்கிருந்து இரு சதுரங்க பலகைகளை வாங்கிக் கொண்டு வந்ததாக வரலாறு கூறுகிறது. 1615 இல் வாழ்ந்த மாரீஸ் பிரபு, செம்பினால் தயாரிக்கப்பட்ட சதுரங்க பலகையில் தினசரி சதுரங்கம் விளையாடி வந்திருக்கிறார்.

சதுரங்கம், கி. பி. 900 ஆவது ஆண்டில் ஐரோப்பாவில் வழங்கி வந்துள்ளது. டச்சு, ஸ்பெயின் நாடுகளில் சதுரங்கம் விளையாடப் பட்டு வந்திருக்கிறது. இதன் பின் மேற்கு ஐரோப்பாவிலும் சதுரங்கம் பரவியது. எனினும் ஏழாவது நூற்றாண்டில் இந்தியாவில் தான் சதுரங்கம் பிறந்தது என்பதில் சந்தேகமில்லை.

சர்வதேசப் புகழ்பெற்ற சதுரங்க விளையாட்டு வீரரான கன்னிங்காம் (ஸ்காட்லாந்து) ஹேக் நகரில் 1710 இலிருந்து 1730 வரை வாழ்ந்தார். அது போது ஏராளமான சதுரங்க விளையாட்டு வீரர்கள் அங்கு வந்து ஆடினார்கள். இதுபோல பிரஞ்சு சதுரங்க வீரரான பிலிடர், டச்சு நாட்டில் சிறிது காலம் தங்கியபோது, ராட்டர்டாம், திஹேக், ஆம்ஸ்டர்டாம் ஆகிய நகரங்களில் சதுரங்க போட்டிகள் நடைபெற்றன.

1813 ஆம் ஆண்டில் தான் சதுரங்க விளையாட்டில் டச்சு பெயர் பிரகாசிக்கத் தொடங்கியது. மார்டின்வான் குருஸ் என்பவர். சதுரங்க விளையாட்டு பிரபலமடைந்தது.

டச்சு நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் மாக்ஸ் ஈவ், 1921 முதல் 1957 வரை தேசிய சதுரங்க சாம்பியனாகவும் 1935 முதல் 1937 வரை உலக சாம்பியனாகவும் விளங்கினார். சதுரங்க விளையாட்டுகள் குறித்து இவர் பல நூல்களை எழுதினார். தற்போது இவர் ஓய்வு பெற்று அமைதியாக காலம் கழிக்கிறார். இவரை அடுத்த டானர் என்பவர், பல்வேறு சர்வதேச சதுரங்க விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிக் கொடி நாட்டி வருகிறார்.

நல்ல காடு வளர்ப்போம்!

''காவியம் செய்வோம்' நல்ல காடு வளர்ப்போம்'' என்று பாடினார் பாரதியார். ''காவியம் செய்வோம்' என்ற மூச்சிலேயே ''நல்ல காடு வளர்ப்போம்'' என்று பாடிய தேன்? கலை உணர்த்தும் கற்பனையில் மூழ்கிவிடாமல் உலகியல் உண்மையைப் போற்ற வேண்டும் என்று வலியுறுத்துவதே பாரதியின் நோக்கம். அதற்கொரு துணை- உறுதுணை காடு வளர்ப்பு! அடர்ந்த காடுகள் வளமாக வளர்ந்திருந்தால் கருமுகில்கள் படியும்; வான்மழை பொழியும்; வயல்கள் செழிப்புறும்! விறகுக்காக மரங்கள் வெட்டப்படுதல் மழைபெய்யாமைக்கு ஒரு முக்கியமான காரணம் என்று நீண்ட நாட்களாகச் சொல்லி வருகிறார்கள்.

ஐ.நா. அவையின் உணவு–வேளாண்மை நிறுவனம், ஐந்தாண்டுகட்கு ஒரு முறை உலகின் வனவளங்களை ஆராய்கிறது! நான்காவதுமுறை ஆராய்ந்து பல பகுதிகளில் வறட்சி நிலவும் உண்மையைத் தெளிந்து காடுகளைவளர்க்கவேண்டுவதன் இன்றியமையாமை பற்றி எச்சரிக்கை விடுத்துள்ளது. முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் கூட தங்கள் தங்கள் வனவளங்கள் போதியஅளவில் உள்ளனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. காடுகள் அழிப்பு மழை பெய்விக்கும் ஆற்றலைக் குறைத்து விடுவதனால் உணவு, காய்கறிகள் முதலியவை போதிய அளவில் விளைய முடியாமல் போகிறது. தமிழக கவர்னர் திரு. உஜ்ஜல் சிங் அவர்கள் அண்மையில் நீலகிரி மலையில் பேண வேண்டிய வன வளப்பாதுகாப்பின் அவசியத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். இதற்கு மாறான கருத்தைத் தெரிவிப்பவர்களும் உளர். இந்திய மலைகளின் வன வளங்கள் அழிக்கப்படுவதனால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து அதற்கொரு தீர்வு காண்பதன் முக்கியத்துவத்தையே அது வலியுறுத்தும், உணவு–வேளாண்மை நிறுவனம் சொல்லும் கருத்தும் கவனிக்கத்தக்கது. ''இப்போதுள்ள காடுகள் அனைத்துமே நமக்கு வேண்டிய வளங்களாகக் கருதத் தக்கவையல்ல; மக்கட் சமுதாயத்திற்குப் போதிய அளவுகூடப் பயன் தரவில்லையானால் அவை வேண்டத்தக்கவையல்ல.'' எனவே வளமுள்ள வனங்கள் வேளாண்மைக்கு வேண்டிய மழை பெய்விக்கவும், போதிய அளவு விறகுக்குப் பயன்படும் மரங்களைத் தரவும் வல்லவையாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்யலாம்.

விஞ்ஞானம் உதவும் எரிபொருள் சாதனங்களைக் காட்டிலும், இயற்கை உதவும் மரங்களை வளர்ப்பதன் தேவையை நான்காம் திட்டம் வலியுறுத்துகிறது. விலையுயர்ந்த தேக்கு முதலிய மரங்களை வளர்ப்பதும் நாட்டுக்கு நன்மை தருவதாம். வேகமான வளர்ச்சியுள்ள மரங்கள்கூட வளர்ந்து முதிர்ந்து பயன்தருவதற்கு 15 ஆண்டுகள் செல்லுமாதலால் இரண்டாந்தர மரங்களைப் பயன் படுத்துமாறு நான்காம் திட்டம் அறிவுரை கூறுகிறது. இவ்வகை மரங்கள் இப்போது பெரும்பாலும் வீணாக்கப்படுகின்றன. தக்க பாதுகாப்பளித்துப் பக்குவமான வளர்ச்சிபெறுமாறு செய்வதனால் இவற்றைப் பயன்படும் தகுதி உடையனவாக மாற்றலாம். பிற எரிபொருள் சாத

னங்களைப் பயன்படுத்தாதவர்கள் எரிப்பதற்கு விறகையே வேண்டுவதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடியே தற்போது பெரிதாக உள்ளது. தரிசாகவும், புறம்போக்காகவும் உள்ள நிலங்களில் 50 ஏகர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலப்பரப்பில் விறகுக்கென்றே மரங்களைப் பயிர் செய்வதுதான் தக்க பரிகாரம் என்று நான்காம் திட்டம் நிலைமையை உணர்ந்து சொல்லியுள்ளது. இவ்வாறு பயிரிடவும் வேலி போடவும் வேண்டிய சாதனங்களை மத்திய அரசாங்கம் உதவ முன் வந்திருப்பதனால் பஞ்சாயத்துக்கள் இப்பணியை மேற்கொள்ளலாம். தேசிய அளவில் இத்திட்டங்களை மேற்கொண்டால் தான் நாடு முழுமைக்கும் உள்ள வனவளப் பற்றுக்குறையைப் போக்கமுடியும். மழை இன்மையால் ஏற்பட்டுள்ள துன்பங்களை இரண்டாண்டுகளாக நுகர்ந்து கொண்டிருக்கிறோம். எனவே இன்றியமையாத, உடனடித் தேவையான, முதன்மையான இம் முயற்சி நடைமுறையில் – செயலில்– இடம் பெறுவதாக!

ஆம்! "நல்ல காடு வளர்ப்போம்!" அதனால், நாடுவளங்கொழிக்கச் செய்வோம்!

முட்டைகள் வைக்க புதிய 'பிளாஸ்டிக்' கூடு

முட்டைகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அனுப்பும் போது, பாதுகாப்பாக அனுப்பாவிடில், முட்டைகள் உடைந்து கெட்டு விடும். இதைத் தவிர்க, புதுமையான 'பிளாஸ்டிக்' கூடு ஒன்றை டச்சு ஸ்தாபனம் ஒன்று உருவாக்கியுள்ளது. இந்த முட்டைப் பாதுகாப்பு கூடு, இரண்டு பாகங்களைக் கொண்டது. கீழ் தட்டில் முட்டைகளை பொதிந்து வைக்கக்கூடிய வகையில் பள்ளங்கள் இருக்கின்றன. மேல் தட்டில் முட்டைகளுக்கு ஏற்ப, குழிகள் இருக்கின்றன. கீழ் தட்டில் முட்டைகளை வைத்து மேல் தட்டினால் மூடினால் முட்டைகள் அசையாமல் பாதுகாப்பாக இருக்கும். இப்பிளாஸ்டிக் கூட்டின் வழியாக வெப்பம் உருவிச் செல்லாது; ஒரே சீரான காலநிலை இருக்கும்.

for unique performance

Use
'DHANA'
Totally Enclosed
Special Type
MOTORS
for Textile & Industries



✣ உழைப்புக்கும்
✣ நம்பிக்கைக்கும்
✣ நீடித்த உறுதிக்கும்

உரியது என்றால் அதுதான்

தன இன்ஜினியரிங்
மோட்டார் & பம்பு செட்டுகள்

DHANA
DHANA ENGINEERING INDUSTRIALS
ALAGAPURI STREET, POLLACHI
'Phone : 253 Grams : 'DHANA'

CRITERION-DEI63

உலகப் புகழ்பெற்ற அமெரிக்கக் கடிகாரம் சென்னையில் உற்பத்தி

வி. எம். செரியன்

டைம் பீஸ் கடிகாரத்தைக் கழற்றிப் பார்த்திருக்கிறீர்களா?

பார்த்ததுண்டு!

கழற்றியதைத் திரும்பப் பூட்டியதுண்டா?

இல்லை!

அப்போது இதைப்பாருங்கள்! என்று சொல்லி, என்னை அழைத்துச் சென்ற அமெரிக்கர், ஒரு நீண்ட மேஜைக்கு இருபுறமுமாக இரண்டு வரிசைகளில் பெண்கள் உட்கார்ந்து பற்பல வகையான வேலைகளைக் கண்ணுங் கருத்துமாகச் செய்வதைச் சுட்டிக் காட்டினர்.

மேஜையின் ஒரு கோடியில், ஒரு பெண் மணி தன் இடது கையில் கடிகாரத்தின் உட்புறச் சட்டம் ஒன்றைப் பிடித்துக் கொண்டு, வலது கையால் மேஜையிலிருந்து சில பாகங்களைப் பொறுக்கியெடுத்துப் பொருத்துவதையும், அவர் முன்னல் தொங்கும் தானே இயங்கித் திருப்புளி ஒன்று அப் பாகங்களை இணைத்து முடுக்குவதையும் கண்டேன்.

அப்படியே அச் சட்டம் அடுத்த பெண் மணியிடல் சென்றது; அவர் இன்னும் சில பாகங்களைச் சேர்த்தார்; இவ்வாறே மேசையின் மறுகோடி போய்ச் சேர்கையில், அழகிய வெஸ்ட்கிளாக்ஸ் கடிகாரம் முழுமையாக உருப்பெற்று நின்றது.

சென்னை நகருக்கு அருகே கிண்டியில் உள்ள தொழிற் பேட்டையில் டைம்-ஏய்ட்ஸ் இந்தியா (பிரைவேட்) லிமிடெட் என்னும் இந்தியக் கம்பெனியின் தொழிற் கூடத்தில் காணும் காட்சி இது. இக் கம்பெனி மாதத்துக்கு ஏறக்குறைய 5,000 டைம்பீஸ் கடிகாரங்கள் உற்பத்தி செய்கிறது.

இக் கம்பெனிக்கு நியூயார்க்கைச் சேர்ந்த ஜெனரல் டைம் கார்ப்பரேஷன் தொழில்நுட்ப உதவி வழங்குகிறது. பிக்பென், வெஸ்ட் கிளாக்ஸ் கடிகாரங்கள் உலகப் புகழ்பெற்றவை. அவற்றை உற்பத்தி செய்வது டைம் கம்பெனி தான்.

சென்னைத் தொழிற்சாலையின் வேலைகளை எனக்குக் காட்டிய அமெரிக்கர் ஜெனரல் டைம் கம்பெனியிலிருந்து இங்கு வந்து உதவி புரியும் எஞ்சினீயர் நெல்டன் ஐ. ஹாய்ட் கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள இந்தச் சிறிய தொழிற்சாலையில்நடக்கும் உன்னிப்பான வேலையைப்பற்றி இவருக்குக் கொள்ளைப் பெருமிதம்.

ஹாய்ட் சென்னைக்கு வந்து மூன்று ஆண்டுகளாகின்றன. உற்பத்தியும், பயிற்சியும் ஒரு சேர நடக்குமாறு தொழிற்சாலை வேலை தொடங்கிற்று. இத்திட்டத்துக்கு அவர் உதவி புரிந்தார். வெளியார் உதவியின்றி உள்ளூர்த் தொழிற்சாலை ஊழியர்களே உற்பத்தியைக் கவனித்துக் கொள்வதற்காகவே உற்பத்தியோடு பயிற்சியும் தொடங்கப் பெற்றது.

"முதலில் நாங்கள் கடிகாரத்தின் வெளிப் பாகங்களை மட்டும் இங்கு உற்பத்தி செய்து கொண்டோம். உட்பாகங்களை இறக்குமதி செய்தோம். இன்று அநேகமாக எல்லாப் பாகங்களையும் இங்கேயே உற்பத்தி செய்து

கொள்கிறோம். இதுதான் திட்டத்தின் நான்காவது கட்டம், இறுதிக் கட்டம்'' என்கிறார் ஹாய்ட். இப்பொழுது இங்கு செய்யும் கடிகாரத்தின் மொத்த அடக்க விலையில் நூற்றுக்கு 90 முதல் 95 பங்கு வரை உள்நாட்டுச்செலவுகளே என்கிறார்.

உற்பத்தியின் தரம் கொஞ்சமும் குறைபடச் சகிக்கமாட்டாதவர், ஹாய்ட். ஜெனரல் டைம் கம்பெனிக்கு அமெரிக்காவில் ஏழு இடங்களிலும், கனடாவில் எட்டு இடங்களிலும், ஸ்காட்லாந்து, ஹாங்காங், இத்தாலி,ஸ்பெயின் அயர்லாந்து, பிரேசில், மெக்சிகோ நாடுகளில் ஒவ்வோர் இடத்திலும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றில் எந்த இடத்தில் உற்பத்தியாகும் கடிகாரத்துக்கும் சென்னை ஆலையின் கடிகாரம் சளைத்ததல்ல என்றார் ஹாய்ட்.

டைம்-ஏய்ட்ஸ் தொழிற்சாலையின் இயந்திரங்களில் சிலவற்றை வாங்குவதற்கு இந்தியாவின் தேசியச் சிறிய தொழில் கார்ப்பரேஷன் உதவி செய்தது. மற்றும் சிலவற்றை வாங்குவதற்கு அமெரிக்காவின் வளர்ச்சிக் கடன் நிதி உதவி புரிந்தது.

கடிகாரத்தின் பல்வேறு பாகங்களையும் இணைத்துப் பொருத்தும் நுணுக்கமான வேலைக்குப் பெண்களை வைத்திருப்பது பற்றிக் குறிப்பிட்ட ஹாய்ட், ''ஏறக்குறைய நூற்றுக்கு ஐம்பது பேர் பெண்களே. மிகவும் திறமைசாலிகளாக விளங்குகிறார்கள்'' என்றார்.

கிண்டி தொழிற்பேட்டையில் 100 சிறிய தொழிற்கூடங்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் டைம்-ஏய்ட்ஸ். இந்தியாவில் உள்ள தொழிற்பேட்டைகளில் மிகச்சிறந்தவற்றுள் ஒன்றாக மதிக்கப்படுவது கிண்டி தொழிற்பேட்டை.

''நாட்டிலே சிறிய தொழில்கள் தோன்றுவதற்குத் தொழிற்பேட்டைகளை உருவாக்கியிருக்கும் இந்தியாவின் செய்கை வருங்காலம் உணர்ந்த செய்கையாகும். சிறிய தொழில்கள் நாட்டின் தொழில் நுட்பப் பிரச்னைகளைத் தீர்க்கும் என்பது திண்ணம்'' என்கிறார் ஹாய்ட்.

- அமெரிக்கன் ரிப்போர்ட்டர்.

சில பொருள்கள் தயாரிக்கும் கம்பெனிகளுக்கு வரிச்சலுகை சர்டிபிகேட்

நிதி அமைச்சு திட்டம் அறிவிப்பு

குறிப்பிட்ட பொருள்கள் தயாரிக்கும் கம்பெனிகளுக்கு வரிச்சலுகை சர்ட்டிபிகேட்டுகள் வழங்கும் திட்டம் ஒன்றை இன்று நிதி அமைச்சு அறிவித்தது. ஒரு குறிப்பிட்ட வருஷத்தில் அதிகப்படியாகக் கொடுக்க வேண்டி இருக்கும் வரி விஷயத்தில் இந்த ஏற்பாடு இருக்கும்.

1966-67 லிருந்து 1970–71ம் வருஷம் வரையுள்ள ஐந்து வருஷங்களில் எந்த வருஷத்திற்கும் விதிக்கப்படும் வருமான வரி, சர் டாக்ஸ் ஆகியவைகளில் அதிகப்படியாகக் கொடுக்க வேண்டியதற்கு இத்திட்டம் பொருந்தும்.

அதிகப்படி வரியில் 20 சதவிகிதத்திற்குச் சமமாக வரிச்சலுகை சர்ட்டிபிகேட்டுகள் வழங்கப்படும். ஆனால் இது வரி விதிப்பு வருஷத்தில் கம்பெனியின் லாபத்தின் மீது கொடுக்க வேண்டியிருக்கும் வரித் தொகையில் 10 சதவிகிதத்திற்குட்பட்டு இருக்க வேண்டும்.

இத்திட்டம் நவம்பர் முதல் தேதியிலிருந்து அமுலுக்குவரும். 1951ம்வருஷத்து தொழில் (அபிவிருத்தி, ஒழுங்குபடுத்தும்) சட்டத்தின முதல் ஜாபிதாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் எந்தப் பொருளின் உற்பத்தியிலும் ஈடுபட்டிருக்கும் எல்லா கம்பெனிகளுக்கும் இது பொருந்தும்.

தொழிலாளர் மேம்பாடே எங்கள் குறிக்கோள்

கோவை டி. வி. எஸ். ஊழியர் கூட்டத்தில் ஸ்ரீ டி. எஸ். ராஜம்

கோவை, செப். 30-கோவை டி. வி. எஸ்., சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் சதர்ன் ரோட் வேஸ் யூனிட் தொழிலாளர்களது சிறப்புக்கூட்டம் டி. வி. எஸ். ஓர்க்ஷாப்பில் 28-9-66 வ நடைபெற்றது. டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் சேர்மன் ஸ்ரீ டி. எஸ். ராஜம் அண்மையில் கோவைக்கு விஜயம் செய்ததை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சிறப்புக்கூட்டத்தில் சேர்மென் ஸ்ரீ டி. எஸ். ராஜத்துக்கு சங்கத்தின் தலைவர் ஸ்ரீ கே. மச்சுப்புளி மாலைஅணிவித்து வரவேற்ருர். சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ எம். ஏ. ஆசீர்வாதம் வரவேற்றுப் பேசுகையில், டி. வி. எஸ். ஸ்தாபனம் இன்று நாட்டிலே மிகவும் புகழ்வாய்ந்து ஓங்கி வளர்ந்த ஒரு ஆலமரத்திற்கு ஒப்பாக இருக்கிறது என்ருல் அந்த அளவுக்கு இந்த வளர்ச்சியடையச் செய்த பெருமை நமது மதிப்பிற்குரிய சேர்மனேயே சாரும். ஸ்தாபன வளர்ச்சியே நமது வளர்ச்சி என்பதை டி. வி. எஸ். தொழிலாளர்களாகிய நாம் நன்கு கடைப்பிடித்து வருவதாலேயே நமது தொழில் அமைதியாகவும் விவேகமாகவும் நமது வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டும் வருசிறது. எனவே பருத்து ஓங்கி வளர்ந்துள்ள இந்த டி வி. எஸ். எனும் ஆலமரம் மேலும் வளர்ச்சியடைய நாம் அனைவரும் அயராது உழைப்பதில் பங்கு கொள்வோம் என்று கூறினர்.

வரவேற்புக்கு பதிலுரைத்து ஸ்ரீ டி. எஸ். ராஜம் பேசுகையில், இந்த ஸ்தாபனம் இந்த அளவுக்கு வளர்ச்சியுற்றிருக்கிறது என்ருல் அது எங்களால் என்றும் கிடையாது எல்லாம் உங்களுடைய அபிமானமான உழைப்பும் ஆர்வமும் தான் காரணம். நீங்கள் அனைவரும் தங்கள் தங்கள் கடமை யுணர்வுடன் உழைத்திருக்காவிடில் இது பெரிய ஆலமரமாக காட்சி கொடாது. இன்று சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டு வருகிருர்கள்.

இன்னும் சில ஆயிரம் பேருக்குவேலை வாய்ப்புக்கள் புதிய, புதிய தொழில் மூலம் ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகிரும். தேசத்திலேயே தொழில் முன்னேற்றம் அடைய வேண்டும். உற்பத்தி அதிகரிக்க வேண்டும். நமது தேசம் வளர்ச்சியடைய வேண்டும். அதுபோல் நமது தொழிலாளர்களாகிய நீங்களும் விசேஷமாக மேன்மையடைய வேண்டும் என்பதுதான் எங்களது ஆசை, குறிக்கோள். ஏனெனில் உங்களுடைய உயர்ந்த வாழ்வில் தான் எங்களுடைய மதிப்பும், பெருமையும் இருக்கிறது. உங்களுடைய குறைபாடுகள் எதுவானலும் நீங்கள் நேரில் கேட்கலாம். பேசலாம். உங்களுடைய கஷ்டங்களை தீர்த்து வைக்க நாங்கள் ஒருபோதும் தயங்கமாட்டோம். நீங்கள் அனைவரும் கூடியதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

வியாபாரத்தின் வளர்ச்சிக்கு

தொழில் அரங்கில்

விளம்பரம் செய்யுங்கள்

அத்யாவசிய தொழிலாக அங்கீகரித்து சகல உதவியும் அளியுங்கள்

அகில இந்திய அச்சு எழுத்து தயாரிப்பாளர் சம்மேளன மகாநாட்டின் கோரிக்கைகள்

அச்சு எழுத்துத் தொழிலுக்கு உரிய அங்கீகாரத்தை மத்திய சர்க்காரும், ராஜ்ய சர்க்கார்களும் அளிக்க வேண்டும் என்றும் இத்தொழிலுக்கு அவசியமான எல்லா பாதுகாப்புகளையும் அளிக்க வேண்டுமென்றும் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய அச்சு எழுத்து தயாரிப்பாளர்கள் சம்மேளனத்தின் மூன்றுவது மகாநாடு கேட்டுக் கொண்டது.

இம் மகாநாட்டை தமிழ்நாட்டு முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் ஆரம்பித்து வைத்தார். சம்மேளனத் தலைவர் திரு. எஸ். என். குஹாரே தலைமை வகித்தார்.

சென்னை மாநில அச்சு எழுத்து தயாரிப்பாளர்கள் சங்க காரியதரிசி திரு. ஏ. எம். திருநாவுக்கரசு வரவேற்பு உரை நிகழ்த்தினர்.

சம்மேளனத்தின் கௌரவ காரியதரிசி திரு. கோபாலகிருஷ்ணமோடி நன்றி கூறினர்.

முதன் மந்திரியின் வாக்குறுதி

இம் மகாநாட்டை ஹோட்டல் அசோகாவில் ராஜ்ய முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் 1966 ஆகஸ்டு 13-ந் தேதி ஆரம்பித்து வைத்தார்.

எழுத்தறிவைப் பரப்புவதில் இத் தொழில் பெரிதும் உதவிக் கொண்டிருக்கிறது என்று அவர் பாராட்டு தெரிவித்தார்.

இந்த முக்கியமான தொழிலின் நலனில் நான் பெரிதும் அக்கரை கொண்டிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையிலும் குறிப்பிட்ட பிரச்னைகளை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நான் உதவி செய்வேன் என்று அவர் உறுதி கூறினர்.

வரவேற்புரை

அனைவரையும் திரு. திருநாவுக்கரசு வரவேற்று பேசியபோது. இம்மகாநாட்டை முதன் மந்திரி ஆரம்பித்து வைத்திருப்பது பொருத்தமானது; ஏனெனில் அவர் சில காலம் ஆசிரியராகவும், அச்சிடுபவராகவும் இருந்திருக்கிறார் என்று கூறினர். முதன் மந்திரிக்கு நமது கஷ்டங்கள் என்ன வென்பது தெரியும். நமது பிரச்னைகளையும் உணர்வார் என்றும் கூறினர்.

அச்சிடும் தொழிலும், அச்சு எழுத்து தயாரிப்பு தொழிலும் உள்ள முன்னேடி ராஜ்யங்களில் தமிழ்நாடும் ஒன்று. மிகப் பழமையான அச்சகங்களும் சென்னையில் உண்டு. டையோசெஸன் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பும், ஹோஅண்டு கோ எண்பது வருடங்களுக்கு முன்பும் அமைக்கப்பட்டவை என்று திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

அச்சு எழுத்து ஆலைகளை நமது தொழில் நிர்மாணம், மற்றும் நமது சமூக, பொருளாதார அமைப்பின் ஒரு பகுதியாகக் கருதவேண்டும் என்று அவர் கூறினர்.

நமது கஷ்டங்களைத் தீர்க்க மத்திய சர்க்காரிடம் முதன் மந்திரி ஆவன செய்யுமாறு வலியுறுத்துவார் என்பதிலும், நமது காலத்தின் சவால்களைச் சமாளிக்க உதவுவார் என்பதிலும் சந்தேகம் கிடையாது என்று திருநாவுக்கரசு மேலும் கூறினர்.

தலைமையுரை

ஜவஹர்லால் நேரு, லால் பகதூர்சாஸ்திரி ஆகியோரின் மறைவுக்கு திரு. குஹாரே தலைமையுரையின் ஆரம்பத்தில் அனுதாபம் தெரிவித்தார்.

பிறகு பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்திக்கு அவரது முயற்சிகளில் ஒத்துழைப்பு நல்குவதாக திரு. குஹாரே தெரிவித்தார்.

இந்தியாவில் அச்சிடும் தொழில் வரலாற்றில் சென்னை மிக முக்கியமான இடம் வகிக்கிறது. டேனிஷ் மாதிரி ஹைஜெண்டாக் புதிய சுவிசேஷத்தின் தமிழ் மொழி பெயர்ப்பை தரங்கம்பாடியில் அச்சிட்டார். தரங்கம்பாடி அருகே முதலாவது காகித மில்லை அமைக்கும் பொறுப்பையும் அவர் மேற்கொண்டார். சென்னையில் உள்ள பிரசித்திபெற்ற டயோசெஸன் அச்சகத்தில்தான் 19-வது நூற்றுண்டின் ஆரம்பத்தில் பேப்ரிகஸின் பிரபலமான தமிழ்-ஆங்கில அகராதி அச்சிடப்பட்டது. முதலாவது தமிழ் அச்சு எழுத்துக்கள் சென்னையில் தயாரிக்கப்பட்டு, டயோசெஸன் அச்சகத்தில் 1807-ம் வருடம் வரையிலும் உபயோகிக்கப்பட்டன. எனவே சென்னை அச்சு எழுத்து தயாரிப்பாளர்கள் இந்திய அச்சு எழுத்து தயாரிப்பு தொழிலில் முன்னேடிகளாக இருந்தது; தற்செயலாக ஏற்பட்ட நல்ல. மிக நுட்பமான அச்சு வார்ப்பு செய்வதில் இதுவரை சென்னை தலைமை வகிக்கிறது. தாஞக அச்சு எழுத்து தயாரிக்கும் இயந்திரங்களுக்கு மேட்ரிக்ஸ் வார்ப்புகள் தயாரிக்க நீங்கள் போதுமான நடவடிக்கைகள் எடுப்பீர்கள் என்று நம்புகிறேன் என்று திரு. குஹாரே கூறினர்.

ஈயம், தகரம், ஆன்டிமோனி ஆகிய உலோகங்கள் நமது தொழிலுக்கு அவசியமான கச்சா பொருள்கள். இவற்றின் பற்ருக்குறை நமக்கு மிகவும் கவலை தருகிறது என்று அவர் மேலும் கூறினர்.

அச்சு இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் இறக்குமதியின் மீது கடுமையான கட்டுப்பாடு இருந்த போதிலும், நாடு முழுவதிலும் உள்ள அச்சகங்கள் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. நமது தொழில் நீடிப்பது இந்த அச்சுத் தொழில் முன்னேறுவதைப் பொருத்திருக்கிறது. இதனல் நாம் தற்பெருமையடைந்து வாளாவிருந்துவிடக் கூடாது என்று அவர் கூறினர்.

தரத்திலும், விலையிலும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள அச்சு எழுத்துக்கள் தயாரிப்பா

பள்ளிகளில் நூல் நிலையம்!

ஊக்குவிக்க சர்க்கார் மான்யம் தருகிறது!

பள்ளிகளில் நூல் நிலையம் ஏற்படுத்துவதை ஊக்குவிக்க சர்க்கார் இந்த வருஷத்தில் ராஜ்யத்திலுள்ள 11,000 ஆரம்பப்பள்ளிகளுக்கு தலா ரூ. 30 மான்யம் அளித்துள்ளது. சுமார் 4000 உயர் ஆரம்பப்பள்ளிகளுக்கு தலா ரூ 50 நூல்நிலைய மான்யமாக கிடைக்கும். உதவி பெறும் தனியார் ஆரம்ப, உயர் ஆரம்பப் பள்ளிகளுக்கு தலா ரூ. 15 மான்யமாக கிடைக்கும். ஆனல் தனியார் பள்ளிகளின் நிர்வாகிகள் இதற்குச் சமமான தொகையை அளிக்க முன்வரவேண்டும். 340 சர்க்கார் ஜூனியர் ஆதார பள்ளிகள், 96 சீனியர் ஆதார பள்ளிகள் முறையே தலா ரூ. 30, ரூ. 50 நூல் நிலைய மான்யமாகப் பெறும்.

ளர்களுடன் நாம் போட்டியிட முடியாத நிலை யில் இருக்கிறோம். இதற்கான காரணங்களை பற்றி நமது தொழிலாளர் நல அமைச்சு ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று விரும்பு கிறேன். என்றும் திரு. குஹாரே குறிப்பிட் டார்.

நமது உற்பத்தியை பெருக்க நாம் தவறி விட்டோம் என்று நமது தலைவர்களும், நமது சர்க்காரும் குறை கூறுகிறார்கள். தொழிலாளர் கள் மாமூல் அளவு வேலை செய்யும்படி நமது சர்க்காரிடமிருந்து நமக்கு உதவி கிடைத்திருக் கிறதா? என்று அவர் கேட்டார்.

பல்வேறு இந்திய மொழிகளில் உள்ள எழுத்துக்களுக்கு புது டிசைன்கள் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினர்.

எழுத்துக்களின் எண்ணிக்கையை குறைக் கவும் வழிவகைகள் காண வேண்டும் என்று அவர் கூறினர்.

ரூபாயின் நாணய மாற்று மதிப்புக்குறைக் கப்பட்டுள்ளது நமது தொழிலை மிகவும் பாதித் திருக்கிறது என்றார் அவர்.

அச்சு எழுத்து தொழிலைக் கவனித்துக் கொள்ள மத்திய சர்க்காரில் அமைச்சு எதுவும் இல்லை என்று திரு. குஹாரே சுட்டிக்காட்டி னர். அச்சு எழுத்து தொழிலுக்காக மகாராஷ் டிர சர்க்கார் மட்டும் ஒரு அமைச்சை ஏற்படுத் தியிருக்கிறது. இதே போல இதர எல்லா ராஜ்ய சர்க்கார்களும் ஏற்பாடு செய்வார்கள் என்று தாம் நம்புவதாகவும் அவர் கூறினர்.

இம் மாநாட்டில் முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் கலந்து கொண்டதற்கு திரு. குஹாரே நன்றி தெரிவித்தார்.

சென்னை மாகாண அச்சு எழுத்து தயாரிப் பாளர்கள் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. டி. எஸ். சண்முகம் ரூ. 1000-க்கு ஒரு செக் அகில இந்திய அச்சு எழுத்து தயாரிப்பாளர் கள் சம்மேளனத்திற்கு அதன் தலைவர் திரு. குஹாரேயிடம் அளித்தார்.

கௌரவ பொதுக் காரியதரிசி அறிக்கை

கௌரவ பொதுக் காரியதரிசி திரு. கோபாலகிருஷ்ண மோடி இம் மகாநாட்டிற்கு சமர்ப்பித்த அறிக்கையில், ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டுள்ளது. அச்சு எழுத்து தயா ரிப்பு தொழிலை மிகவும் பாதித்துள்ளது என்று குறிப்பிட்டார்.

சம்பளத்தை உயர்த்தி அளவுடன் இணைக்க வேண்டுமென்று எல்லா ராஜ்ய சர்க்கார்களுக் கும் சம்மேளனம் தெரிவித்த கருத்துக்கு இது வரை பதில் கிடைக்கவில்லை என்றும் அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“இரும்பு கலப்பில்லாத கச்சா உலோகங் கள் கோட்டா ஒதுக்குவதில் ராஜ்ய தொழில்

திருச்சி எஞ்சினீயரிங் கல்லூரி தொழில்நுட்பக் கழகமாகும்?

சர்க்கார் ஆசை பற்றி தொழில் மந்திரி தகவல்!

திருச்சி பிராந்திய எஞ்சினீயரிங் கல்லூரியை இந்திய தொழில் நுட்பக் கழக அந்தஸ்துக்கு உயர்த்த சர்க்கார் ஆசைப்படுவதாக தொழில் நுட்பக் கல்வி மந்திரி ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன் மேற்படி கல்லூரி மாணவர் சங் கத்தைத் துவக்கி வைக்கையில் கூறி னர்.

திருச்சி சர்வகலாசாலை ஏற்பட்ட வுடன் பிராந்திய எஞ்சினீயரிங் கல்லூ ரிக்கு அதில் பெருமை மிக்க ஸ்தானமிருக் கும் என்று அவர் கூறியதும் உற்சாக கர கோஷம் எழுந்தது.

டைரக்டர்களிடமிருந்து போதுமான அளவு உதவி கிடைக்கவில்லை'' என்றும் அறிக்கையிம் கூறப்பட்டுள்ளது.

அச்சு எழுத்து தொழில் உற்பத்தித் திறன் கவுன்சிலில் பங்கெடுத்துக் கொள்ள நமது சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர் அழைக்கப்பட்டிருக்கிறார் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீர்மானங்கள்

இம் மகாநாட்டில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அமெரிக்கக் கல்லூரியில் தமிழக விஞ்ஞானி அழைப்புப் பேராசிரியர்!

பெயர் பெற்ற தமிழ்நாட்டு விஞ்ஞானி ஒருவர் நடப்புக் கல்வி ஆண்டில் நியூயார்க்கிலுள்ள பர்னார்டு கல்லூரியில் அழைப்புப் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டாக்டர் பாலு வெங்கடராமன் அங்கு 1966 - 67 கல்வியாண்டில் பணிபுரிவார். சென்னையிலுள்ள கிறிஸ்தவக் கல்லூரியிலும், லயோலாக் கல்லூரியிலும் படித்தவர் அவர். பின்னர் காசி ஹிந்துப் பல்கலைக்கழகத்திலும் கொலம்பியா பல்கலைக் கழகத்திலும் மேல் படிப்புப் படித்தவர். பர்னார்டு கல்லூரி, கொலம்பியா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப் பெற்ற கல்லூரியாகும்.

மின்னணுச் சுழல் அதிர்வு பற்றி அவர் எழுதிய கட்டுரைகள் விஞ்ஞான இதழ்களில் விரிவாகியுள்ளன. அவர் அமெரிக்கப் பௌதிக சங்கத்தில் ஒரு உறுப்பினர்; பம்பாயிலுள்ள டாட்டா அடிப்படை ஆராய்ச்சிக் கழகத்தில் காந்த அதிர்வு பற்றி ஆராய்ச்சி நடத்தும் ஒரு குழுவுக்குத் தலைவர்.

இந்திய தர நிர்ணய கழகம் சிபாரிசு செய்துள்ள தரங்களை எல்லா அச்சு எழுத்து வார்ப்பு கூடங்களும் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு தீர்மானம் வலியுறுத்துகிறது.

அச்சு எழுத்து தயாரிப்பு தொழிலை ''அத்யாவசிய தொழிலாக'' சர்க்கார் அங்கீகரிக்க வேண்டும் என்றும், அதற்கு அவசியமான எல்லா பாதுகாப்புகளும் அளிக்க வேண்டும் என்றும் மற்றொரு தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படாத அல்லது சுரங்கத்திலிருந்து எடுக்கப்படாத தகரம், ஆன்டிமொனி, ஈயம் போன்ற இரும்பு கலப்பில்லாத உலோகங்கள் இறக்குமதி மற்றும் வினியோகம் மீதுள்ள எல்லா கட்டுப்பாடுகளையும் நீக்குமாறு மற்றொரு தீர்மானம் சர்க்காரைக் கேட்டுக்கொண்டது.

மேற்கண்ட இரும்பு கலப்பில்லாத உலோகங்கள் மீதுள்ள இயல்பற்ற இறக்குமதி மற்றும் கலால் வரிகளை நீக்குமாறு அல்லது இதற்கு மாற்றாக தற்போதுள்ள வரி விகிதங்களைக் கணிசமான அளவு குறைக்குமாறு சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாக மற்றொரு தீர்மானம் கூறுகிறது.

இரும்பு கலப்பில்லாத உலோக சுத்தீகரிப்பு கூட்டுறவு சொசைட்டிகள் ஏற்படுத்த அச்சு எழுத்துத் தயாரிப்பாளர்கள் சங்கங்களுக்கு சர்க்கார் சகல உதவியும் அளிக்கவேண்டுமென்றும் மற்றொரு தீர்மானம் கேட்டுக் கொண்டது. இறக்குமதி காரியங்களுக்காக சர்க்கார் அறிவித்துள்ள ''60 முதன்மை தொழில்கள்'' ஜாபிதாவில் அச்சு எழுத்து தயாரிப்பு தொழிலையும் சேர்த்துக்கொள்ளுமாறு இம் மகாநாடு மேலும் கேட்டுக் கொண்டது.

அச்சு எழுத்து உலோகங்கள் விலை அபரிமிதமாக அதிகரித்துள்ளது குறித்து மகாநாடு கவலை தெரிவித்துள்ளதுடன், அச்சு எழுத்து தயாரிப்பாளர்களுக்கு அவர்களுடைய அடிப்படை, அவசர தேவைகள் அடிப்படையில் இரும்பு கலப்பில்லாத உலோகங்களை ஒதுக்குமாறு எல்லா ராஜ்ய தொழில் டைரக்டர்களையும் கேட்டுக் கொண்டது.

அச்சு எழுத்து தேவைகளை பற்றியும், ஏற்றுமதி சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆராய்வதற்கு இத்தொழிலே சேர்ந்த மெம்பர்கள் குழுவொன்றை அயல் நாடுகளுக்கு அனுப்ப இந்திய சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்று மற்றொரு தீர்மானம் கேட்டுக்கொண்டது.

இது சம்பந்தமாக திருவாளர்கள் எஸ். என். குஹாரே, ஜி. கே. மோடி, பி. எஸ். அம்பிகாநாதன், எம். கே. சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய ஒரு உப கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

அச்சிடும் தொழில் முறை, போட்டோ என்கிரேவிங், அச்சு எழுத்து தயாரிப்பு ஆகியவற்றின் நலன்களை கவனித்துக் கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட அமைச்சின் கீழ் ஒரு புதிய இலாகாவை மத்திய சர்க்கார் ஏற்படுத்த வேண்டும் என்று மகாநாடு கேட்டுக்கொண்டது.

அச்சு எழுத்து தொழிலுக்காக ஒரு மந்திரியை மகாராஷ்டிர சர்க்கார் நியமித்துள்ளது போல இதர எல்லா ராஜ்ய சர்க்கார்களும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் மகாநாடு கேட்டுக் கொண்டது.

விருந்து

மகாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு மெஸர் நெல்சன் அண்டு கோவின் திரு. ஏ. எம். சம்பந்தமும், சகோதரர்களும், மெசர்ஸ் நார்ட்டன் அண்டு கம்பெனியின் திரு. டி. எஸ் சண்முகமும், புதல்வர்களும், சென்னை அயர் ஸ்மெல்டிங் பிரைவேட் லிமிடெட் ஸ்தாபனத்தார்களும், மெட்ருஸ் டைப் பவுண்டரி மற்றும் சுரேந்திரா இண்டஸ்டிரீஸ் உரிமையாளர் திரு. பி. எஸ். அம்பிகாநாதனும் விருந்துபசாரம் அளித்தனர். ○

தொழில் அரங்கிற்கு

சந்தாதாரராக, தங்கள் பெயரை பதிவுசெய்து கொண்டீர்களா?

மாவீடுபண்ணை உயர் துவக்கப்பள்ளி ஆண்டு விழா

கல்வி இயக்குநர் ஸ்ரீ பால் அவர்கள் ஆற்றிய உரை

மாவீடுபண்ணை டி. ஏ. டி. ஏ. உயர் துவக்கப்பள்ளியின் 38 வது ஆண்டு விழா இவ்வூர்வாசியும், ஹிந்து துவக்கப்பள்ளியின் பழைய மாணவரும், கல்வி இலாகா இயக்குநருமான டாக்டர் எம். டி. பால் தலைமையில் நடைபெற்றது.

விழாத் தலைவர் தனது தலைமையுரையில் சரீரம், மனம், ஆத்மா என்று மூன்றும் இருக்கிறது. சரீரத்திற்கு உரியவசதி செய்கிறோம். மனிதன் மனோநிலையில் தான் வாழ்கிறான். ஆத்மாவின் நிலையைப் பற்றி கவனிப்பார் யாரும் இல்லை. அதனால்தான் மாணவர்கள் வாழ்க்கையில் ஒழுக்கம் குறைவு படுகிறது என்றார். ஸ்ரீமதி ஆர். காந்திமதி (நெல்லை கோட்ட கல்வி ஆய்வாளர்) பரிசு வழங்கினார்.

ஸ்ரீ எல். எம். குலாம்தஸ்தகீர் 'கல்வி' என்ற பொருள்பற்றி பேசினார். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஸ்ரீ எம். எஸ். செல்வராஜன் :"பள்ளியும் பெற்றோரும்" என்ற பொருள் பற்றி பேசினார். ஆசிரியர் பி. ஏ. ராமச்சந்திரன் வரவேற்றுப் பேசினார்.

பழைய மாணவர் சங்கம், மாவீடு பண்ணை பொதுமக்கள் தென்திருப்பேரை பஞ்சாயத்து இவைகளின் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

சென்னையில் முதலாவது சர்வதேச வர்த்தகச் சந்தை

1968 ஜனவரியில் நடக்கும்

அகில இந்திய தயாரிப்பாளர் சங்கத்தின் ஏற்பாடு

முதலாவது சந்தை

சென்னையில் முதலாவது இந்திய சர்வதேச வர்த்தகம், தொழில் சந்தை 1968 ஜனவரியில் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை செய்யும் பணியில் ஆகில இந்திய தயாரிப்பாளர்கள் சங்கம் ஈடுபட்டிருக்கிறது.

இந்த சந்தையை நடத்துவதற்கு மத்திய சர்க்காரும், தமிழ்நாடு சர்க்காரும் அனுமதி அளித்திருக்கின்றனர். இத்துடன் அவர்களுடைய உதவியும் உண்டு.

இந்தியாவில் இத்தகைய சந்தை நடத்தப்படவிருப்பது இதுவே முதல் தடவையாகும். இதை 1967 ஜனவரி 22 முதல் பிப்ரவரி 27 வரை நடத்துவதென்று முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனல் 1968 ஜனவரியில் நடத்துவது என்று ஒத்திவைக்கப்பட்டதற்கு மத்திய சர்க்காரும், தமிழ்நாடு சர்க்காரும் கூறிய ஆலோசனை பிரதான காரணமாகும்.

இந்த சந்தையை பெரிய அளவில் நடத்த முடியும் என்று சந்தை அதிகாரிகள் நம்புகின்றனர். மேற்கத்திய நாடுகளில் ஏறக்குறைய அனைத்தும், மற்றும் ரூபாய் நாணய செலாவணியுள்ள நாடுகளும் கலந்துகொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"உத்தேச சந்தைக்கு பெரும் அளவில் தமிழ்நாடு சர்க்கார் உதவி புரியும்" என்று முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் ராஜ்ய சட்டசபையில் 1966 ஆகஸ்டு 2-ந் தேதி தெரிவித்திருக்கிறுர்.

இந்த சந்தையை அமைக்க அகில இந்திய தயாரிப்பாளர்கள் சங்கம் தீவிரமாக ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறது. பல வர்த்தகர்களும், தொழிலதிபர்களும் இதற்காக வேண்டிய பணிகள் புரிந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த சந்தையை அமைப்பது சம்பந்தமாக அகில இந்திய தயாரிப்பாளர்கள் சங்கம் சொந்தமாக திட்ட நிர்வாகி, சர்வேயர், பிரதம என்ஜினீயர், சிவில் மற்றும் மின்சார என்ஜினீயர்கள், நிர்வாக ஊழியர்கள் முதலியோரை நியமித்துள்ளதுடன் கணிசமான தொகையை செலவழித்துக்கொண்டிருக்கிறது.

300 ஏகர் இடம்

300 ஏகர் பரப்பில் இந்த சந்தை அமைக்கப்படுகிறது. இதன் பிரதான ரஸ்தா ஆவடி, பூந்தமல்லி ரஸ்தாக்களுடன் இணைக்கப்படுகின்றன. சந்தை நடக்கவிருக்கும் இடத்தில் பல ரோடுகள் போடப்பட்டுள்ளன. கீழ்ப்பாக்கம் பகுதியுடன் இணைப்பதற்காக ஜாகைவசதி போர்டு ஒரு புது ரஸ்தாவை அமைத்துக்கொண்டிருக்கிறது. மற்ருெரு ரஸ்தாவும் போடப்படுகிறது. இந்த இரு ரஸ்தாக்கள் சம்பந்தமாக தமிழ்நாடு சர்க்காரிடமிருந்து ரூ. 25 லட்சத்தை ஜாகை வசதி போர்டு ஏற்கனவே பெற்றுள்ளது.

பூந்தமல்லி - ஆவடி ரஸ்தாக்களுக்கு சென்னை நகர கார்ப்பரேஷன் ரூ. 13 லட்சமும், நெடுஞ்சாலைகள் இலாகா ரூ. 19 லட்சமும் செலவழித்துக்கொண்டிருக்கின்றன.

சந்தை இடத்தில் ரஸ்தாக்கள் அமைப்பதற்கு சந்தை அதிகாரிகளுக்கு சுமார் ரூ. 12 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது.

கவர்ச்சிகரமான அம்சங்கள்

அழகிய வளைவு, பிரதான வாயில், மத்திய கோபுரம் (டவர்), பஞ்சசீலத்தை சித்தரிக்கும் சிற்பங்கள், கோபுரத்தில் இனிய பானங்கள் சப்ளை செய்யும் கடை போன்ற கவர்ச்சிகரமான அம்சங்கள் இந்த சந்தையில் இடம்பெறும்.

மகாநாட்டு மண்டபம்

மகாநாடுகள் நடத்துவதற்கு ஏற்றவகையில் வட்டவடிவமான மண்டபம் அமைக்கப்படுகிறது. இந்த மண்டபத்திற்குள் பூந்தோட்டமும், குளமும் இருக்கும். கலை அரங்கும், இதர கட்டிடங்களும் இருக்கும்.

மிதக்கும் ஹோட்டல்

காபி கடைகள், பாங்குகள், இதர வசதிகள் ஏற்படுத்தப்படும். சந்தை நடக்கும் காலத்தின் போது "மிதக்கும் ஹோட்டல்கள்" நடத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சந்தையை நடத்துவதன் மூலம் கிடைக்கக் கூடிய வருமானம் விஸ்வேஸ்வரய்யா இண்டஸ்டிரியல் பவுண்டேஷன் ஸ்தாபனத்திற்குச் சேரும். இந்த பவுண்டேஷன் அகில இந்திய தயாரிப்பாளர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, இந்திய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டது.

(ஆதாரம்: 1968-ம் வருடத்திய சர்வதேச வர்த்தகம், தொழில் சந்தை தலைவர் திரு. ஹன்ஸ்ராஜ் குப்தா "இண்டஸ்டிரியல் இண்டியா" வின் 1966 ஆகஸ்டு இதழில் எழுதிய கட்டுரை.)

அதிசய உலோகம்! காரின் வேகம் அதிகரிக்கும்!

15 ஆண்டுகால ஆராய்ச்சிக்குப் பின்னர் 'டிட்டானியம்' என்கிற அதிசய உலோகத்தை உருக்கி, பல்வேறு சாதனங்களாகத் தயாரிக்கும் முறையை மேற்கு ஜெர்மன் இஞ்சினியர்கள் கண்டுபிடித்துள்ளனர். டிட்டானியத்தை உருக்கி பின்னர் குளிரவைக்க இரண்டு நாட்களாகிறது. எஃகுடன் ஒப்பிடும்போது டிட்டானியம், பாதி எடைதான் இருக்கும்; ஆனால் வலிமை மிக்கது; அதிகப் பளுவைத் தாங்கும். துருப்பிடிக்காது. விமானங்களில் அலுமினிய மறைகளுக்குப் பதிலாக டிட்டானியம் மறை ஆணிகளைப் பயன்படுத்தினால் விமானத்தின் எடையில் மூன்றரையுடன் குறைகிறது. மோட்டார் வாகனங்களில் இணைப்பு கம்பியாகவும், பிற பாகங்களாகவும் பயன் படுத்தினால், காரின் வேகம் மணிக்கு 210 கிலோமீட்டரிலிருந்து 270 கிலோமீட்டராக அதிகரிக்கும்.



(யூ.பி.எஸ்.)

P. T. C.

OPPOSITE DIAMOND TALKIES

Avanashi Road : COIMBATORE.

CLASSES FOR
S. S. L. C.
P. U. C.
B. A.
B. Sc.

Begun Join at once

Laboratory Attached

Separate Classes For Ladies

Special Sections for S. S. L. C. Students of Regular High Schools and P. U. C., B. A., B. Sc., Students of Regular Colleges in the Evening I. I. T. Classes also Begun for P. U. C., B. Sc., Students.

P. V. Parthasarathy,
Principal.

29 தொழில்களுக்கு லைசென்ஸ் கண்ட்ரோல் இல்லை

இந்திய சர்க்கார் முடிவு: ஸ்ரீ சஞ்சீவையா அறிவிப்பு

அனாவசியமான கண்ட்ரோல்களை நீக்கி விடுவது என்று சர்க்கார் கடைப்பிடித்து வரும் கொள்கையைத்தொடர்ந்து மேலும் 29 தொழில்களுக்கு லைசென்ஸ் தேவை யில்லை என இந்திய சர்க்கார் முடிவு செய் துள்ளது என்று தொழில் மந்திரி ஸ்ரீ டி. சஞ்சீவையா லோக் சபையில் அறிவித் தார்.

வாகனுதிகளில் பொருத்தப்படாத மோட் டார்கள், மின்சார பம்புகள், விவசாய மருந்து தெளிப்புக்கருவிகள் முதலிய விவசாய உற்பத் தியை பெருக்குவதற்கு முக்கியமான தொழில் கள் உள்ளிட்ட 29 தொழில்களுக்கு இனி லைசென்ஸ் தேவையில்லை என்று அவர் மேலும் கூறினர்.

(13 தொழில்களுக்கு லைசென்ஸ் தேவை யில்லையென்று முன்பே சர்க்கார் அறிவித்துள் ளது.)

ஸ்ரீ சஞ்சீவையா மேலும் கூறியதாவது:-

''நான்காவது திட்ட தேவைகள் ஏற்றுமதி சாத்தியம் முதலியவற்றைக் கருத்திற்கொண்டு இப்போது மேலும் 29 தொழில்களை லைசென்ஸ் பெறுவதிலிருந்து நீக்க சர்க்கார் முடிவு செய் துள்ளது. இப்போது லைசென்ஸ் முறையிலிருந்து நீக்கப்பட்ட தொழில்களுக்கு மூலப் பொருள்கள் அல்லது உறுப்புகள் இறக்குமதியாக வேண்டிய தில்லை. இவை சிறிய குடிசைத் தொழில்களை பாதிக்கமாட்டா.

அவ்வப்போது சர்க்கார் பரிசீலனை செய்து விளைவுகளைக் கவனித்து ஆவன செய்யும்.

லைசென்ஸ் முறையிலிருந்து நீக்கப்பட்ட தொழில்கள் வருமாறு:-

1. வார்ப்பட இரும்புக் குழாய்.

2. மின்சார உலை மூலம் தயாரிக்கப்படும் உருக்கு கட்டிகள்/பாளங்கள்.

3. வாகனுதிகளில் பொருத்தப்படாத மோட்டார்கள் (50 குதிரை சக்திக்கு குறைந் தவை டீசல், பெட்ரோல்.)

4. மின்சார மோட்டார்கள் (50 குதிரை சக்திக்குக் குறைந்தவை)

5. மின்சார உலைகள் (ஸ்விட்ச் கியர், டிரான்ஸ்பார்மர் இறக்குமதியல்லாதவை.

6. பைசைக்கிள்கள், அதன் உறுப்புகள்.

7. தேயிலை யந்திரங்கள்.

8. மின்சார பம்புகள்.

9. விவசாய ஸ்ப்ரேயர்கள் (ஆள்இயக்கா தவை.)

10. காற்று, கியாஸ் கம்ப்ரெஸர்கள்.

11. தீயணைப்பு சாதனங்கள்

12. உப்புத் தாள்கள்

தொழில் நுட்பக் கல்வியில் தமிழக சாதனை......

(12ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக ஒரு சட்டமே இயற்றியுள்ள இங்கிலாந்தை உதாரணமாகக் கொள்ளலாம். தொழிலியல் பயிற்சி சட்டத்தின்கீழ் இங்கிலாந்தின் தொழில் நிறுவனங்களில், வேலை பார்க்கிறவர்களின் சம்பளத்தின் மீது 2 சதம் லெவி வரி விதிக்கிறார்கள். இந்த வரி மூலம் வசூலாகும் நிதியைக் கொண்டு சில குறிப்பிட்ட தொழில் நிறுவனங்களில் பயிற்சி யளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலும் பொறி இயல் பட்டதாரிகளுக்கும், டிப்ளமா பெற்றவர்களுக்கும் சில குறிப்பிட்ட பணிகளின் பொறுப்புகளை ஏற்பதற்குப் பயிற்சி யளிக்க வேண்டியது அவசியம். அதற்குத் தகுந்த ஒரு திட்டத்தை நாம் வகுக்க வேண்டும்.

ஒரு நாட்டின் மக்கள் முன்னேறுவதும், மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்துவதும் அவர்களுக்குத் தரப்படும் கல்வியின் தரத்தைப் பொறுத்தது. கல்வி போதிக்கும் ஸ்தாபனங்களும், அவற்றின் ஆசிரியர்கள் சிருட்டிக்கும் அறிவுத்திறன் உள்ள சூழ்நிலையும் எவ்வாறு அமைந்திருக்கின்றனவோ அங்வாறே மக்கள் பெறும் கல்வியின் தரமும் அமைந்திருக்கும். கல்வி போதனைக்குச் சரியானவர்களை பெற வேண்டும். மற்றும் கல்வித் துறை ஆராய்ச்சி மூலமாக ஆசிரியர் சமூகத்துக்குக் கிடைத்துள்ள பற்பல உபாயங்களையும், முறைகளையும், அறிவு புகட்டுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதே சமயத்தில் போதிக்கப்படும் கல்வி வீணாகாமல் கண்காணிக்க வேண்டும். பாடத்திட்டங்களைத் தயாரிப்பதிலும், கல்வி போதிக்கும் முறையிலும் படிப்பு சம்பந்தமான மதிப்பீட்டிலும், ஆராய்ச்சியும், சோதனையும் நடத்த வேண்டியது அவசியம். இந்த விஷயங்களில் ஆராய்ச்சி நடத்துவதற்குத் தொழில் நுட்பக் கல்வி டைரக்டரேட் ஸ்தாபனத்தில் தனிப் பிரிவுகளை ஏற்படுத்த சென்னை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அந்த ஆராய்ச்சியின் பலன்கள் தொழில் நுட்ப கல்வி ஸ்தாபனங்களின் ஆசிரியர் குழாத்துக்கு கிடைக்கச் செய்வதுதான் அரசினரின் நோக்கம்.

சில முக்கிய முயற்சிகள்

கல்வித் துறையில் ஆராய்ச்சிக்குத் தகுந்த பாடப் புத்தகங்களைத் தயாரித்தல், ஆசிரியர் தொழிலுக்கு திறமை மிக்கவர்கள் வந்து சேருவதற்கு ஊக்கமளித்தல், விஞ்ஞானத் தொழில் இயல் காட்சி கூடத்தை ஏற்படுத்துதல் பெரும் அளவில் ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்தல், தொழில் நுட்பப் பயிற்சி ஸ்தாபனங்களும், தொழில் நிறுவனங்களுக்கு மிடையே 'ஜீவன்' உள்ள தொடர்பை ஏற்படுத்துதல், பொறி இயல் கல்வியை தற்கால மாறுதல்களுக்கு ஏற்றவாறு விறு விறுப்பாக்குதல் முதலிய முயற்சிகள் 4-வது திட்ட காலத்தில் மேற்கொள்ளப் படும். அத்துடன் ஏற்கனவே யுள்ள வசதிகள் பெருக்கப்படும். ○

- தினமணி

(முன் பக்கத் தொடர்ச்சி)

13. தையல் இயந்திரங்கள், உறுப்புகள்
14. நிறுவை யந்திரங்கள்
15. கணித, சர்வே, டிராயிங் கருவிகள்.
16. கலவை உரங்கள்
17. கால்ஷியம் கார்ப்னேட்
18. பேரியம் கார்பனேட்
19. பேரியம் குளோரைட்
20. பேரியம் நைட்ரேட்
21. பேரியம் சல்பேட்
22. பிளாங் பிக்ஸ்
23. தீவிர உவர்மண்
24. தீவிர கார்பன்
25. உலோக ஸ்டியரேட்டுகள்
26. சோடியம் அலுமினேட்
27. காகித அட்டை (ஸ்ட்ரா போர்டு)
28. பாக்கிங் காதம்
29. பைபர்போர்டு, சிப்போர்டுகள் போர்டுகள் உள்ளிட்ட பலகை. O

நீதி மன்றம்

வனச் சட்டத்தின் கீழ் வாகனப் பறிமுதல்

சட்டப் பிரச்னையில் ஹைகோர்ட் டிவிஷன் பெஞ்சு முடிவு

தமிழ் நாடு வனச்சட்டத்தில் தற்போதுள்ள 43-வது பிரிவின்படி, வனச் சட்டக்குற்றங்களில் சம்பந்தப்படும் வாகனங்கள், வண்டிகளை பறிமுதல் செய்தாக வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை என்று சென்னை ஹைகோர்ட் டிவிஷன் பெஞ்சு ஒரு சட்ட நுட்பப் பிரச்னை மீது முடிவு கூறியிருக்கிறது.

நீதிபதிகள் ஸ்ரீ கே. ஸ்ரீநிவாசனும், ஸ்ரீ எஸ். சதாசிவமும் இந்த முடிவைக் கூறினர்கள்.

இப்படி யொரு சட்டப்பிரச்னை எவ்வாறு தோன்றியது?

சர்க்கார் ரிசர்வ் காட்டிலிருந்து கள்ளத்தனமாக வெட்டப்பட்ட சந்தனக் கட்டைகளை ஏற்றிச் சென்றதாக ஒரு காரைப் பறிமுதல் செய்யும்படி பெரம்பலூர் (திருச்சி) சப்மாஜிஸ்திரேட், ஒரு கள்ளக்கடத்தல் வழக்கில் உத்தரவிட்டார். கார் சொந்தக் காரரர் இதை ஆட்சேபித்து ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கு விண்ணப்பித்துக் கொண்டார்.

தமது காரை தவணை முறையில் ஒருவருக்கு விற்க ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும் சட்ட விரோதமாக அது உபயோகிக்கப்படுவதாகத் தமக்குத் தெரியாது என்றும், ஆகையால் காரை திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும் கோரியிருந்தார்.

ஆனல் ஜில்லா மாஜிஸ்திரேட் இந்த மனுவை நிராகரித்து விட்டார். வனச் சட்ட மீறல் குற்றங்களில் சம்பந்தப்படும் வாகனங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்று ஹைகோர்ட்டின் பழைய தீர்ப்பு ஒன்று கூறுகிறது என, ஜில்லா மாஜிஸ்திரேட் தமது உத்தரவுக்கு ஆதாரம் காட்டியிருந்தார்.

கார் சொந்தக்காரரர் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொண்டார். ஹைகோர்ட்டின் பழைய தீர்ப்பு சரியானது தானு என்று நீதிபதி ஸ்ரீ சதாசிவம் சந்தேகமடைந்தார். இந்த சட்டப் பிரச்னையை பரிசீலிக்கும்படி ஹைகோர்ட் டிவிஷன் பெஞ்சு ஒன்றைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு வனச்சட்டத்தின் 43 வது பிரிவு, 1961 வருட தமிழ்நாட்டு 36–வது சட்டத்தால் திருத்தப்பட்டிருக்கிறது. அதற்கு முன் வனச்சட்ட மீறலில் சம்பந்தப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் தமக்குத் தெரியாமல்தான் வாகனம்

உபயோகிக்கப்பட்டிருக்கிறது என்பதை நிரூபித்தால் வாகனங்களை திரும்பப்பெறலாம் என்பது ஹைகோர்ட்டின் முந்திய கருத்து என்று டிவிஷன் பெஞ்சு கூறியது.

வனச் சட்டத்தின் பழைய 43 வது பிரிவில் வாகனங்கள் ''பறி முதல் செய்யப்பட வேண்டும்'' என்று கூறப்பட்டிருந்தது.

திருத்தப்பட்ட பிரிவில் ''வழக்கு விசாரிக்கும் மாஜிஸ்திரேட்டின் உத்தரவின் பேரில் வாகனம் பறிமுதல் செய்யப்படலாகும்'' என்று கூறுகிறது. இந்த வாசகம் அரசியலமைப்புச் சட்ட 19(1) (எப்), 31(1) ஷரத்துக்களில் உள்ள சொத்துரிமையை பாதிப்பதாக இருக்கிறதா என்பதுதான் சட்டப் பிரச்னை.

அப்படிப்பட்டதாக இல்லை என்றே டிவிஷன் பெஞ்சு முடிவு கூறியது. வனச் சட்டக்குற்ற வழக்கு ஒவ்வொன்றிலும் சம்பந்தப்படும் ஒவ்வொரு வாகனத்தையும் பறிமுதல்செய்தாக வேண்டும் என்று சட்டப்பிரிவு கட்டாயப்படுத்த வில்லை என்றும், வழக்குகளின் விபரங்களைப் பொறுத்து மாஜிஸ்திரேட் அவ்வாறு செய்து கொள்ளலாம் என்பதே சட்டத்தின் கருத்து என்றும் கூறினர். ○

மின்சார போர்டு குமாஸ்தாக்கள் ஒய்வு பெறும் வயது

55 அல்ல, 58 தான் என்று ஹைகோர்ட் தீர்ப்பு

சென்னை மின்சார போர்டில் வேலை செய்யும் குமாஸ்தாக்களில் சிலர் தமது 55-வது வயதில் உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெறவேண்டும் என்று உத்திரவிடப்பட்டது. இதை ஆட்சேபித்து அவர்களில் சிலர் தாக்கல் செய்திருந்த ரிட் மனுக்களை சென்னை ஹைகோட்டில் நீதிபதி கைலாசம் அனுமதித்தார்.

போர்டில் வேலை செய்யும் ஆபீசர்கள், சிப்பந்திகளுக் கென்று அவர்களுடைய வேலை நிபந்தனைகளைப்பற்றித் தனியாக விதிகள் எதுவும் இயற்றப்படவில்லை. சர்க்கார் ஊழியர்கள் சம்பந்தமான விதிகளையே பின்பற்றி வந்தனர். அந்த விதிகளின்படி ஒய்வு பெறும் வயது 55. தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் பற்றிய சட்டம் 1946 ஏப்ரலில் அமலுக்கு வந்தது. 100–க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்கு இது பொருந்தும். ராஜ்ய மின்சார போர்டுக்கும் இது பொருந்தும்.

மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் சர்க்கார் இயற்றியுள்ள மாதிரி விதிகளில் ஊழியர்கள் ஒய்வு பெற வேண்டிய வயது 58 என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

ஆகையால், தங்களை 55 வயதில்ஒய்வு பெற வேண்டுமென்ற உத்தரவு தவறு என்று இவர்கள் தமது மனுவில் கூறியிருந்தார்கள்.

தொழிலாளர்களுக்கு ஒரு வயது. குமாஸ்தாக்களுக்கு ஒரு வயது என்று பிரிக்க முடியாது என்று நீதிபதி கருதினர்.

சட்டத்தில் உள்ள அனுகூலங்கள் குமாஸ்தாக்களுக்கும் உண்டு என்று நீதிபதி தீர்ப்பளித்தார். ○

கோயில் நில குத்தகை பற்றிய ரிட் மனு

ஹைகோர்ட்டில் தள்ளுபடி

கோயில் நிலங்கள் குத்தகை சம்பந்தமாக, சர்க்கார் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, கும்பகோணம் ஒப்பிலியப்பன் கோயிலைச் சேர்ந்த சிலர் தாக்கல் செய்த ரிட் மனுவை சென்னை ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீ டி. வெங்கடாத்ரி இன்று தள்ளுபடி செய்தார்.

கோவில் நிலங்களை மனுதாரர்களிடம் 99 வருஷ குத்தகைக்கு அனுமதித்தும் செண்டிற்கு மார்க்கெட் விலை ரூ 21 என்ற அடிப்படையில் வாரம் நிர்ணயித்தும் அற நிலைய கமிஷனர் முதலில் உத்தரவு பிறப்பித்தார். அந்த நிலங்களை தங்களுக்கு விற்றுவிடக்கோரி மனுதாரர்கள் செய்துகொண்ட அப்பீலை சர்க்கார் நிராகரித்து, நிலங்களின் மார்க்கெட் விலை மதிப்பை செண்டிற்கு ரூ. 50 என்று உயர்த்தி உத்தரவிட்டது.

விலைமதிப்பை உயர்த்துவதற்கு எதிராக தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவிக்க சந்தர்ப்பம் தரப்படவில்லை யென்று கூறி சர்க்காரின் மேற்படி உத்தரவை எதிர்த்து மனுதார்கள் தாக்கல் செய்த ரிட் மனுவை ஹைகோர்ட் ஏற்றுக்கொண்டது.

அதன் பேரில், மனுதார்களின் ஆட்சேபணைகளை சர்க்கார் பரிசீலனை செய்து, பிரஸ்தாப உத்தரவைப் பிறப்பித்தது. மறு பரிசீலனை செய்ய சர்க்காருக்கிருந்த அதிகாரம், 1959–ம் ஆண்டு அற நிலையச் சட்டத்தின் மூலம் அகற்றப்பட்டு விட்டதாகக் கூறி, அந்த உத்தரவை எதிர்த்து மனுதார்கள் தாக்கல் செய்த ரிட் மனுவை தற்போது ஹைக்கோர்ட் தள்ளுபடி செய்திருக்கிறது.

1951-ம் ஆண்டு அறநிலையங்கள் சட்டத்தின் கீழ் சர்க்கார் முதல் உத்தரவு பிறப்பித்தது என்றும், மறு பரிசீலனை செய்யும் அதிகாரத்தை அந்தச் சட்டம் வழங்கியிருந்தது என்றும் ஹைகோர்ட்டின் முந்திய தீர்ப்பு, இந்த விஷயத்தை சர்க்காரின் மறு பரிசீலனைக்கு அனுப்பியதாகவே அர்த்தம் என்றும் நீதிபதி ஸ்ரீ டி. வெங்கடாத்ரி தமது தீர்ப்பில் கூறினர்.

மருதமலை ஸ்ரீ முருகன் கோவிலுக்கு சாலை!

செலவு முழுவதையும்

சினிமா அதிபர் ஏற்பார்!

மருதமலையிலுள்ள ஸ்ரீ முருகன் கோவிலுக்கு நல்லதொரு மலைச்சாலை அமைக்கும் பணி துவங்கப் பட்டு விட்டது. இதற்காகும் ரூ 2 லட்சம் செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்ள சென்னை சினிமாப் படத் தயாரிப்பாளர் ஸ்ரீ எம். எம். ஏ. சின்னப்பாத் தேவர் இணங்கியுள்ளார். பொதுப் பணித் துறையினரால் வேலை நடத்தப்படுகிறது.

ஜனவரிக்கு முன் சாலை பூர்த்தியாகிவிடும். தைப்பூசம் திருநாளுக்கு வருகிற பக்தகோடிகள் உபயோகத்துக்கு சாலை திறக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முந்திரியின் தோற்றம்!

நம் நாட்டில் முந்திரிக்கொட்டை யின் தோற்றம் எவ்வாறு ஏற்பட்டது?

'கறுப்புத் தங்கம்' என்று போற்று மளவுக்கு ஒருகாலத்தில் மிளகைப் பெற்றுச் சென்றனர், போர்த்துக்கீசியர். ஒரு சமயம் மிளகே கிடைக்க வில்லை. காரணத்தை ஆராய்ந்தனர். மிளகுப் பயிர் விருத்தியடையாததற்கு மண் அரிப்புத்தான் காரணம் என்று கண்டனர். அதைத் தடுக்க முந்திரி மரத்தை நட்டனர் இப்படியாக வந்ததுதான் முந்திரி மரம்!

இக் கொட்டையால் இப்போது கிடைக்கும் அன்னியச் செலாவணி வருடத்துக்கு 32 கோடி ரூபாய்!

ஏற்றுமதிப்பொருள்களிலே 'முந்தி' நிற்கும் இந்தப் பருப்பை அதிகம் உண்பவர்கள் யார்?

கிழக்கு ஜெர்மானியர்கள்தான்!

'டான்ஸில்' என்று சொல்லப்படும் உள்நாக்கு வளர்ச்சியைத் தடுக்க முந்திரிப் பழம் சிறந்தது எனவும் சொல்லப்படுகிறது!

- எஸ். சேஷாத்திரி

SIC செல்வி



மோட்டார் & பம்புகள்

விவசாய நீர்ப்பாசனத்திற்கு மிகச்சிறந்தவை!

MFRS.

செல்வி இண்டஸ்ட்ரியல்ஸ்

கணபதி · கோயமுத்தூர் · 6

சிக்கன செலவு

★

சிறந்த தயாரிப்பு

★

நீடித்த உழைப்பு

திரு G. D. நாயுடு அவர்களின் தொழிற் பள்ளி



வானொலி (Radio) பெட்டி செய்யும் மாணவர்கள், அக்கருவிகள் பற்றிய அறிவினையும், அதனை அமைக்கும் திறனையும் அறிவதற்குத் தரும் செய்முறைப் பயிற்சி.



பிரிக்கப்பட்ட மோட்டார் இயந்திரங்களின் உறுப்புக்கள், மோட்டார் பயிற்சி பெறும் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்காக.

திரு. G. D. நாயுடு அவர்களால் உருவாக்கப் பட்ட தொழில்கள் வரிசையாக அமைக்கப் பெற்ற காட்சிக்கூடம்.

'எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்' என்பதனை திரு. G. D. நாயுடு அவர்கள் செயலில் செய்து காட்டுகிறாரென்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு. மரம் போன்று வளர்ந்து நிற்பது சோளப் பயிர்கள் தான்.

தொழிலாளர் பாதுகாப்புக் கழகத்தின் ஆதரவில் கட்டப்பட்ட கூடத்தில் (Hall) டாக்டர் சர். சி. வி. ராமன் படத்தை அமைச்சர் கனம் திரு. வெங்கட்ராமன் திறந்து வைத்து, அக் கூடத்திற்கு டாக்டர் சர். சி. வி. ராமன் கூடம் (Hall) என்று பெயர் வைத்தார்.

டாக்டர் சர். சி. வி ராமன் கூடத்தைத் திறந்துவைக்கும்போது வருகை தந்த பெருமக்கள்.

சர்.
பி. டி. ராஜன்,

கனம் திரு.
வெங்கட்ராமன்,

திரு.
அவினாசிலிங்கம் செட்டியார்,

திரு.
G. D. நாயுடு,

திரு.
அம்புரோஸ், கலெக்டர்.

மற்றும் பல பெருமக்கள்.

அமைச்சர் கனம் திரு. வெங்கட்ராமன் அவர்களிடம் மோட்டாரின் நுட்பக் கருவிகள் செயல்படுவதை திரு. G. D. நாயுடு அவர்கள் செய்து காட்டுகிறார்.

26—10—66-ஆம் நாள் நடைபெற்ற சர். சி. வி. ராமன் கூடம் திறப்புவிழாவின்போது.

திரு. E.V.R. பெரியார் அவர்களுக்கு G. D. நாயுடு அவர்கள் மாலை அணிவித்து மகிழ்விக்கிறார். வலதுகோடியிலிருப்பவர் திரு. P. T. ராசன் அவர்கள்.



தொழிற் புரட்சியும் இயந்திர மூளைகளும்

ப. குணசேகர், B. A., B. T., LL. B.

"மூளை இருக்கிறதா உனக்கு?'' என்று இனி யாராவது கேட்டால், இருக்கிறது, என்னிடமுள்ள இயந்திரத்தில்! என்ற பதில் கிடைக்கலாம், இன்னும் சிலநாளில்......!

உடலின் அமைப்பில் தசைகள் முக்கியமானவை. உடல் இயக்கத்திற்குக் காரணம் தசைகளே. தசையின் இயக்கம் மட்டும் போதுமா? தசைகளை இயக்க, நெறிப்படுத்த, முறையாகச் செயலாற்றும்படி செய்ய 'மூளை' தேவை. மூளை காட்டும் வழியிலே தசைகள் இயங்கினுல் முன்னேற்றம் மிகவும் எளிது.

தொழிற்புரட்சி ஏற்பட பல்வேறு இயந்திரங்கள் உதவின; 19-ம் நூற்ருண்டின் இறுதியிலும், 20-ம் நூற்ருண்டின் துவக்கத்திலும் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள்தான் மனிதகுல முன்னேற்றத்திற்கு வித்தூன்றின. தொழிற் பெருக்கத்திற்கு உதவிய பலவிதமான பொறிகள் மனித நாகரிகத்திற்கு அடிப்படையாக இலங்கின. அவற்றை 'தசைகள்' எனலாம். 'தசைகளாக' மட்டுந்தான் இயந்திரங்களால் இயங்க முடியுமா? 'மூளை'யாக இயங்க முடியாதா? முடியும். அது மின்னணு எண்ணி எனப்படும். ஆங்கிலத்தில் 'எலக்ட்ரானிக் கம்ப்யூட்டர்' எனப்படும். மின்னணு எண்ணிகளால் மூளைகள்போல் செயல்பட முடியும். எனவே அவற்றை இயந்திர மூளைகள் என்று அழைக்கலாம். இருபதாம் நூற்ருண்டு விஞ்ஞானத்தின் அதிசயக் குழந்தையாகத் திகழ்கின்றது மின்னணு எண்ணி. விஞ்ஞானம் படைத்த வியத்தகு சாதனையின் பெருவடிவாக விளங்குகின்றது 'இயந்திர மூளை'.

மனிதனுடைய மூளையின் எடை சுமார் மூன்று ராத்தல்தான்; அது சர்ச்சிலுடையதாக இருந்தாலும்சரி; சாணக்கியனுடைதாக இருந்தாலும்சரி, நெப்போலியனுடையதாக இருந்தாலும் சரி, பாண்டியன் நெடுஞ்செழியனுடையதாக இருந்தாலும்சரி; கம்பனுடையதாக இருந்தாலும் சரியே; காளிதாசனுக இருந்தாலும் சரியே; பேரறிஞர் ஐன்ஸ்டீன்உடையதாக இருந்தாலும்சரி; பெருமதிப்பிற்குரிய கணித மேதை இராமானுசத்தின்உடையதாக இருந்தாலும்சரியே; களிமண், மூளைக்கு இது பொருந்தாது, அப்படியென ஒன்று இருந்தால்!

மூளையின் திறத்திற்குக் கட்டுப்பட்டு உலகமே அடங்கும். ஒரு பேச்சாளனுடைய மூளையின் இயக்கத்திற்கும் சொல்வன்மைக்கும் கட்டுப்பட்டு, மகுடிக்கு அடங்கும் நாகம்போல் பெருங்கூட்டமும் அடங்குவதைக் காணுகிருேம். அதேபோல இயந்திர மூளைகள் இன்னும் சில நாட்களுக்குப்பிறகு நம்மைக் கட்டுப்படுத்தும். அறிவியலின் முன்னேடும் பிள்ளைகளாக இயந்திர மூளைகள் பொலிகின்றன.

எப்பொருளையும் பகுத்துணரும் மனிதனின் மூளைபலம்தான் அவனை ஐயறிவுகளிலே இருந்து பிரித்துக்காட்டியது. இனிமேல் 'மூளைவளம்' இயந்திரத்திடமிருந்து கிடைக்கும்.

இயந்திர மூளைகள் சிறு அளவிலே இருந்து பெரிய அளவுவரை உள்ளன. கைக்குள் அடங்குகின்ற வகையும் உண்டு. பல அறைகளிலே அடங்கும் 'ராட்சத' வகையும் உண்டு. தற்போது, இயந்திர மூளைகளின் விலை 10 இலட்சம் ரூபாயிலிருந்து 70 இலட்சம் ரூபாய்வரை உண்டு. இன்னும் அதிகமும் ஆகலாம் செய்யும் 'தொழிலுக்கு ஏற்ப, போடும் கணக்கிற்கு ஏற்ப விலை இருக்கும்.

ஒரு காலத்தில் தொழில் புரட்சி ஏற்படுவதற்கு நீராவி காரணமாக இருந்தது; அதனைத் தொடர்ந்து மின்சார 'தேவதையின்' அருளால் ஒரு பெரிய மறுமலர்ச்சி விளைந்தது; இந்த நூற்ருண்டின் துவக்கத்தில் அணுவின் ஆற்றலால் பலசீர்மிகு பணிகளைச் செய்ய முடியும் என்பது புலனுகியது. அதன் விளைவாக தொழில் துறையில் அணுப் புரட்சி அரும்பி மணம் வீசியது. தற்போது மின்னணுக்களின் உதவியால் இயங்கும் இயந்திா மூளைகளால் மலர இருக்கும் ஒரு பெரும் புரட்சியை தொழில் உலகம் சந்திக்கின்ற காலம் மிக அண்மையில் வந்துவிட்டது.

நமது கைகளிலே பத்து விரல்கள் இருக்கின்றன. கால்களிலே பத்து விரல்கள் இருக்கிறன. ஆகவே நமது கணக்கு பத்து, நூறு, ஆயிரம், இலட்சம், கோடி என்று பத்தின் அடிப்படையிலே உள்ளது. பத்து விரல்கள் இல்லாமல் எட்டு விரல்கள்தான் இருந்தால் நமது கணக்கு எப்படி இருக்கும்? எட்டு, பதினாறு, முப்பத்து இரண்டு, அறுபத்து நான்கு என்றுதானே இருக்கும்; எட்டின் அடிப்படையிலே தானே இருக்கும். அதேபோல உலகில் இரண்டே இரண்டு எண்கள் மட்டும் இருந்தால் கணக்கு எப்படி இருக்கும்? எல்லாம் இரண்டின் அடிப்படையிலே தானே இருக்கும். ஒன்று, பூஜ்யம் ஆகியன தான் அந்த இரண்டு எண்கள். இந்த இரண்டு எண்களின் அடிப்படையிலேதான் இயந்திர மூளைகள் வேலை செய்கின்றன. பத்தடுக்கு முறை நமக்குப் பழகிப்போனது; அதற்குப் பதிலாக இரண்டடுக்கு முறையிலே நாம் பழகி இருந்தால்? நினைக்கவேவியப்பாகஇருக்கிறதா? ஆம். இரண்டடுக்கு முறைதான் இயந்திர மூளையின் ஆணிவேர். மின் குமிழை தட்டுகிறோம் விளக்கு எரிகின்றது; பித்தானை மேல்நோக்கித் தள்ளுகிறோம். விளக்கு அணைகின்றது விளக்கு எரிவதினை ஒன்று என்று கொள்வோம். விளக்கு அணைவதினை 'பூஜ்யம்' என்று கொள்வோம். ஒன்று, பூஜ்யம் என்ற இரண்டு எண்களை வைத்துக்கொண்டுதான் 'இயந்திர மூளை' கணக்கிடுகின்றது.

இரந்திர மூளைகள் விரைவாகச் செயலாற்றும் திறமை கொண்டவை. ஒளி ஒரு வினாடிக்கு 1,86,300 மைல் செல்லுகின்றது ஒளியின் வேகம் கொண்டவை இயந்திர மூளைகள் எனலாம். ஒரே நேரத்தில் எட்டு வேலைகளைச் செய்யும் 'அட்டாவதானி'போல இயந்திர மூளைகள் பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்யவல்லவை. ஒரே சமயத்தில் எழுத, படிக்க, கணக்கிட முடியும் இயந்திர மூளைகளால். கண்ணிமைக்கும் நேரத்தில் (ஒரு வினாடியில்) 40000 கணக்குகளைப் போட வல்லவை. நினைவு ஆற்றலில் நிகரற்ற திறன் பெற்றவை.

இயந்திர மூளைகள் மிகவும் கடினமான வேலையைக்கூட வெகு எளிதில் செய்து முடித்து விடக்கூடியவை. ஒரு தனி மனிதன் பல மாதங்கள் செய்யவேண்டிய வேலையை ஒரு இயந்திர மூளை ஒரு நொடியில் செய்துவிடும். பல மனிதர்கள் சில வாரங்கள் செய்யவேண்டிய வேலையை ஒரு இயந்திரம் சில நொடிகளில் செய்து முடித்து விடும்.

25000 பேர் செய்யக்கூடிய வேலையைச் செய்ய ஒரே ஒரு இயந்திர மூளை போதும். மனிதன் தவறுவது இயற்கை. ஆனால் இயந்திர மூளை தவறு செய்யாது, ஒருபோதும்.

இயந்திர மூளை என்பது நூற்றுக்கணக்கான மின்சாதனங்களும், மைல்கணக்கில் மின்கம்பிச் சுருள்களும்கொண்டது. ஒரு பக்கத்தில் புள்ளி விவரங்கள் தர வேண்டும். அவற்றை காந்த நாடா பதிவு செய்துகொள்ளும். அதனை ஒட்டி எழுகின்ற பிரச்சினைகளுக்கு ஒரு பக்கத்தில் விடைகள் கிடைக்கும்.

வானவெளியில் ஏவுகணைகளை ஏவும்போது மிகத்துல்லியமாகக் கணக்கிடவேண்டும். சிறு தவறு நேர்ந்தால்கூடப் பெரிய அளவிற்கு அது பாதிக்கப்பட்டுவிடும். உடனுக்குடன் கண்டு பிடித்து திருத்த இயந்திர மூளைகள் பயன் படுகின்றன.

மொழிபெயர்ப்புத்துறையில் இயந்திர மூளைகள் மிகவும் பயன் படுகின்றன. ஒரேபோது பத்துக்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்க உதவுகின்றன. மிகக்கடினமான விஞ்ஞான உண்மைகளைக்கூட திறமையோடு அருமையாக மொழிபெயர்க்கும் ஆற்றல் கொண்டவையாக விளங்குகின்றன.

வணிகத்துறையில் பங்குமார்க்கெட் பிரச்சினைகளை மிக எளிதில் தீர்த்து வைக்கின்றன, காலநிலை, வெப்பதட்பம் முதலியவற்றை எளிதில் கணித்தறிய உதவுகின்றன.

அச்சுத்துறையில் ஒரு இயந்திர மூளை அசுர வேகத்தில் வேலை செய்ய வல்லது. கைப்பிரிதியிலே இருந்து படித்து, திருத்தி ஒரு நாவலினை ஏறத்தாழ இரண்டு நிமிடத்தில் அடித்துத்தந்து விட்டதாம்.

அஞ்சலகத்துறையில் கடிதங்களைப் பிரிக்கவும், பல ஊர்களுக்கு என்று தனித் தனியே அனுப்பவும் இயந்திர மூளைகளைப் பயன்படுத்த பழக்கப்படுத்திபுள்ளனர்.

போக்குவரத்துத்துறையில் ஒரே சமயத்தில் பல ஊர்களுக்கான பயணச்சீட்டுக்களைக் கணக்கிடவும், கட்டணத்தை அறியவும், இயந்திர மூளைகள் பயன்படுகின்றன.

ராணுவத்துறையில் பகை நாட்டு விமானத்தின் பறக்கும் ஒலியிலே இருந்து எத்தனை மைல் வேகத்தில் எதிரி விமானம் செல்லுகின்றது; எப்படி வீழ்த்துவது என்று உணரலாம்.

மருத்துவத்துறையில் மருத்துவரே இல்லாமல் அறுவை சிகிச்சை செய்ய இயந்திர மூளையினைப் பயன்படுத்த முடியுமாம். மருந்துகளுக்குப் பெயர்சூட்ட இயந்திர மூளை பயன்படுகிறது.

தொழில்துறையில் எவ்வளவு மூலப்பொருளுக்கு எத்தனை முடிக்கப்பட்ட பொருட்கள் செய்ய முடியும்; என்ன விலைக்கு விற்ருல் எத்தனை இலாபம் கிடைக்கும் என்பனவற்றை முன் கூட்டியே அறிந்து ஒரு தொழிலில் ஈடுபட இயந்திர மூளைகள் உதவுகின்றன.

உழவுத்துறையில் முன்னேற, எத்தனை ஏக்கர் நிலத்திற்கு எவ்வளவு உரமிட்டால் அதிகப்படியான விளைச்சலைப் பெறலாம் என்பன போன்ற பிரச்சினைகளை எளிதில் தீர்க்க வல்லது இயந்திர மூளை

பொழுதுபோக்குத்துறையில், இசையினை 'உருவாக்கவும்' சதுரங்கம் ஆடவும், போட்டிகளில் நீதிபதி ஆகவும் விளங்க வல்லவை இயந்திர மூளைகள்.

சமூகத்துறையில் கல்யாணத் 'தரகர்'களாகவும் 'புரோகிதர்களாகவும்' விளங்கக்கூடியவை அவை.

இயந்திர மூளைகள் ஏராளமான நன்மைகளை தன்னுள் அடக்கிய போதிலும் தொழிற் புரட்சிக்கு தூண்டுகோலாக இருந்தபோதிலும் அவற்றைப் படைத்த 'பிரம்மா'வான மனித மூளைக்கு ஈடாக முடியுமா? ○



வீடுகளுக்கு வேண்டிய ஜன்னல்கள், கதவுகள்; தொழிற்சாலைகள் மற்றும் மில்களுக்கு வேண்டிய ட்ரஸ்கள் ஜன்னல்கள்; பெட்ரோல் லாரி டேங்குகள்; தண்ணீர் டேங்குகள் முதலியனவற்றைச் சிறந்த முறையில் செய்கிறோம். ஸ்டீல் சம்பந்தமான பெரிய காண்ட்ராக்ட் வேலைகளையும் ஏற்றுக் கொள்கிறோம்.

— விபரங்களுக்கு அணுகுக. —

நியூ சிட்டி
இஞ்சினீரிங் ஒர்க்ஸ்

172, பட்டேல் ரோடு,
கோயம்புத்தூர்-9.

ஆபீஸ் போன்: 4174.
ரெஸிடென்ஷியல்: 6033.

திருவாளர் ஜி. ஆர். தாமோதரனாரின் தமிழ்ப் பணி

"இறவாத தமிழ்நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்" என்ற கனவு நனவாகி வருகின்ற காலம். அறிஞர்கள் தம் அறிவுத்திறனை எழுத்து வடிவில் காண லாம். நூல் வடிவில் காண்பதரிது. காரணம் கையில் பொருளில்லை. பொருளி ருப்போர், கொடுத்துப் போற்றும் தன்மையும் குறைவு. பழங்கால மன்னர்கள், வள் ளல்கள் பாவலரைப் பாதுகாத்ததோடன்றி அவர்கள் பாக்களுக்குப் பசும் பொன் நூறுயிரம் கொடுத்துப் பாராட்டியதாக பைந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. இச் செயல் இன்று நமக்குக் கனவாகத் தோன்றுகிறது. கனவல்ல, நனவு நிலையிலும் காணலாம் என்று செய்த பெருமை திருவாளர் ஜி. ஆர். தாமோதரனுருக்கு உண்டு.

தமிழ் மொழிக்கு அவர் செய்துவரும் பணி அளவில் அடங்காதது. அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. திரு. தே. சுவாமிநாதன் அவர்களுக்குச் செய்த உதவி. திரு. தே. சுவாமிநாதன் நல்ல எழுத்தாளர். ஆயினும் வறுமை என்னும் செல்வம் அவருக்குப் பெரிதும் உள்ளது. "நெஞ்சே நீ அஞ்சாதே" என்ற புத்தகத்தை எழுத்து வடிவில் கொண்டுவந்து நூல்வடிவில் கொண்டுவர என்ன செய்வது என்று அஞ்சி யிருக்கும் வேளையில் திரு. ஜி. ஆர். தாமோதரனுர் 'நெஞ்சே நீ அஞ்சாதே' இதோ நானிருக்கிறேன் என்று அபயம் அளிப்பது போல், அன்னுர் எழுதிய புத்தகத்தை தம் சொந்த செலவில் நல்ல முறையில் நூல் வடிவில் ஆக்கி, அதற்குத் தக்க விளம்பரமும் கொடுத்து, தமிழன்னைக்குக் காணிக்கையாக ஆக்கிய பெருமை நற்றமிழோர் என்றும் மறவார்!



திரு. தே. சுவாமிநாதன் அவர்களால் எழுதிய "நெஞ்சே நீ அஞ்சாதே", என்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் கனம் N. S. S. மன்ருடியார் முதல் புத்தகத்தை தமிழ் காக்கும் பெரியார் திரு. ஜி. ஆர். தாமோதரனுர் அவர்களுக்கு அளிக்கின்றுர்.

நாச்சிமுத்து பாலிடெக்னிக் :

மந்திரி சி. எஸ். பெயரில் சொற்பொழிவு மண்டபம்



கோவை தொழிலதிபர் திரு. ஜி. டி. நாயுடு திறந்துவைத்தார்

பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக்கில் மத்திய உணவு மந்திரி திரு. சி. சுப்ரமணியம் பெயரில் ரூ. 1,33,000 செலவில் கட்டப்பட்டுள்ள சொற்பொழிவு மண்டபத்தை கோவை தொழில் அதிபர் திரு. ஜி. டி. நாயுடு திறந்து வைத்தார்.

அதுசமயம் திரு. ஜி. டி. நாயுடு பேசுகையில் இந்த மண்டபத்திற்கு மந்திரியின் பெயர் வைத்தது குறித்து சந்தோஷப்படுவதாகவும் மந்திரி திரு. சுப்ரமணியம் திறமை மிக்கவர் என்றும் விஷயம் தெரிந்தவர் என்றும், எதையும் யோசித்து செய்யக் கூடியவர் என்றும் அவருடைய பெயரை இந்த மண்டபத்திற்கு வைத்தது நல்லது என்றும் கூறினார்.

இந்த பாலிடெக்னிக் நன்றாக நடந்து வருகிறதென்றும் திரு. என். மகாலிங்கம் இதை திறம்பட நடத்திவருவதாகவும் பாராட்டினார்.

மாணவர்களுக்கு அறிவுரை கூறிய அவர் மாணவர்கள் அரசியலில் கலந்துகொள்ளக் கூடாது என்றும், தொழில் கல்வி பயிலும் மாணவர்கள் படிக்கும்போதே தொழில்களைக் கற்று, படிப்பு முடிந்து வெளியில் வந்ததும் விரைவில் உத்தியோகம் கிடைக்கக்கூடிய நிலைமையில் வெளிவர வேண்டுமென்றும் இதில் தொழில் பள்ளி ஆசிரியர்கள் விசேஷ கவனம் செலுத்த வேண்டு மென்றும் கேட்டுக்கொண்டார்.

நீச்சல் குளம் திறப்பு விழா

பாலிடெக்னிக்கில் மாணவர்கள் தந்த நன்கொடைகளைக் கொண்டு ரூ. 37,000 செலவில் கட்டப்பட்டிருந்த நீச்சல் குளத்தை கோவை பி. எஸ். ஜி. என்ஜினியரிங் கல்லூரி முதல்வர் திரு. ஜி. ஆர். தாமோதரன் திறந்துவைத்தார்.

மாணவர்களுடைய நன்கொடைகளைக் கொண்டே நீச்சல் குளம் கட்டியது இதுவே முதல்தடவை என்று கூறிய அவர், இதற்காக மாணவர்களையும் பெற்றோர்களையும் பாராட்டினார்.

இந்த விழாவுக்கு திரு. என். மகாலிங்கம் எம். எல். ஏ. தலைமை வகித்தார். திரு. ஜி. டி. நாயுடு, திரு. ஜி. ஆர். தாமோதரன் ஆகியோரின் திறமையைப் பாராட்டிப்பேசினார்.

நாச்சிமுத்து பாலிடெக்னிக் முன்னாள் முதல்வர் திரு. ஆர். எஸ். சுப்ரமணியம் அனைவரையும் வரவேற்றார்.

தற்போதைய முதல்வர் திரு. கே. ஆறுமுகம் அறிக்கை வாசித்தார்.

நாச்சிமுத்து டிரஸ்ட் கல்விக் காரியதரிசி திரு வெங்கடாசலக் கவுண்டர் விழாவை முன்னிட்டு வந்திருந்த வாழ்த்துச்செய்திகளை வாசித்ததுடன் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

மதிப்புரை

திருவாளர்
M. K. சாமி

மனித சமூக வளர்ச்சிபற்றிய வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருப்பது தொழில் உற்பத்திக் கருவிகள் தான் என்பதை நம்மில் எத்தனைபேர் புரிந்துகொண்டிருப்போமோ தெரியவில்லை! தொழில்கள் செவ்வையாகவும் முறையாகவும் இயங்கவில்லை என்றால் மனித சமூகத் தினசரி ஓட்டமே ஸ்தம்பித்து விடும். அப்படிப்பட்ட நிலையில்தான் பலருக்கும் நாட்டில் இயங்கும் தொழில்களைப் பற்றிய முக்யத்துவமே தெரியவருகிறது.

தொழில் என்பது - அது எவ்வகைத்தொழிலானாலும் சரி நமது அன்றாட வாழ்க்கை முறையின் நிர்ணயத்திற்கும், விஞ்ஞான பூர்வமான வளர்ச்சிக்கும் பெரிதும் துணை நிற்கிறது என்பது வெள்ளிடைமலை.

நமது அன்றாட வாழ்க்கையின் சுவை கூடக் கூட, தேவைகள் பெருகப், பெருக நம் சிந்தனையும் செய்திறனும் விஞ்ஞான அடிப்படையில் விரிவடைகிறது. அதன்காரணமாக புதிய உத்திகள் தொழில் உற்பத்திக் கருவிகளில் புகுத்தப்படுகிறது. இவ்வாறு வாழ்க்கையின் வாலாயமான ஓட்டத்தோடு தொழில்கள் ஈடுகொடுத்து அவை பல்கிப் பெருகியும், நம்மை - நம் சமூக வாழ்க்கையை நாகரிகமாக செழுமைப் படுத்தியும் வருகிறது.

நம் தேசத்தில் மூவகைத் தொழில்கள் - அதாவது குடிசைத் தொழில் என்றும், சிறு தொழில் என்றும், பெருந்தொழில் என்றும் இயங்கி நாட்டின் பொருளாதாரத்தை ஒரு வகைக் கலப்பு இனத் தேசியத் தொழில் பொருளாதாரமாக்கியுள்ளது. இம்முறையானது தேச வளர்ச்சியின் - தொழில்களில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றத்தின் - மைல் கல்லாக இருக்கிறதெனினும், இவை மேலும் விஞ்ஞான அடிப்படையில் முறைப்படுத்தப்பட வேண்டியிருக்கிறது.

தொழில்கள் ஒன்றையொன்றை அழித்துக்கொள்ளக் கூடாது என்ற பழமையான வாதங்கள் நடைமுறையில் முறியடிக்கப்பட்டு வருவதிலிருந்தே அதனின் தொடர்பான வளர்ச்சியில் நாட்டுமக்கள் கொண்டுள்ள நல்ல அக்கரை வெளிப்படுவது தெரிகிறது.

இதைச் சீராக ஊக்குவித்து செயல்படுத்த மக்களின் கருத்தைத் திரட்டி தொழில் செய்வோர்களுக்கு அளிக்கவும், தொழில் செய்வோர்கள் மக்களின் மன ஓட்டத்தை - வேகத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படவும் ஒரு நல்ல பாலமாக இருக்க முற்றிலும் தகுதிவாய்ந்தது பத்திரிகைகள்தாம். அவ்வகையில் எல்லா பத்திரிகைகளாலும் செயல்பட முடியாது! அதற்கென்றே சில பத்திரிகைகள் தோன்றி செயல்படுவது நல்லது.

தொழில் அரங்கு எனும்பெயரால் கோவையில் இருந்து புதிதாக முகிழ்த்துள்ள மாத இதழானது நாம் மேலே சொல்லியுள்ள கருத்துக்கேற்பட செயல்படும் என்ற நம்பிக்கையை அதன் முதல் இதழே நிரூபிக்கும்படியாக இருப்பதைப் பார்க்கிறோம்.

தொழில் அரங்கு தமிழகத்தின் தொழில் தலைநகரான கோவையிலிருந்து வெளிவருவதன் மூலம் தனிச் சிறப்புப் பெற்றிருக்கிறதென்றாலும், தமிழ் நாட்டிற்கும் குறிப்பாக தேசம் பூராவுக்குமான தொழில் கருத்து அரங்காக அது நாளும் மலர வேண்டுமென்பதே நம் அவாவாகும். இவ்வவாவை நிச்சயம் தமிழகத் தொழில் அதிபர்களும், பொதுமக்களும் நிறைவேற்றுவார்கள் என்று நாம் நம்பலாம். *

டாக்டர் பட்டம்

ஐரோப்பியர்கள்
தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும்
செய்தவை என்ன?

பேராசிரியர்
K. மீனுட்சிசுந்தரம்
M A., M. Lit., Ph. D.,

பட்டங்களுள் மிகச்சிறப்பான பட்டந்தான் டாக்டர் பட்டம். டாக்டர் பட்டம் பெற்ற ஒருவரைத்தான் பெரும்பாலும் பேரறிஞர்கள் என்று போற்றுகின்ருேம். டாக்டர் பட்டம் பெறுபவர்கள் புதுமையான வற்றைக் கண்டறிந்து வெளிடவேண்டும். விஞ்ஞானிகள் புதுமை விளைவினைத் தம் கண்டுபிடிப்பில் காண்பார்கள். மொழி வல்லவர்கள் பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைப்பார்கள். அன்று பழமையில் மறைந்திருப்பதும், புதுமையோடு பொருந்துவதும், பழமையில் பெருமையும், நுண்மையும் கண்டுவெளியிடுவர்.

ஆனல் திருவாளர் கா. மீனுட்சி சுந்தரம் அவர்கள் டாக்டர் பெறுவதற்கு எடுத்துக் கொண்ட பொருள் தமிழர்களின் உயர்வுக்குப் பாலம் அமைக்கிறது. அன்றியும் தமிழர்கள் கண்டறியாத உண்மைகளையெல்லாம் காணச் செய்கிறது. அண்டி வாழ வந்தவர்கள், நம்மை அடிமைப் படுத்தியவர்கள், அன்னிய மொழி யென்றும் பாராமல், ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் தமிழ் மணம் கமழச் செய்தார்கள்; தமிழ் மொழியின் அருமையினை கடல் கடந்தும் பரப்பினர்கள். மெல்ல தமிழினிச்சாவும், மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும் என்றிருந்த நிலையில், மெல்ல தமிழ் இனிச்சாவா, மேற்குமொழியினும் மேலாம், அன்றி புவியில் உலவும் மொழியினும் உயர்வாம், உலகம் போற்றிடும் உன்னத நிலையாம் கன்னித் தமிழ் ஒன்றே என ஐரோப்பியர்களின் கரங்கள் எழுதி தமிழைப் பரப்பியதென்ருல், நாம் வியப்பு மட்டும்கொள்வதற்கு இல்லை, வெட்கமும் கொள்வதற்கு இடமுண்டு.

ஐரோப்பியர்கள் தமிழுக்குச் செய்த தொண்டினை பரவலாக அறிந்தோமே ஒழிய ஆழ்ந்து அறிய இயலவில்லை. திரு. கா. மீனுட்சி சுந்தரம் அவர்கள் அதனை ஆழ்ந்து அறியவும் செய்தார். "ஐரோப்பியர்கள் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் வழங்கியவை என்ன? என்ற தலைப்பில், ஐரோப்பியர்கள் தமிழகத்தில் கால் வைத்த நாள் முதல் (16-ம் நூற்றுண்டு) 20-ம் நூற்றுண்டின் தொடக்கம் வரை தமிழ் மொழிக்கு அவர்கள் செய்துவந்த செயல் பற்றி நன்கு ஆராய்ந்துள்ளார். "குணம் நாடி குற்றம் நாடு அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, ஐரோப்பியர்களால் தமிழ் மொழிக்கு நிகழ்ந்த தீங்கினையும், நன்மையினையும் நடு நிலையிலிருந்து ஆராய்ந்து அவற்றுள் மிகுதி இதுவென தெளிவாகக் கூறியுள்ளார்.

அவர் தமது ஆராய்ச்சிக்குக் கருவி நூலளவோடு நின்று விடவில்லை. ஐரோப்பியர்கள்

தமிழகத்தில் எங்கெல்லாம் சென்று தமிழுக்கு ஆவன செய்தார்களோ, அங்கெல்லாம் தாம் நேராக சென்றதோடன்றி, புகைப்படக்காரரையும் உடனழைத்துச் சென்று, புகைப்படத்தோடு புதிய செய்திகளையும் துருவி, ஆராய்ந்து வந்தார்.

இவருடைய ஆராய்ச்சியில் ஐரோப்பியர் வெளியிடாத செய்திகளையும், இதுவரையிலும் வராத செய்திகளையும் அறியும்படி செய்துள்ளார். மேற்கோளாக மருத்துவத் துறையில் தமிழில் நூலில்லை. சொல்லும் திறமை தமிழ் மொழிக்கு இல்லையென்று சொல்கின்றவரின் கூற்றுப் பொய்க் கூற்று என்பதை இவருடைய ஆராய்வால் தெரிய வருகிறது. 19-ம் நூற்றுண்டில் வாழ்ந்த டாக்டர் கிரீன் என்பவர், அறுவை சிகிச்சை பற்றி ஆயிரம் பக்கம் அளவில் நல்ல தமிழில் எழுதியுள்ளார். எழுத்தளவோடல்லாமல், உடலில் உள்ள பல உறுப்புகள் பற்றிய படங்களும் போட்டு, அவ்வுறுப்புகளுக்கெல்லாம் தமிழ்ப் பெயரும் கொடுத்துள்ளாரென்றுல் அவருடைய தமிழறிவை நாம் என்னென்று சொல்வது! தமிழகத்திலே பிறந்து, தாய் மொழியாக தமிழைப் பெற்று, தமிழன் என்று சொல்லிக் கொள்கின்ற நாம் "தமிழால் முடியுமா!" என்ற வினவோடு நின்றுவிடுகிறோம்.

இத்தகைய செய்திகளை யெல்லாம் திரு.கா. மீனுட்சிசுந்தரம் அவர்கள் தம்முடைய ஆராய்வில் வெளியிட்டுள்ளார். சுருங்கக் கூறின் அவர் பதவிக்கோ, பட்டத்துக்கோ இந்த ஆராய்வை செய்ததாகத் தெரியவில்லை. தமிழுக்குச் செய்யும் உண்மையான தொண்டு என கருதி தமிழர்கள் பெருமை கொள்ளும்படியான செயலைச் செய்துள்ளார். இந்நூல் வெளியிட சென்னை பல்கலைக் கழகத்தார் அனுமதி கொடுத்து, நூல் வெளிவருமாயின் ஐரோப்பிய நாடுகளன்றி மற்ற பிற அன்னிய நாடுகளெல்லாம் தமிழின் உயர்வினை அறிவதோடன்றி, தம்மாலாவன, செய்வது இதுவென அறிந்து செய்ய முற்படுவார்கள்.

"திறமான புலமையெனில், வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்"

என்ற பாரதி கண்ட கனவு நனவாகும்.

திருவாளர் கா. மீனுட்சிசுந்தரம் அவர்கள் கோவைக்கு அருகிலுள்ள வெள்ளக்கிணறு என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தவர். திருமகள் உள்ள இடத்தில், கலைமகளுக்கு இடமில்லை என்பர். தெளிவாகக் கூறின் பொருள் உள்ள இடத்தில் புலமை இருக்காது என்பர். பொருளும் புலமையும் இருக்குமாயின் பொன்மலர் நறுமணம் உடையது போன்றதாம் என்பர் பெரியோர். பெரியோர் வாக்கு பொய்க்காது என்பதற்கு திரு கா. மீனுட்சிசுந்தரம் அவர்கள் எடுத்துக்காட்டாக உள்ளார். "ஞானமணி பண்ணை" என்றுல் கோவை வட்டம் நன்கறியும் அத்தகைய பெருமையும், செல்வமும் உள்ள குடும்பத்தில் பிறந்தவர் அவர். சென்னை பல்கலைக் கழகத்தில் B. A. பட்டம் பெற்ற பின், அண்ணுமலை பல்கலைக்கழகத்தில் M. A. வகுப்பில் சேர்ந்து, அப் பல்கலைக் கழகத்தில் முதல் வகுப்பில் முதல் மாணவராக தேர்ச்சிபெற்றுர்.

அப்பல்கலைக்கழகத்திலேயே சில ஆண்டு தமிழ்ப் பேராசிரியராக பணி புரிந்தார். அப்பொழுது "சுப்ரமணிய பாரதியாரின் செய்யுள்களின் தன்மை" இதுவென ஆராய்ந்து செய்த ஆராய்வுக்கு "அண்ணுமலை பல்கலைக் கழகம் அவருக்கு M. Lit. என்ற ஆராய்வு பட்டம் வழங்கி உள்ளது.

பின்னர் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக பல்லாண்டு பணிபுரிந்து, தற்பொழுது கோவையிலுள்ள அரசினர் கலைக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறுர். திருமகளும், கலைமகளும் ஒருங்கே இருப்பது, செல்வமும், கல்வியும் நன்கு பெற்ற திரு. கா. மீனுட்சிசுந்தரம் அவர்கள் தமிழுக்கு மேலும் நல்ல பணிபுரிவாரென்பது வெள்ளிடைமலையாகும்.

*

தொழில் வளர்ச்சிக்கு தொழில் அரங்கில் விளம்பரம் செய்வீர்.

விளம்பரக் கட்டணம்

அட்டை		ஒரு முறை	தொடர்ந்து
முன் பக்கம்	ரூ.	400	300
பின் பக்கம்	ரூ.	300	250
முன் உள் பக்கம்	ரூ.	250	200
பின் உள் பக்கம்	ரூ.	250	200
உள் பக்கம்			
முழு பக்கம்	ரூ.	200	150
அரை பக்கம்	ரூ.	100	75
கால் பக்கம்	ரூ.	50	40
$\frac{1}{3}$ பக்கம்	ரூ.	80	70
$\frac{1}{6}$ பக்கம்	ரூ.	50	35

ஒரு பக்கத்தின் அளவு 24 × 18 செ. மீ.
அச்சாகும் அளவு 20 × 15 செ. மீ.

தொடர்ந்து இதழில் விளம்பரம் செய்ய குறைந்தது 6 விளம்பரமாவது தருதல் வேண்டும்.

விளம்பரத்திற்குரிய டிசைன், பிளாக் செய்தல், போட்டோ எடுத்தல் இவற்றிற்குத் தனிக் கட்டணம்.

கலர் விளம்பரம் செய்ய விரும்பின், கூடுதலான கலர் ஒன்று, பக்கம் ஒன்றுக்கு ரூ. 200

பிளாக், ஸ்டீரியோ, மேட்ரிக்ஸ் இவைகளையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு:

ஆசிரியர்,

தொழில் அரங்கு

322, ராச வீதி, கோயம்புத்தூர்-1.
Phone to 4286.

நீங்கள் வியாபாரியா ?

அப்படியானல் உங்கள் நன்மையைக்கருதி யாவது **"தொழில் அரங்கை"** அவசியம் நீங்கள் தொடர்ந்து படிக்க வேண்டும். வியாபாரியை லாபகரமான வழியில் செலுத்துவதற்காகவே இந்த பத்திரிகை தோன்றியது. தொழிலில் முதலீடு செய்ய; தொழிலில் வரும் சிக்கலைப் போக்க; வாணிகம் வளர்ச்சி பெற; வாணிகத்திற்கு வழி செய்ய; உற்பத்திப் பொருள்கள் விற்பனையாக; தொழிலறிவைப் பெற தொடர்ந்து 'தொழில் அரங்கிற்கு' சந்தா தாரராக ஆகுங்கள்.

சந்தாதாரராக ஆக

தொழில் அரங்கு

322, ராச வீதி, கோயமுத்தூர்-1.

சந்தா விபரம்:

இந்தியா: ஆண்டொன்றுக்கு ரூ. 9/-
தபால் செலவு உள்பட

வெளிநாடு: ஆண்டொன்றுக்கு ரூ. 14/-
தபால் செலவு உள்பட

தனி இதழ் ஒன்றுக்கு 75 காசுகள்.

சந்தா தொகை அனுப்ப:

ஆசிரியர்

தொழில் அரங்கு

322, ராசவீதி, கோயம்புத்தூர்-1.

தொழில் அரங்கு

நலம்பெற

விளம்பரம்!

மனிதனுக்கு உணவு இன்றியமையாதது போன்று, பத்திரிகைகளுக்கு விளம்பரம் இன்றியமையாதது. விளம்பரத்தை அளித்துப் பத்திரிகைகளை வாழவைக்கும் வணிக பெருமக்களின் நன்றியினை பத்திரிகை உலகம் என்றுமே மறக்க இயலாது. பொதுமக்களின் பொழுது போக்குக்கு வெளி வரும் இதழ்கள், மக்களின் வாங்கும் சக்தியை நன்கு பெற்று, வாணிக பெரு மக்களின் ஆதரவையும் மிகுதியாகப் பெற்று வளம்பெற்று வாழ்ந்து வரு கின்றன. ஆனல் ஒரு துறை மக்களுக்கு மட்டும் பயன்படும் இதழ்கள்,வாணிக பெருமக்கள் கொடுக்கும் விளம்பரங்களினல்தான் வாழ இயலும். அதனல் தொழில் அதிபர்கள், உழைப்பாளர்கள் உதவியினல், தொழிலியல் இதழ் கள், பல்லாண்டு வாழ்ந்து பயனளிக்கும் பழுமரம்போல் வளர்ச்சியடைந்து சிறப்புற விளங்க முடியும். அதனல் தொழில் நிறுவனத்தார், தொழில் செய் வோர் இருவரின் ஒத்துழைப்பு ‘தொழில் அரங்குக்கு" வேண்டுமென வேண்டுகிறேன்.

எனது வேண்டுகோளுக்கு இணங்கி இத்தொழில் அரங்கு வளர வேண்டுமென்ற பெரு நோக்கத்தோடு இவ்விதழுக்கும், இனி வரப்போகும் இதழ்களுக்கும், விளம்பரங்கள் தொடர்ந்து இடம்பெறும்படியாகக் கொடுத்தும், கொடுப்பதற்கு இசைந்துமுள்ள தொழில் நிறுவனத்தார்க்கு எனது மனப்பூர்வமான நன்றியினைச் செலுத்துகிறேன்.

வித்துவான் க. பெரியசாமி,
ஆசிரியர்.

இவ்விதழ் கோயமுத்தூர், ராச வீதி, 322-ஆம் எண் கட்டிடத்தில் திருவேங்கடம் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் வித்துவான் க. பெரியசாமி, 322, ராச வீதி, கோயமுத்தூர்-1.
Editor & Publisher: VIDWAN K. PERIASAMI